உ

கடவுள் துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

பெரிய எழுத்து

புலந்திரன் களவுமாலை.

வித்தியா ரத்நாகரம் பிரஸ்,

சென்னை.

இதன் விலை] 1937. [அணா-6.

உ

கடவுள் துணை.

புலந்திரன் களவுமாலை.

விநாயகர் துதி.

அத்திமுகத்தோனே அரனார்திருமகனே
சத்திக்கணபதியே சங்கரனார்திருமகனே
பானைவயிற்றோனே பழமேந்துங்கையோனே
ஆனைமுகத்தோனே ஐங்கரனேமுன்னடவாய்
வேலவர்க்குமுன்பிறந்த வித்தைகளஞ்சியமே
மூலமுதலே முன்னடக்கவேண்டுமையா

சரஸ்வதி துணை.

நாவிற்சரஸ்வதியே நான்முகனார்தேவியரே
சதுர்முகனார்தேவியரே தாயேசரஸ்வதியே
வாக்குவரமருள்வாய் மறையவனார்தேவியரே
நாவுதவறாமல் நற்கருத்தைத்தாருமம்மா
இந்தக்கதைதனக்கு இனிகருத்தைத்தாருமம்மா
பூவிலமர்ந்தவொரு பொற்கொடியே நான்சரணம்
சரணமென்றடிபணிந்தேன் தற்காக்கவேண்டுமம்மா
தப்புகளுண்டாயின் தாயேயருள்புரிவாய்
குற்றமிருந்தாலும் கொண்டணைக்கவேண்டுமம்மா
புலந்திரனார்கதையுரைக்க புத்திமிகவருளும்

பாண்டியன் பெருமை.

பட்டணமாம்பட்டணமாம் மதுராபுரிபட்டணமாம்
பட்டணத்தையாளுகிற பாண்டியராசாக்கள்
மதுரைப்பதிதனிலே மன்னவர்கள்ராசாக்கள்
நீதிமனுமுறைகள் நெறிதவராப்பாண்டியர்கள்
ஆறிலொருகடமை அரசர்கள்வாங்குவது
சொக்கர்வலுமையுண்டு துரைராசர்பாண்டியற்கு
மீனாட்சிவலுமையினால் மேன்மையுடனாண்டிருந்தார்
சக்கரநெறிப்படியே தரணிதனையாண்டிருந்தார்

அல்லியரசானி வுற்பத்தி.

இப்படியாகவே யிருக்கின்றநாளையிலே
ஆறுயிரவர்களும் அணிதிரளாம்பாண்டியர்கள்

பிள்ளையைவேண்டியே பெருந்தவசுதானிருந்தார்
மைந்தனைவேண்டியே மகாதவசுதானிருந்தார்
சோலைமலருடைய சொக்கரைநோக்கியேதான்
கால்கள் நடுங்கத்தான் கடுந்தவசுதானிருந்தார்
சங்கராருமப்போ தயவாய்மனமிரங்கி
அங்கயற்கண்மீனாட்சி அவளுமிரங்கியேதான்
சந்திரர்கள்சூரியர்கள் சந்திபண்ணும்பொய்கையிலே
செவ்வலரிப்பூவிலே செல்வம்பிறந்ததுகாண்
அல்லிமலரிலே அவதரித்தாள்பெண்பெருமாள்
குழந்தையைப்பார்க்கவே கொற்றவர்கள்ராசாக்கள்
கண்டுமனமகிழ்ந்தார் காவலர்கள்ராசாக்கள்
பார்த்துமகிழ்ந்திருந்தார் பாண்டியராசாக்கள்
கண்டெடுத்துக்கொண்டுவந்தார் காவலர்கள்ராசாக்கள்
வைத்துவளர்த்தெடுத்து வரிசையுள்ளபெண்கொடிக்கு
அல்லியரசானியென்று அரசியற்குப்பேருமிட்டு
நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய்
வைத்துவளர்த்தார்கள் வண்டார்கருங்குழலை

அல்லியரசானி பராக்கிரமம்.

ஏழுவயதாச்சு இளங்கொடியாள் நாயகிக்கு
பாதி அரசு பகுந்தாண்ட நீள்முகனை
முடிகிவந்தநீள்முகனை முந்திமயிர்பிடித்து
குடலைப்பிடுங்கியேதான் கொம்பனையும்மாலையிட்டு
பெண்ணரசுபட்டங்கட்டி பெருமையுடன்வாழ்ந்திருந்தாள்
ஆண்காற்றடித்தாலே அதம்பண்ணிப்போட்டிடுவாள்
கண்டவரைக்குத்தியே கழுவிலேஏற்றிடுவாள்
எண்ணவொண்ணுச்சேனையுடன் எடுத்தாளேமந்திரவாள்
மந்திரவாளெடுத்து மதயானைபோலெழுந்து
எதிர்க்கத்தான்கண்டவரை யெண்ணியேபாராமல்
கண்டமுனிராட்சதரைக் கண்டதுண்டமாக்கிடுவாள்
வடமதுரைநாடு வடதேசபட்டணமும்
ஈழகலிங்கதேசம் இடமுள்ளபட்டணமும்
முத்துகப்பலாயிரமாம் மிளகுகப்பலாயிரமாம்
பாக்குபடுந்துறையும் பாண்டிவளநாடும்
இத்தனை நாடுகளும் இடமுள்ளராச்சியமும்
பட்டமுங்கட்டியிவள் பாருலகையாண்டிருந்தாள்

பத்துவயதாச்சு பைங்கொடியல்லியற்கு
வளர்ந்துசமைந்தாள்காண் மாதுருதுவானள்

ஸ்ரீகிருஷ்ணர் அல்லியை அருச்சுனற்கு
பாரியாகநினைத்தது.

ஏழுலகையாண்டதொரு எம்பெருமாள்தான்பார்த்து
அல்லிமலரி லவதரித்தபெண்பெருமாள்
அழகில்மிகுந்ததொரு அல்லியரசானியரை
தக்கப்புகழுடைய தருமராதுதம்பியரை
காண்டாவனமெரித்த காளையந்தவருச்சுனற்கு
ஆணுலழகருக்கும் அல்லியரசானியர்க்கும்
இவர்களழகுக்கும் ஏற்குங்காண்வையகத்தில்
என்றுசொல்லிமாயவனுர் இயலாகத்தானினைந்து
சோலைமலருடைய சொக்கருமாயவரும்
அருளால்மிகுந்ததொரு அங்கயற்கண்ணுயகியும்
தேவாதிதேவருடன் தென்மதுரைவந்துநின்று
அடங்கலுந்தானழைத்து ஆருயிரவருமாய்
பெண்கேட்கவந்தோங்காண் பேருலகில்ராசாவே
பெண்ணுய்ப்பிறந்தாலும் பிழையில்லாப்பெண்பெருமாள்
நீன்முகனைக்கொன்று நீலிபட்டமாண்டவள்காண்
கூடியவர்தானினைத்து கொம்பனையைச்சொல்லுகைக்கு
மதுரைப்பதியாளும் மன்னவர்கள்பாண்டியரே
மணக்கோலம்வந்தோங்காண் பேருலகில்ராசாவே
என்றுயிவருரைக்க இராசமன்னரேதுசொல்வார்
ஆருயிரவர்களும் ஐயன்மாரேதுசொல்வார்
மந்திரவாளோடே மயிலனையாள்தான்பிறந்தாள்
கண்டவரைக்கொன்று கழுவிலேயேற்றிவைப்பாள்
அண்டமாம்பெருநீலி ஆர்சொல்லுங்கேளாளே
அவளுக்குஏற்றவர்தா னருச்சுனரேயாகுமென்றுர்
ஆண்காற்றடித்தால் அதம்பண்ணிபோட்டிடுவாள்
உங்களாலானபடி உத்தமரேபாருமென்றுர்

அருச்சுனன் பாம்பாகவும் பெருமாள்
பிடாரனுகவும் வருதல்.

ஏழுலகையாண்ட யெம்பெருமாள்தான்கேட்டு
என்னலேயாகுமென்று எழுந்திருந்தாரெம்பெருமாள்
காண்டவனமெரித்த காளையென் னுமருச்சுனரை

ஐந்துதலைநாகம்போல் அடைவாய்வடிவாகி
மண்ணுளிம்பாம்பு வகையானசர்ப்பமுடன்
புண்ணியமூர்த்தி பிடாரனைப்போல்வேடங்கொண்டு
வேஷவுருவெடுத்து வேறேயுருமாறி
அரசாளும்நாயகியாள் அல்லியிடபட்டணத்தில்
தண்ணீர்குளத்தருகே தார்வேந்தர்வந்துநின்று
பொற்பாம்பதனைவிட்டு பெருமாளும் ஆட்டிவைத்தார்
ஆயக்குழலூதி ஆயனுமாட்டிவைத்தார்
பாடாதசிந்துகவி பாடினார்மாயவரும்
அரசாளும்நாயகியாள் அல்லியிடதாதியர்கள்
பூங்காவனத்தில் பொய்கையருகாக
மாயன்பெருமாளும் மகாமயக்கந்தான்செய்து
மகடிக்குழலூதி மன்னவருமாட்டிவைத்தார்
ஆட்டினார்நாகமும் ஆடுதுகாணந்நேரம்
பாட்டுக்கிசைவாகப் பாம்புகளாடுதுகாண்
தண்ணீர்குடமெடுத்துத் தண்ணீர்க்குவந்தவர்கள்
பாம்பாடும்பாவனையை பைங்கிளிமார்தான்பார்த்து
அரசாளும்நாயகியாள் அல்லியரைத்தெண்டனிட்டு
நமது-மதுரைவளநாட்டில் வந்ததேநற்பாம்பு
தண்ணீர்குளத்திலே தார்குழலேயாடுதென்றார்
பாம்பாடும்பாவனையைப் பட்டணத்திற்கண்டதில்லை
அந்தஅழகும் அதிசயமுங்கண்டறியோம்
என்றுஅவளுரைக்க யேந்திழையுந்தான்கேட்டு
அப்படிப்பட்டதொரு அழகுள்ளநற்பாம்பை
இங்கேயழையுமென்றாள் ஏந்திழையாளல்லியரும்
அப்படியேயோடி அழைத்துவந்துவிட்டார்கள்
பாம்பைதிறந்துவிட்டார் பார்வேந்தர்மாயவரும்
மகடிக்குழலூதி மாயவனாராடிநின்றார்
பாம்பாடும்பாவனையைப் பட்டணத்தில்கண்டதில்லை
மன்னவன்மேற்சிந்தையுமாய் மயங்கினாள்மங்கையரும்
மாயவனைத்தான்பார்த்து மயிலனையாளல்லியம்மாள்
பாம்பையனுப்புமென்றாள் பைங்கொடியுந்தன்னருகே
அப்படியேநற்பாம்பு அவளருகேவந்ததுகாண்
பாம்புமடியேறப் பைங்கிளியும்பார்த்திருந்தாள்
முன்னழகும்பின்னழகும் முதுகில்மச்சரேகைகளும்

அரசாளும்நாயகியாள் அல்லியருந்தான்பார்த்தாள்
காண்டாவனமெரித்த காளையருச்சுனரும்
சொக்குபொடிபோட்டார் தேன்மொழியாளல்லியற்கு
மா துசௌரியம்போய் மயங்கினளருச்சுனன்மேல்
மயங்கியெழுந்திருந்து மாயவரைத்தான்பார்த்து
பாம்பையடையுமென்றாள் பைங்கொடியாளல்லியரும்
அந்தப்பிடாரன் அடைவாகப்போனபின்பு
அரசாளும்நாயகியாள் அல்லியருந்தான்பார்த்து
ஆருயிரவரென்னும் அணிதிரளாம்பாண்டியர்கள்
தந்தையார்சீர்பாதந் தையலடிபணிந்து
தக்கப்புகழுடைய தருமரிடதம்பியரை
காண்டாவனமெரித்த காளையென்னுமருச்சுனரை
இந்தட்சணமே யியலாயமையுங்கள்
கலியாணங்கூட்டுமென்றாள் காரிமையாளல்லியரும்
ஆருயிரவர்க ளணிதிரளாம்பாண்டியர்கள்
வற்றிக்கிடந்த வருள்பெரியகாவேரி
முட்டப்பெருகியே கரைபுரண்டுவந்தாற்போல்
திரேகங்குளிர்ந்தாரே யிருதோளும்பூரித்து
தக்கப்புகழுடைய தருமர்தனஞ்செயற்கு
எழுதினர்பாண்டியர்கள் யின்பமாயோலைதன்னை
காண்டாவனமெரித்த காளையந்தஅருச்சுனர்க்கு
அரசாளும்நாயகியாள் அல்லிமலர்நாயகிக்கு
சித்திரைமாதத்திலே சீர்பத்தாந்தேதியிலே
சுக்கிரவாரமது தசமிபுனர்பூசம்
அன்றையவேளையிலே அருச்சுனற்குமல்லியற்கும்
கலியாணம்கலியாணம் காரிமைக்குகலியாணம்
கலியாணமென்றுசொல்லி கனமாகவோலையப்போ
இட்டமுகூர்த்தமென்று எழுதினரோலையிலே
ஓலைகண்ட நாழிகைக்கு உத்தமரேவாருமென்றார்

கலியாணம்.

என்றிருக்குமோலைதன்னை யிராசாக்கள்தான்பார்த்து
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அனைவோருந்தான்பார்த்து
தக்கப்புகழுடைய தருமாவரே துசொல்வார்
இதுநல்லகாரியங்கள் என்றுமனதிலெண்ணி
சரியொத்தசம்பந்தம் ஆமென்றுதார்வேந்தர்

மதுராபுரிதனக்கு மன்னவர்கள்பயணமானார்
திரௌபதைநாககன்னி சுபத்திரையும்பயணமானார்
மந்தாரக்குந்தியம்மாள் மாதாவும்பயணமானார்
வந்துயிறங்கினார் மதுரைப்பதிதனிலே
ஆனார்திருவுளத்தால் அருச்சுனர்க்குமல்லியற்கும்
செய்யுஞ்சடங்குவகை செய்தார்கள்வேதியர்கள்
மங்கிலியந்தானெடுத்து வாள்விசயன்தான்தரித்தான்
மாதுகழுத்திலே மங்கிலியஞ்சாத்தினபின்
கூடியிருந்தார்கள் குங்குமக்கட்டிலிலே
அருச்சுனருமல்லியரும் அமர்ந்திருந்தாரன்னேரம்

புலந்திரனுற்பத்தி.

இப்படியாகவேதான் அநேகநாட்சென்றபின்பு
பாலகனுண்டானான் பைங்கொடியாளல்லியற்கு
பத்துமாதமுஞ்சென்று பாலகனைப்பெற்றெடுத்தாள்
பெற்றாள்புலந்திரனை பேருமிட்டாளல்லியரும்
வளர்த்தாள்புலந்திரனை வைத்திருந்தாளல்லியரும்

புலந்திரனுக்குக் கலியாணம்.

ஐந்துபிராயமது அடைவாய்வளர்ந்தபின்பு
தேசத்தழகுமன்னன் திரியோதிரன்தங்கை
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாள்தன்மகளை
அந்த-காரிழையாள்மாது கலந்தாரிநாயகத்தை
போரஞ்சாமன்னர் புலந்திரவீரியற்கு
கலியாணம்பண்ணவே காரிழையாளல்லியரும்
சரியொத்தசம்பந்தம் தார்குழலாள்வேண்டுமென்று
வேண்டுமென்றுசொல்லி விரும்பியேமங்கையரும்
ஐவரும்நூற்றுவரும் அப்பவேகூடியொன்றாய்
கூடிமணஞ்செய்தார்கள் குமாரன்புலந்திரற்கு
கலியாணஞ்செய்துமே கடுகிமுடிந்தபின்பு
இப்படியாகவே அநேகநாள்சென்றபின்பு
தேசத்தழகுமன்னன் திரியோதரப்பெருமான்
பருவமதயானை பஞ்சவர்களைவரையும்
உருவமதயானை உத்தமர்களைவரையும்
வலியவேதானழைத்து மாயத்தால்சூதாடி
பாரவனவாசம் பஞ்சவர்கள்போனபின்பு
அன்றுமுதலாக அர்ச்சுனனார்புத்திரனும்

காரிழையாள்மாது கலந்தாரிநாயகியும்
அவரவர்கள்வீட்டில் அருமையாய்வளர்ந்துவந்தார்
தங்கள்தங்கள்தாய்மனையில் சதிருடனேவளருகிறார்

அல்லி கொலுச்சபை.

அப்போது அல்லியவள் அரசாளும்நாயகியாள்
அஞ்சாப்பெரும்புலியா ளரிவையிளமங்கையரும்
ஆசாரமண்டபத்தில் அருங்கிளியும்வீற்றிருந்தாள்
எண்டிசைக்குஞ்செங்கோல் எதிரொருவரில்லாமல்
தப்பாதரசாண்டாள் தாமரைசூழ்நாயகியாள்
முத்துவளநாடும் முடிகவியும்பெண்பெருமாள்
பட்டமுஞ்செங்கோலும் பாராளும்பெணபெருமாள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும்
கொம்பேரிடையாள் கொலுகலைந்தபிற்பாடு
வண்டார்குழலாளும் மாளிகையிற்போய்புகுந்து
சிங்காதனத்திலே தேன்மொழியும்வீற்றிருந்தாள்
தனக்குக்கவரியிடும் தாதிமுகம்நோக்கி
வயிரக்கவரியிடும் மங்கையரைத்தானழைத்து
முத்தின்கவரியிடும் மூப்பிமுகம்நோக்கி
செம்பொன்கவரியிடும் தேன்மொழியே நீகேளாய்

அல்லி சொர்ப்பனங்கண்டது.

நேற்றையராத்திரியில் நித்திரைபோம்போது
சொர்ப்பனங்கண்டேனன் துன்னுங்கருங்குழலே
தாமக்கருங்குழலாள் தாதியருங்கூறலுற்றாள்
ஏதேதுசொர்ப்பனங்கள் எனக்கரியக்கூறுமென்றாள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுகிறாள்
சோலைமலருடைய சொக்கநாதர்கோயிலுக்கு
சேவிக்கபோனதாய் தேன்மொழியே நான்கண்டேன்
சோலைமலருடைய சொக்கரவர்பார்த்து
சிவனாருமப்போது செங்கழுநீர்பூவெடுத்து
அங்கயற்கண்ணம்மை அகிலாண்டநாயகியும்
கொண்டுவந்துஎன்கையில் கொம்பனையுந்தான்கொடுத்தா
ள், மைந்தன்புலந்திரற்கு வாங்கினேனேற்குமென்று
ஏற்குமென்றுவாங்கி யிந்திரனார்கைகொடுத்தேன்
அதனையவர்வாங்கி அவன்தேவிகைகொடுத்தான்
மங்கையருஞ்செல்வன்பெற்றுவளர்ந்திருக்கக்கண்டேனே

நன்மையோ துன்மையோ நாயகமே கூறுமென்றாள்
தாமக்கருங்குழலாள் தாதியருங் கூறலுற்றாள்
ஆச்சி நீகண்டகினு அறியவே சொல்லுகிறேன்
உன்-மைந்தனுக்குமைந்தன் வாய்க்குங்காண் தப்பாது
புத்திரர்க்குபுத்திரர் பிறக்கும்புனற்கிளியே
பிறவாமுடி தரித்த பெண்பெருமாள் கூறுவாள்
ஆரடிதாதியரே அன்னப்பசுங்கிளியே
பஞ்சவர்கள் நாடுவிட்டு பாரவனம்போயிருக்க
ஐவருங்காட்டகத்தே அனல்பிறந்தாள் காட்டகத்தே
மாலைமுடியார்கள் வனவாசம்போயிருக்க
வண்டார்குழலாளும் மயிர்விரித்துபோயிருக்க
எந்தவனத்திலே யிருக்கிறாரென்றறியேன்
பஞ்சவரும் நாடுபெற்று தாமும்பயந்தெளிந்து
கொற்றவர்கள் நாடுபெற்று நாமுங்குறை நீங்கி
மன்னவர்கள் நாடுபெற்று வருங்காலமெக்காலம்
வண்டார்குழலாளும் வாழ்பெறுவதெக்காலம்
என்-மைந்தருக்குமைந்தருமாய் வாய்ப்பதுவுமெக்காலம்
எண்ணுதுமெண்ணியே ஏங்கிமுகம்வாடினாள்
தாமக்கருங்குழலாள் தாதியருங்கூறுகிறாள்
நீ-கண்டகினவுநன்மை கன்னியரே நீகேளீர்
மைந்தருக்குமைந்தராம் வாய்க்கும்புனக்கிளியே

புலந்திரன் பள்ளியறைக்கு அல்லிவந்துகாண்கிறது.

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் கூறுவாள்
போரஞ்சாமன்னன் புலந்திரவீரியனார்
என்-பாண்டியப்பெருமாளின் பள்ளியறையெங்கேயென்றா
ர், மண்டபத்துக்குள்ளிருக்கு மன்னவனார்பள்ளியென்றார்
எங்கேயென்றுசொல்லி யெழுந்திருந்தாளல்லியம்மாள்
சிங்காதனத்தைத் திகழக்குதித்திறங்கி
தாமக்கருங்குழலாள் தாதியருமப்போது
கட்டழகிபெண்ணே கன்னியரேவாருமென்று
மெத்தனவேதானடத்தி வேல்பொருதுங்கண்ணாளும்
சித்திரஞ்சேர்மண்டபத்தே சென்றாள் திருவணையும்
தாள்பூட்டிக்கொண்டு தனஞ்செயனும்பள்ளிகொண்டான்
தாமக்கருங்குழலாள் தாதியருமப்போது
பேர்சொல்லித்தானழைத்தாள் பெருமாள்புலந்திரனை

அஞ்சுவாய்மாதே ஆரணங்கேபோமென்று
வாயாலேயேந்தி வளநாடிதான்திறந்தாள்
ஏந்தித்திறந்தானே யிந்திரனூர்பொற்கதவை
தருமமுடியானுந் தனித்துப்படுத்திருந்தான்
தேவியுடனேயிவர் திருத்தமுடன்கூடாமல்
தனியாகப்படுத்திருக்கச் சங்கரனூர்கட்டளையோ
பகையான்தலைக்கடையில் பக்தசனவாசலிலே
மாதைதுகிலுரிந்த மாபாவிவாசலிலே
கோதையைத்துகிலுரிந்த கொடும்பாவிவாசலிலே
சகுனிதலைக்கடையில் சண்டாளன்வாசலிலே
மாற்றான்றன்வாசலிலே மாலையிடப்பெற்றேன்
மற்றொருவாசலிலே மாலையிட்டேனுமாகில்
பொற்கைவளநாடியரைப் போகவரப்பாரேனோ
வண்டார்குழலாளை வரப்போகப்பாரேனோ
கொம்பனையாள்செய்தவொரு குடிவாழ்க்கைப்பாரேனோ
இந்திரனூர்தேவிசெய்யும் யில்வாழ்க்கைப்பாரேனோ
காணாதிருந்தேனே கண்ணற்றுளானேனே
பாராதிருந்தேனே பாவிநானுனேனே
மைந்தர்புலந்திரனைப் பார்த்தான்பலகாலும்
கால்கள்தொடங்கியே கரியகுழல்வாயும்
பார்த்தான்பலகாலும் பார்த்தான்திருமகனை
தாமக்குழலாளும் தாதிமுகம்நோக்கி
இவர்-பொய்யாமொழியும் பொறுமைதலையழகும்
ஐவர்கள்தன்னழகும் ஆசாரப்பேரழகும்
தக்கப்புகழுடைய தருமரைப்போலிருக்கும்
இந்திரனூர்மார்பும் யிடம்பெரியதிண்டோளும்
வெற்றிமதயானை வீமனைப்போலிருக்கும்
அழகும்யிளமையும் அர்ச்சுனரைப்போலிருக்கும்
தலையுந்தலைக்கட்டும் சகாதேவன்போலிருக்கும்
நடையும்வுடையழகும் நகுலரைப்போலிருக்கும்
விரலும்விரற்கொடியும் வேந்தரைப்போலிருக்கும்
காசிவளநாடாளும் கர்னரைப்போலிருக்கும்
ஐவர்திருவழகும் அருமைமகன்தானுமுண்டு
வேறேவருகுமோ வேல்பொருதுங்கண்ணாளே
மைந்தர்புலந்திரனை வாளாலேதட்டிவிட்டான்

புலந்திரன் தாயாரைக் காண்கிறது.

சற்றேதான்கேட்டலுமே தருமர்திருமகனும்
பொட்டெனவேகண்விழித்து புலந்திரனார்தான்பார்த்து
அவர்-அஞ்சிப்பயந்து அட்சணமெழுந்திருந்து
உத்தமனார்வேதன் உருமாலைதான்சுழல [விட்டு
திட்டெனவேதான்குதித்தான் செம்பொன்னின்மெத்தை
பூங்காவில்போகவென்றால் பொற்கொடியுங்கிட்டிவந்தாள்
மலர்க்காவில்போகவென்றார் மாதாவுங்கிட்டிவந்தாள்
மாலைமுடியானும் மலரணையிற்பூவெடுத்து
மாதாவின்பாதமது மலர்தூவிதெண்டனிட்டான்
வந்துபணிந்தவனை வாளாலேதானெடுத்து
மாணிக்கமெத்தைதன்னை வாளாலேதான்விலக்கி
ஏறியிருந்தாளே ஏகாந்தகட்டிலின்மேல்
போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்
இன்னேரம் ஆச்சிநீ ரிங்குவந்தகாரியமேன்
நான்-செய்துவந்தகாரியத்திற் செய்தபிழையுமுண்டோ
ஊரிற்புதுமையுண்டோ உங்களூரிற்குற்றமுண்டோ
ஆனைப்படுகுழியும் ஆச்சிமிகராச்சியத்தில்
மெத்தக்களவுகள் மெல்லியரேவந்ததுண்டோ
கப்பலுஞ்சோங்கும் களவுகள்மெத்தவுண்டோ
இன்னேரம்ஆச்சிநீ ரிங்குவந்தகாரியமேன்
சொல்லியேதான்தொழுதான் சுந்தரப்பூமுடியான்
தாமக்கருங்குழலாள் தாதிகளூழிகளும்
வேறொன்றுமில்லையையா வேந்தர்பெருமானே
அஞ்சாதேயென்றுசொல்லி அணைத்தெடுத்துதாதியர்கள்
ஆடையொதுக்கியே ஆபரணம்ஒப்பமிட்டு
உத்தமனார்வேந்தனுக்கு உருமாலைதானுங்கட்டி
காவலனார்வீரியனுங் கைகட்டிநின்றானே
அஞ்சியேநின்றானே ஐயன்பெருமானும்

புலந்திரனுக்கு தாய்சொல்லுகிறது.

மைந்தன்புலந்திரனை வளநாடிதான்பார்த்து
தருமமுடியானே தனியாகப்பள்ளிகொண்டாய்
உன்-மச்சினியாள்தானொழிய மறுநாட்டாளாகாதோ
அத்தைமகளொழிய அசல்நாட்டாளாகாதோ
ஐயனார்கோவிலிலே ஆடும்ரம்பையாகாதோ

நாடகசாலையிலும் நாயகிமார்தங்களிலும்
வேறொருத்தியாகாதோ விசயன்மகனாரே
எண்பத்தெண்ணாயிரம்பேரிளங்கொடிமார்தானுமுண்டு
அன்னநடைமாதர்கள் ஆகாதோமன்னவனே
தருமமுடியானே சலிப்புவந்தகாரணமேன்
மதுரையன்பத்தறுகாதம் ஆளஅரசிருக்க
ஆறாயிரவரென்னும் அணிதிரளாம்பாண்டியர்கள்
பொன்னின்மலைநாடாளும் போரெழுதிஅம்மானும்
மாலைமுடியாரே மாமன்மார்தானிருக்க
நானுமிருக்கையிலே நாயகரேயுந்தனுக்கு
தருமமுடியானே சலிப்புவந்தகாரியமேன்
நன்றாகமைந்தனே நான்பெற்றேனென்றிருந்தேன்
பொன்னாகவும்மையும் பெற்றதுநானறியேன்
போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்
வாய்புதைத்துக்கைகட்டி மன்னனெடுத்துரைப்பான்
ஆச்சிநீகேளீரடியேன்வாய்விண்ணப்பம்
தேசத்தழகுமன்னன் திரியோதிரன்பாவி
பருவமதயானை பஞ்சவர்களைவ்வரையும்
உருவமதயானை உத்தமர்களைவரையும்
விருந்தமிர்தமென்றுசொல்லி வீமரைத்தானழைத்து
வலுவிலேதானழைத்து மாயத்தால்சூதாடி
மாயத்தால்சூதாடி மண்ணிழக்கமண்பறித்து
உபாயத்தால்சூதாடி தருமாபுரம்தோற்று
எத்தேசமுந்தோற்று யிருப்பிடமுந்தானெடுத்து
வில்தோற்றுவாள்தோற்று வீமாபுரந்தோற்று
தக்கப்புகழுடைய தர்மரவர்நால்வரையும்
வீமரருச்சுனரை வேந்தரவர்தோற்று
நகுலசகாதேவ ராசாக்களைதோற்றுத்
தம்மையுந்தோற்று தம்பிமாரையுந்தோற்று
ஆடைக்கொடிதோற்று ஆபரணமுந்தான்தோற்று
சேலைப்பணிகளுடன் சேரஅவர்தோற்று
ஆயிரம்கோடிவெள்ளை யானைகளைத்தோற்று
ஐந்நூறுகோடிவெள்ளை அசுவங்களைத்தோற்று
ஆயிரம்கோடி யரம்பையரைத்தோற்று
நாடகசாலைப்பெண்கள் நாயகியைத்தோற்று

ஆனைகுதிரைகளே அரசரவர்தோற்று
சேர அவர்தோற்று செம்பொன்மணிமுடியார்
நித்திலங்குபூமுடியார் நீராழிமண்டபமும்
பாவையுருவதுபோல் பளிங்குமாமண்டபமும்
பேடைமலர்க்கண்ணுள் பேரரசிமண்டபமும்
காவலர்கள்தேவி கதைகேட்குமண்டபமும்
தருமமுடிபஞ்சவர்கள் சனியெண்ணெய்மண்டபமும்
பேர்பெரியபஞ்சவர்கள் புதனெண்ணெய்மண்டபமும்
செப்புமழகுடைய சிவன்பூசைமண்டபமும்
ஐயர்பூசைசெய்யும் அரனூர்திருமேடை
இத்தனையுந்தோற்று யிவ்வளவுமல்லாமல்
வித்தகனூர்பாஞ்சாலர் பெற்றவிளக்கொளியை
கொற்றவர்கள்பஞ்சவர்கள் கொண்டகுடிவிளக்கை
தாமக்குழலாளே தருமரிடதேவியரை
என்-மாதாவையும்வைத்து மன்னவர்கள்தோற்ருர்கள்
இத்தனையுந்தோற்று யிருந்தாரொருமன்னவரை
தேசத்தழகன் திரியோதிரன்பாவி
மரவுரியைத்தான்கொடுத்து மன்னவர்களேவரையும்
வெய்யலிலேதானிருத்தி வேந்தரைவைத்தானே
தோருவடிவழகி துரோபதையாள்நாயகியும்
தாமக்குழலாளைத் தள்ளிநடக்கவைத்தான்
வேல்பொருதுங்கண்ணுளை வீதிநடக்கவைத்தான்
அன்னநடையாளே அங்காடிமாட்டிவைத்தான்
பாவையழகியரை பருந்தாட்டமாட்டிவைத்தான்
சொல்லாதுஞ்சொல்லியே துகிலுமுரியவைத்தான்
பஞ்சவர்கள்புண்ணியத்தால் பாஞ்சாலன்புண்ணியத்தால்
தக்கபுகழுடைய தருமரிடபுண்ணியத்தால்
மாளாதிருந்தது மாதுதுயிலாடை
உரியாதிருந்தது உத்தமியாள்பூவாடை
அழியாதிருந்தது ஆணழகிபூவாடை
உருவிநழுவிதுயில் வுடைகுலேந்தாளாமாகில்
வெற்றிமதயானை வீமரதுதெண்டாலே
வீமரதுதெண்டாலே வேந்தர்படைகளெல்லாம்
மாளுவதுஅன்றல்லோ மன்னன்பெரும்படைகள்
சாகிறது அன்றல்லவோ தனஞ்செயன்கைஅம்பாலே

பஞ்சவருந் துரோபதியும் பாரவனம்போயிருக்க
எந்தவனத்திலே யிருக்கிருரென்றறியேன்
எந்நாட்டுக்குள்ளே யிருக்கிருரென்றறியேன்
புன்னையுடன் தும்பை விருப்பமுடன்காய்கிழங்கு
பண்ணையுடன் தும்பை பறட்டையுடன்காய்கிழங்கு
தின்று அவர்திரிய தேசாந்திரிபோலே
காடுசெடிதோறும் கடிகியவர்திரிய
எனக்குச்சுகமேது யென்தாயேசொல்லுமென்ருன்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுகிருள்
அத்தனைக்கும் நீர்சலித்தீ ரானந்தவாழ்மார்பா
என்செய்வேனென்மகனே யெழுத்துவசந்தப்பாது
தலையின்விதிப்படி தப்பாதொருக்காலும்
பாஞ்சாலிபட்டுரிய பஞ்சவர்கள்காடுறைய
உன்வலதும்என்வலதும் உத்தமனேயல்லவிது
தெய்வவலதுகண்டீர் செம்பொன்முடியாரே

புலந்திரனை கலந்தாரியிடஞ் சேர்ந்து
வாவென்று சொல்லுவது.

உன்-மச்சினியாள்மீறி வளர்ந்துசமைந்தாளாம்
அத்தைமகள்மீறி அவள்வளரக்கண்டேனுன்
கண்டேகனவிலே கட்டழகிசீர்வடிவை
மச்சினியாள்கோவிலுக்கு மன்னுநீசெல்லுமென
பொற்கொடியாள்கோவிலுக்குபோய்வருவாய்புலந்திரனே

புலந்திரன் மறுத்துச்சொல்லுவது.

போரஞ்சாமன்னர் புலந்திரனுங்கூறலுற்ருன்
பகைவராண்மனைக்குப் பாவியுடவாசலிலே
சகுனிபடுபாவி சத்துருவின்வாசலிலே
என்தாயைத்துகிலுரிந்த சண்டாளன்வாசலிலே
கோதைதுகிலுரிந்த கொடும்பாவிவாசலிலே
மாதுபொருட்டால் வலுவிலும்போவேனே
பஞ்சவரும்நாடுபெற்று நாமும்பயந்தெளிந்து
கொற்றவரும்நாடுபெற்று நாமும்குறைநீங்கி
மன்னவர்கள் நாடுபெற்று வந்தபிறகாக
வண்டார்குழலுடையாள் வந்ததின்பிற்பாடு
அன்னநடையென்னுடைய தாய்வந்தபிற்பாடு
பொற்கொடியாள்வாசலுக்குப் போவேன்காணச்சியரே

இப்போதுபோனதில்லை யென்தாயேயென்றுரைத்தார்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியவளேதுரைப்பாள்
தோளுக்குத்தோளு துணைவேணுந்தம்பியரே
காலத்திற்பெற்றபிள்ளை கைக்குதவிகண்டீரோ
போனீரேயாமாகில் புத்திரரைப்பெற்றிடுவீர்
பெற்றீரேயாமாகில் பேருண்டாய்வாழ்ந்திடுவீர்
பொற்கொடியாளரண்மனைக்குப் போவீர்புலந்திரரே
போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்
எனக்குமோரையாண்டு ஏந்திழையாள்மூவாண்டு
மாலையிட்டபிற்பாடு மாது அறியாளே
தையலர்க்குமங்கிலியந் தரித்தவகையானறியேன்
என்னையவளும் ஏந்திழையாள்தானறியாள்
நானும்வளர்ந்தது நாயகியும்தானறியாள்
என்-மாமியார்வீட்டை மறுபடியும்போனதில்லை
மாமியார்வீட்டிலே மருவுண்டுவந்ததில்லை
பொற்கொடிவாசலுக்குப் போகும்வகைசொல்லுமென்றார்

பிள்ளைமீதியில் கோபித்து விலங்குபோடச்சொல்வது.

அரசாளும்நாயகியாள் அல்லியருந்தான்கேட்டு
சீரிபொறிபறந்து செவ்வாய்கருகலிட்டு
எதிர்த்தெதிர்த்துப்பேசுவதும் என்னுடன்சொல்லுவதும்
மறுத்துத்தடுக்கிறாய் மன்னாகருவமென்ன
இந்தகருவத்தை யிப்போதடக்குவேன்பார்
கட்டழகிதாதியரே கருமானையழையுமென்றாள்
விஜயனார்தன்மகனை விலங்கிலேபோடுமென்றாள்
கால்விலங்குகைவிலங்கு கழட்டாப்பெருவிலங்கு
மார்விலங்குதோள்விலங்கு மன்னனுக்குப்போடுமென

புலந்திரன் சொல்வது.

போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்
என்னைவிலங்குபோட யென்செய்தேனென்தாயே
போகாதஅரண்மனைக்குப் பொற்கொடியேபோனேனோ
மங்கையர்கோவிலுக்கு வலுவிலும்போனேனோ
குடிமக்கள்வாசலிலே கூசாமல்போனேனோ
உப்பரிகையேறிநான் உயரக்குதித்தேனோ
கப்பல்கள்சோங்குகள் களவுகள்செய்தேனோ
என்னகொடுமைசெய்தேன் என்னைவிலங்கிலிட

அரசாளும்நாயகியாள் அல்லியருங்கூறுகிறாள்
ஆரடாதம்பியரே அல்லவென்றுற்போகாது
அத்தனையுமல்லாமல் அரசே நீர்கேட்டருள்வீர்
மச்சினியாள்மீறி வளர்ந்துசமைந்திருக்க
மாதுசிறையிருக்க மன்னவனேயாகாது
குடியாள்சிறையிருக்க கொற்றவனேயாகாது
நாடும்வராதுமன்னு நகருகளும்சேராது
ஊரும்வராதுகண்டீர் உத்தமனேவுந்தனுக்கு
மச்சினியாள்கோவிலுக்கு மகனே நீசெல்லுமென்றாள்
போரஞ்சாமன்னன் புலந்திரனும்கூறலுற்றான்
உன்-ஆக்கினைக்குத்தான்பயந்து ஆச்சியரேபோனாலும்
அவள்-கற்கோட்டைமுத்திரையுங் கர்னனுடகாவல்களும்
சுத்திமதிலெழுப்பி சூரியனைக்காணமல்
வாசலுக்கு ஆயிரம்பேர் வாள்வீரர்காவலுக்குள்
உருவினஆயுதங்கள் வுறையிலேபோடாமல்
விழித்தகண்சிமிட்டாமல் மெல்லியிடமிருப்பார்
காசிவளநாடாளுங் கர்னனதிகாரன்
தாமக்குழலாளின் தலைவாசல்காப்பானும்
அத்தனையுந்தான்கடந்து ஆச்சியரேபோனாலும்
ஆயிரந்தாதி அவளருகேயிருப்பாராம்
அம்மாநீராடி ஆடுங்கழலாடி
விளையாடிவீற்றிருப்பார் மெல்லியராயிரம்பேர்,பொற்கொடி
யாளரண்மனைக்குப் போகும்வகைசெப்புமென்றார்
அரசாளும்நாயகியாள் அல்லியருமேதுசொல்வாள்
ஆருமறியாதே அம்மானைக்காணாதே
அருகிருக்குந்தோழியர்கள் யாவருமறியாமல்
மாதினிடவாசலிலே மன்னவரே நீர்போவீர்
மேகப்புரவியது வேந்தனே நான்தருவேன்
என்னாணைமன்னு நீ இனியொன்றுஞ்சொல்லாதே
மன்னு நீபேசாதே மன்னர்பெருமானே
தர்மர்திருவாணை தம்பிமார்தன்னாணை
காடுறைந்தபஞ்சவர்கள் கட்டழகிதன்னாணை
பின்னையொன்றுஞ்சொல்லாதே பெருமாள்புலந்திரனே
மச்சினியாள்கோவிலுக்கு மன்னு நீசெல்லுமென்றாள்
போரஞ்சாமன்னன் புலந்திரனுமேதுசொல்வான்

அவர்-எந்தவனத்தில் இருக்கிருரென்றறியேன்
இதுவுமொருகாரியமாய் இவ்வாணைவந்ததென்ன
மாளவென்ருல்மாளுகிறேன் மாதாவேயிப்போது
ஆணைவிடுந்தாயேயென்று அடிவணங்கித்தெண்டனிட்
டான், வந்துபணிந்தவரை வாளாலேதானெடுத்து
ஆணழகர்பஞ்சவர்கள் ஐவரிடயாணையிட்டேன்
காடுறைந்தபாஞ்சாலி கட்டழகிஆணைவிட்டேன்
தருமரிட ஆணைவிட்டேன் தம்பிமார்ஆணைவிட்டேன்
மாதருடன்கூடி மருவிவருமளவும
என்ஞணைமட்டும் இருக்கட்டும்இந்திரனே
என்றுமவளுரைக்க யின்பமுடன்தான்கேட்டு
மாதாவின்பாதம் மலர்தூவிதெண்டனிட்டு
உம்மாணைகொண்டுநான் ஊர்வழியேபோவேனே
தாயாணைகொண்டுநான் தனிவழியேபோவேனே
போனல்பலிக்குமோ பொற்கொடியேயெந்தனுக்கு
ஆணைவிடுமென்று அடிவணங்கிதெண்டனிட்டான்
அரசாளும்நாயகியாள் அல்லியருந்தான்கேட்டு
விட்டேனேயாணையெல்லாம் வேந்தர்பெருமானே

அல்லியரசாணி இந்திரனைக்குறித்துப்
புரவி வாங்குவது.

ஆகாயவான்புரவி அழைப்பித்துநான்தருவேன்
இந்திரரேநீரும் இங்கேயிருமென்றுசொல்லி
ஆழச்சுனையில் அரசியருந்தானிறங்கி
காலோடுகண்ணும் கனிவாயுங்கொப்பளித்து
வாயோடுபல்லும் மதிமுகமுஞ்சுத்திசெய்து
தென்மதுரைநாடாளும் திருநீற்றுக்காப்பணிந்து
சிந்தித்துநின்ருளே சிவனையடிபணிந்து
தேவேந்திரனை நினைத்தங்கேதெண்டனிட்டாள்
மைந்தன்புலந்திரர்க்கு வான்புறவிவேணுமென்று
மைந்தனுக்குச்சகாயமாய் வரவழைக்கவேணுமென்று
ஆகாயவான்புரவி யாரணங்குவேண்டுமென்று
இந்திரரைநோக்கி ஏந்திழையுந்தெண்டனிட்டாள்
மருமகள்தானினைக்க மன்னவருந்தான்கேட்டு
தேவேந்திருந்தான் தேவிமுகம்நோக்கி
கண்டாயோபெண்ணரசே கயற்கண்ணாள்நின்றவிடம்

தன்-மைந்தருக்குமைந்தருமாய் வாய்க்கவேவேண்டுமெ
ன்று, புத்திரற்குப்புத்திரராய் பிறக்கவேவேண்டுமென்று
தவசுகள்செய்கிருள் தையலிளம்பிறையாள்
என்றுரைக்கயிந்திரனார் இந்திராணிதான்கேட்டு
தேங்காய்க்குமூன்றுகண் தேசத்திலென்பார்கள்
ஓடுமயில்கண்ணாட்கு ஒருகண்ணேயுள்ளதுவும்
தோளுக்குத்தோளு துணைவேண்டுமிந்திரரே
அதனாலேயல்லவோ ஆரணங்குவருந்துகிருள்
ஆகாயவான்புரவி அனுப்பவேவேண்டுமென்ருள்

தேவேந்திரன் புரவிகொடுத்தது.

தேவேந்திரபகவான் சிரித்துமனமகிழ்ந்து
வானத்துமேகங்கள் வானவர்கோன்வரவழைத்து
பார்த்தானேஇந்திரனும் பார்வைகள்கொள்ளாதே
இப்படிக்குப்போனாலே இந்திரற்குயேற்காது
என்றுஇவர்நினைத்து யின்பமுள்ளபேரனுக்கு
பூமியில்வாழுகிற புரவியைப்போற்சோடித்து
அங்குபடிவைத்தல்லவோ அழகாயலங்கரித்து
நாலுகால்வண்டயமாம் நடுக்கழுத்திற்கொலுசுகளாம்
செம்பொன்சிறுசதங்கை சேர்ந்தபலகரையும்
அம்பொன்னின்கிண்கிணியும் அழகாகபூட்டினாராம்
மாணிக்கந்தன்னாலும் வைடூரியந்தன்னாலும்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
மெத்தைமடித்திட்டு மேலேயணைகோலி
சித்திரஞ்சேர்பட்டு சீராய்மடித்திட்டு
குப்பியில்சாந்தும் குழாவில்புனுகுகளும்
வாய்த்தயிலைச்சுருளும் வர்னப்பலாக்காயும்
பட்டுப்புனுகுகளும் சவ்வாதுபரிமளங்கள்
பூவாலலங்கரித்தார் புலந்திரனற்புரவிதன்னை
வகைவகையாய்ப்பூச்சரங்கள் வைத்துபுரவியிலே
சோடித்தலங்கரித்து சுந்தரற்குவேண்டுமென்று
தேவேந்திரபகவான் சிரித்துஅலங்கரித்து
ஏற்குமோஇப்புரவி இந்திரற்குயேற்குமென்று
தட்டிப்புரவியைத் தாமந்தவாழ்மார்பன்
குதிரைக்குபதேசங் கூறினார்காதிலேதான்
ஆகாயம்போகாதே அவலோகம்போகாதே

செம்பொன்மணிமுடியான் தேவியுடகோவிலுக்கு
ஒருசாமப்பொழுதிலே உத்தமனைக்கொண்டுசென்று
இருசாமமங்கே இருக்குமட்டுந்தானிருந்து
விடியவொருசாமத்திலே விடிபட்டுவந்துவிடு
அப்போதுவான்புரவி அவருடனேசொல்லுகுது
அருளருளும்ஐயாவே அப்படியேயாகுதென்று
வந்ததுகாணப்புரவி மதுரைவளநாட்டிற்கு
செம்பொன்கடிவாளம் தென்னுடிகைபிடித்து
மலர்க்காவிதான்கடந்து வைகைவளநாடியரும்
மைந்தனிருக்கிறதோர் மண்டபஞ்சென்றேறினாள்
மாலைமுடியானே மஞ்சநீராடுமென்றாள்
மஞ்சநீர்ச்சாலையிலே மன்னவனும்போய்புகுந்து
ஆடைகளைந்துவைத்து ஆபரணந்தான்கழற்றி
கத்தியுடனே அங்கி காவலனுந்தான்கழற்றி
சேரவேதான்கழட்டி செம்பொன்மணிமுடியான்
கொற்றவர்கள்கோமானும் குளித்துக்கரையேறினான்
துப்பட்டிகொண்டு துவட்டினார்சுந்தரிமார்
ஈரமுலரவே யிணைகவரிவீசினார்கள்
ஆடையெடுத்துடுத்தி ஆபரணந்தான்பூட்டி
கச்சைவரிந்துகட்டி கத்திமிகச்சொருகி
தென்னமுடிவேந்தன் திருநீற்றுக்காப்பணிந்து
சிந்தித்துநின்று சிவனையடிபணிந்து
செங்கழுநீர்பூவெடுத்து சிவனைத்தோத்தரித்து
கஸ்தூரிபொட்டுமிட்டு கண்டபெண்கள்சேர்ந்திடவே
மாணிக்கமண்டபத்தில் மன்னவனுஞ்சென்றானே
சிங்காதனத்திலே திரள்வீரன்வீற்றிருந்தான்
அரசாளும்நாயகியாள் அல்லியருங்கூறுகிறாள்
மைந்தன்புலந்திரனை மயிலணையாள்தான்பார்த்து
ஆனந்தவாழ்மார்பா அடிசலுக்குவாருமென்றாள்
சிங்காதனத்தைவிட்டு திகழக்குதித்திறங்கி
அமுதுண்ணுமண்டபத்தை ஆணழகன்சென்றானே
அரசாளும்நாயகியாள் அல்லியருங்கூறலுற்றாள்
இருமிருமென்று யிணைகடகங்கையமர்த்தி
பொற்றடுக்குமேலே புலந்திரனும்வீற்றிருந்தான்
சிங்கமுக்காலி செம்பொற்றளிகைவைத்தாள்

கைக்குநீர்வார்த்தார்கள் காவலனுர்வீரியற்கு
நீர்சுழற்றியூற்றி நிகர்வளைமுன்கையாளும்
போனகம்வாங்கிப் புரிகுழலாள்தான்படைத்தாள்
பத்துவகைக்கரியும் பதினெட்டுபச்சடியும்
நீர்கடகக்கையால் நீரெடுத்துதான்கொடுத்தாள்
அறிவுடையநாயகர்க்கு ஆகாரந்தான்கொடுத்தாள்
அந்தவடிசல் அமுதுண்டபிற்பாடு
அத்தளிகைமாற்றி பொற்றளிகைமுன்னேவைத்து
போனகம்வாங்கி புரிகுழலாள்தான்படைத்து
காய்ச்சியபாலும் காட்டுமாங்கனிப்பழமும்
திருத்தியமுதுஞ் செலுத்தியநெய்பாலும்
கூட்டிப்படைத்தார்கள் கொம்பனைமார்தாதியர்கள்
அந்தஅடிசல் அமுதுண்டபிற்பாடு
கைகழுவநீர்வார்த்தார் காரிழைமார்தாதியர்கள்
உத்தமியுமைந்தனுமாய் ஒக்கவுலாகொடுத்து
சித்திரஞ்சேர்மண்டபத்தில் தேன்மொழியாள்வீற்றிருக்க
முடிபூவுஞ்சந்தனமும் மெல்லியருந்தான்வாங்கி
அடைக்காயும்வெள்ளிலையும் அன்பாகத்தான்வாங்கி
மைந்தருக்குத்தான்கொடுத்து மாதுநல்லாளப்பொழுது
தானுமிலையமிர்தம் தையலருந்தின்ருளே
மாதாயிளைப்பாற வான்கவுரிவீசினுர்கள்
தாமக்கருங்குழலாள் தாதிமுகம்நோக்கி
கொண்டுவந்துபூட்டுமென்ருள் குமாரன்புலந்திரற்கு
மச்சினியாள்மெச்சவகை வகையாய்ப்பூஷணங்கள்
ஆபரணப்பேழை அலைகோதிதான்திறந்து
ஆனந்தமார்பனுக்கு ஆபரணந்தானெடுத்து
தெரிந்தபணிதிகளை செம்பொற்றளிகைவைத்து
கொண்டுவந்துமுன்னேவைத்தாள் கொம்பேரிடையாளும்
தென்னர்பெருமான் திருமேனிதீண்டவல்லான்
ஆனந்தமார்பனுக்கு அருகாகவந்துநின்று
முத்தினுருமாலை முகநிறையத்தான்றரித்து
வேதிச்சநற்புனுகால் மின்னமுகந்துடைத்து
கட்டழகர்நெற்றியிலே கஸ்தூரிப்பொட்டுமிட்டு
தேனல்லோதாரன் திருநீற்றுக்காப்புமிட்டு
ஈரெட்டுப்பூண்கடுக்கன் யிட்டுமிவன்காதில்

அனந்தமுடிசூட்டி அழகாகப்பூட்டினர்
ஒருமுத்தேழுத்து உலகமெல்லாம்பெற்றதுபோல்
பாரியமுத்துப் பரிமுத்துத்தாழ்வடமும்
நவரத்தினப்பதக்கமும் நாகரீகத்தாழ்வடமும்
ஆரப்பதக்கமும் அழகுசரப்பளியும்
பார்த்தபணிதிரமும் பருமுத்துத்தாழ்வடமும்
முன்கைமுதாரிகளு முழுகடகமோதிரமும்
சந்திரகடகங்கள் தாயத்துசோதிமின்ன
அவ்ஸதகடகமும் அழகானமோதிரமும்
முத்திரைமோதிரமு முன்கையிற்கடகமும்
பசும்பொன்பவுத்திரமும் சேர்ந்தகணையாழிகளும்
பொன்னினரைஞாணும் பூட்டினுற்பொற்சலங்கை
கச்சையிறுகணைந்து கத்திமிகச்சொருகி
பாங்குகள்தான்சொருகி பாலனிடகாலில்
பூஞ்சிலம்புதண்டையும் பொன்மட்டுந்தானணிந்து
ஆபரணமெல்லாம் அடங்கலுந்தான்பூட்டி
இழையாயிரம்பொன்பெற்ற இந்திரவர்னப்பச்சைவடம்
ஆனந்தமார்பனுக்கு ஆடைவரிந்துகட்டி
நிரஞ்சனமாகவே நிறைந்ததேமேனியெல்லாம்
இப்படியாக இயலாயலங்கரித்து
அரசாளும்நாயகியாள் அல்லியருங்கூறலுற்ருள்
மைந்தர்புலந்திரரைப் பார்த்துவளநாடி
கண்திருஷ்டிவாராமல் காப்பிடுங்கள்தாதியென்ருர்
சந்தனமுஞ்சாந்தும் சவ்வாதுமிகவணிந்து
ஆலாத்திகாட்டுமென்ருள் ஆனந்தமார்பனுக்கு
முத்தாலேஆலாத்தி முப்பதுனூருயிரம்பேர்

புலந்திரனுக்கு தாயார் புத்திசொல்வது.

ஆகாயவான்புரவி அலைதாரநீரேறி
ஒருசாமப்பொழுதிலே உத்தமரேநீர்போயி
மந்திரவாள்தாரேன் மன்னர்பெருமானே
வாள்வைத்தால்கதவு திறக்குங்காண்மன்னவனே
தானேதிறக்குங்காண் தனஞ்செயனேபொற்கதவு
போனுற்போல்நீரும் பொற்கொடியையெழுப்பாதே
ஆராய்ந்துபார்த்து ஆணழகாமன்னவனே
கையாலேதட்டிக் காரிழையெழுப்பாமல்

காலாலேதட்டி மங்கையரை நீயெழுப்பும்
சற்றேதான்தட்டலுமே தையலெழுந்திருப்பாள்
அவள்-வாழும்பெருமைகளும் மாமன்மார்சேவகமும்
உத்தமர்கள்பஞ்சவரை ஓட்டியரசாளுவதும்
கட்டழகர்பஞ்சவரைக் காடோட்டியாளுவதும்
கன்னனிடவதிகாரம் காவலர்போர்வீரியமும்
ஏசாதுமேசி யெடுத்துரைப்பாளாமாகில்
உத்தரங்கள்சொல்லாதே ஒக்கநின்றுபேசாதே
கொற்றவனேயுந்தனுக்கு கோபங்கள்வாராமல்
அத்தனைக்குமுட்கொடுத்து அலேகாரா நீர்கேட்டு
எத்தனைசொன்னாலும் எனக்காக நீர்பொருத்து
அன்னமேயிக்கோவி லார்கோவில்சொல்லுமென்று
ஆரணங்கேயும்முடைய ஆய்ச்சிபேர்சொல்லுமென்று
மங்கையரேயும்முடைய மாமன்பேர்சொல்லுமென்று
அன்னமேயுன்னுடைய ஐயன்பேர்சொல்லுமென்று
மங்கைநல்லாள்தன்பேரும் மணவாளன்றன்பேரும்
ஆரமூலயாள் அடையாளஞ்சொல்லுமென்று
நிரூப அடையாளம் நேரிழைக்குத்தான்கொடுக்க
தாரேனடையாளம் தையலற்கு நீகொடுத்து

அடையாளங் கொடுத்தது.

அல்லிக்கொடியும் அழுத்தியசீராவும்
சீராவுங்கச்சுந் திருமுடியுந்தான்கொடுத்தாள்
உன்மாமிமாரிட்டதொரு பவுத்திரந்தான்கொடுத்தாள்
வாங்கிமுடித்துகொண்டார் மன்னர்பெருமானும்
மாதா அடையாளம் வைத்தான்மடிதனிலே
அரசாளும்நாயகியாள் அல்லியருங்கூறுகிருள்
அரும்பாவிவாசலிலே அமிர்தம்புசியாதே
கஸ்தூரிபூசாசே கபடனதுவாசலிலே
தண்ணீர்குடியாதே தையலதுவாசலிலே
கொப்பளித்துநீரைக் குடியாதேவாருமென்ருள்
இருந்துஒருசாமம் ஏந்திழையை நீகூடி
வாவொருசாமத்தில் வந்துவிடுமென்ருளே
அருளருளுமென்ருரே அப்படியேயாகுதென்ருர்
போகவிடைதாருமென்று புலந்திரனுந்தெண்டனிட்டு
வந்துபணிந்ததொரு மகனைவாழ்த்தலுற்ருள்

நீரே அரசாள்வீர் நீடூழிகாலமெல்லாம்
என்னைப்பெறுவீர் எதிர்த்தார்முடிபெறுவீர்
பிள்ளைபெறுவீர் பெருமாளைப்போல்வாழ்வீர்
வாழ்ந்திடுவீரென்று மனங்குளிரவாழ்த்தினாள்
தேனல்லோதாரனுக்கு திருநீறுதான்கொடுத்தாள்
வாய்த்தயிலைச்சுருளும் வர்னப்பழக்காயுங்
காவலன்வீரியற்கு கைநிறைய அள்ளியிட்டாள்

புரவியின் மகிமை சொல்வது.

ஆதீனம்விட்டிறங்கி அன்னநடையாளும்
மாதாவுமுன்னடக்க மைந்தரும்பின்னடக்க
சிங்காரத்தோட்டத்திலே சென்றாள்திருவணையும்
வான்புரவிதான்பிடித்து வைகைவளநாட்டியரும்
செம்பொன்னாற்கடிவாளம் தென்னாடுகைபிடித்து
மைந்தர்புலந்திரனை வளநாடிதான்பார்த்து
பூமியிலேவாழுகிற புரவியைப்போலெண்ணாதே
வையாளிபுரவியோடி வருவதெல்லாங்கண்டீரே
கடிவாளங்கைவிடாதே கட்டழகாகற்பகமே
அங்குபடிகால்விடாதே ஆணழகாமன்னவனே
மாலைமுடியானே வழிபிடித்துவாருமென்றாள்
மச்சினியைக்கண்டபின்பு வாராமலிருக்காதே
வேந்தர்பெருமானே விடியவிங்கேவாருமென்றாள்
அருளருளுமென்னாச்சி அப்படியேயாகுதென்றார்

புலந்திரன் புரவிமேல் நடப்பது.

மறுபடியுந்தெண்டனிட்டான் மாதாவுஞ்சீர்பாதம்
புரவியைச்சுற்றிவந்து போகவிடைவாங்கினனே
அங்குபடிகால்வைத்து ஆனந்தவாழ்மார்பன்
உத்தமர்கள்புத்திரனும் உதாரிச்சுயேசினனே
ஏறினதுகண்டாளே யிந்திரரைக்காணமல்
பிள்ளையிவள்காணாளே பெருமாள்புலந்திரரை
ஆகாயமாகவே அப்புரவிதான்பறக்க
அந்தரமார்க்கத்தில் அப்புரவியெழும்பினதே

அல்லியம்மாள் புலம்பல்.

மைந்தரைப்போகவிட்டு வாடிமனந்தளர்ந்தாள்
போகமாட்டேனென்றானே வலியநான்போகவிட்டேன்
கர்னனறிந்தானோ காவலர்கள்கண்டாரோ

நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்கண்டாரோ
மாலைமுடியானை வதைசெய்தாராமாயின்
மாளும்படியொழிய மண்ணிலிருப்பதில்லை
பஞ்சவருக்கென்னசொல்வேன் பாஞ்சாலிக்கென்னசொ
ல்வேன், வெற்றிமதயானை வீமருக்கென்னசொல்வேன்
அங்கவர்க்கென்னசொல்வே னருச்சுனற்கென்னசொல்
வேன், சோலைமலருடைய சொக்கரல்லோசெய்ததெல்லாம்
அவரிட்டகலகமல்லோ யாதொன்றும்நானறியேன்

அல்லி சொக்கநாதர் கோவிலுக்கு வந்தது.

தண்டிகைதானிருக்க தையலருந்தானிருக்க
தானுவழிநடந்து தையலருமந்நேரம்
சோலைமலருடைய சொக்கரிடகோவில்வந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டாள்
மைந்தர்புலந்திரற்கு வாட்டங்களில்லாமல்
மன்னர்புலந்திரனூர் வந்தாரேயாமாகில்
ஆலாத்திபெண்கள் அதிசயமாய்த்தான்தருவேன்
காடைவராகனு மாணிக்கரத்தினமும்
செம்பொன்னின்முத்துகளும் சுவாமியேநானளிப்பேன்
தண்டிவந்தபொன்னையெல்லாம் சங்கரனேநான்றருவேன்
மொண்டுவந்துநான்சொரிவேன் கோபுரவாசலிலே
மைந்தர்புலந்திரற்கு வல்வினையில்லையென்று
திருமுடியில்புஷ்பமது சேரவேதள்ளுமென்றாள்

சொக்கர் மீனாட்சியை நோக்கிச்சொல்வது.

சோலைமலருடைய சொக்கருந்தான்பார்த்து
அங்கயற்கண்ணயகியை அரனுருந்தான்பார்த்து
கண்டாயோமாதேநீ கயற்கண்ணாள் நின்றநிலை
எத்தனைநேரமட்டும் இவள்கெஞ்சிநின்றாலும்
பொற்கொடிமாதருக்கு புஷ்பங்கொடுப்பதில்லை
அங்கயற்கண்ணம்மாள் அவர்முகத்தைத்தான்பார்த்து
எல்லோர்க்குங்கண்கள் இரண்டென்பாராச்சியத்தில்
தேங்காய்க்குகண்மூன்று தேசத்திலென்பார்கள்
ஓடமலர்க்கண்ணாட்கு ஒருகண்ணேயுள்ளதுகாண்
பிறந்துகனியானாள் பிள்ளை துணைவேணும்
அதனல்வருந்துகிறா ளாரணங்கின்னேரம்
பொற்கொடியாள்மாதருக்கு புஷ்பமதுகொடுக்கவென்ன

சங்கரருமப்போது சற்றேநகைநகைத்து
நங்கைபரிதாபந் தையலரேகண்டாயோ
வெட்டுவேன்குத்துவேன் விலங்கிடுவேனென்றுசொல்லி
ஆக்கினைகள்செய்து அவனையிவள்போகவிட்டாள்
எத்தனைநேரமட்டும் இவள்கெஞ்சிநின்றாலும்
பொய்கைவளநாடியற்குப் புஷ்பங்கொடுப்பதில்லை

மீனாட்சி சொக்கருக்குச் சொல்வது.

அங்கயற்கண்ணம்மை ஆதினத்தைவிட்டிறங்கி
மகாதேவர்பாதமது வணங்கியேதெண்டனிட்டு
அங்கயற்கண்ணம்மை அருகில்வந்தென்னசொல்வாள்
ஆறுயிரவர்களும் அணிதிரளாம்பாண்டியர்கள்
மாளுவோமென்று மலைமேல்தவமிருந்தார்
மாளாதேயென்று மலரிலவதரித்தாள்
வீறுகச்செங்கோல் மெல்லிசெலுத்திநின்றாள்
மன்னன்விஜயன் மடலூர்ந்தமாதேவி
காளைவிஜயனார் கட்டழகன்றேவியிவள்
சிறுவிரல்பாதம்ரெண்டும் சிலம்புக்கால்கொப்பளிக்க
செண்பகப்பூமேனடிகள் திருவினைக்குத்தானாக
எத்தனைநேரமட்டாய் இளங்கொடியாள்கெஞ்சிநிற்க
இப்படிக்கிருக்க யிதுவுமக்குத்தருமமல்ல
பொற்கொடிமாதுக்குப் புஷ்பமதுகொடுத்தால்
சந்தோஷமாயிடுவாள் தருமமுடியழகி
சங்கரருமப்போது தயவாய்மனமிரங்கி
சிவனாருமப்போது திருமுடியைத்தானசைக்க
ஏலங்குழலாளும் இருகையுந்தானிறைய
வாங்கிமடியில்வைத்தாள் மதுரைவளநாடியரும்

சொக்கர் தன்பிள்ளைக்குத் துணைபோனது.

சொக்கருங்கூட துணைபோகவேண்டுமென்றார்
சிவனாருமப்போது தேவிமுகம்நோக்கி
ஆரமுலையாளே ஆளடிமையானேமே
அது-சந்தோஷமென்று சங்கரியுந்தான்சிரித்தாள்
சொக்கருங்கூடத் துணையாகத்தான்போனார்
சந்நிதியைவிட்டுச் சுவாமியவர்போனார்
தீர்த்தமும்நீறும் திருமலைச்சந்தனமும்

கொண்டெதிரேதந்தார்கள் கொம்பேரிடையாட்கு
தீர்த்தம்தெளித்தார்கள் திருநூற்றுக்காப்பணிந்தார்

அல்லி கொலுவுக்கு வந்தது.

சந்நிதியைவிட்டுத் தையலருந்தானமர்ந்தாள்
படித்துறையுந்தான்கடந்து பாண்டிவளநாட்டாளும்
கோபுரவாசல் கொம்பனையுந்தான்கடந்து
தென்னந்தெருவும் தேரோடும்வீதிவிட்டு
மன்னர்தெருவுகளும் மாடோடும்வீதிவிட்டு
வாசற்படிகடந்து மண்டபஞ்சென்றேறினள்
தாமக்கருங்குழலாள் தாதியெதிரேவந்து
காலுக்குநீர்கொண்டு காரிழைமாரோடிவந்தார்
கோவிலுக்குப்போய்வந்தேன் கொம்பனையேதாதிகளே
இதுகளொன்றுநான்வேண்டேன் கொம்பனையேதாதி
களே, பாவையழகியரும் பள்ளியரைபோய்புகுந்தாள்
தழுவணையில்கைகொடுத்து தையலரும்வீற்றிருந்தாள்
அன்றுமுறையுடையார் ஆயிரம்பேர்ஓடிவர
அத்தனைபெண்களையும் அனுப்பிவிடைகொடுத்து
மெல்லியர்களெல்லாம் விடைபெற்றுபோனபின்பு
மங்கையரும்பள்ளிகொண்டாள் மாணிக்கமெத்தையிலே
விடிந்துவருவாரோ வேந்தனையுங்காண்பேனோ
வேல்பொருதுங்கண்ணாள் விசனமாய்பள்ளிகொண்டார்

புலந்திரன் புரவிமேற் போனது.

அந்நேரமிந்திரனார் ஆகாயமார்க்கத்திலே
ஆகாயமாய்ப்பறந்து ஆணழகன்வான்புரவி
மதுராபுரிகடந்து வைகைவளநாடுவிட்டு
வனமாய்வனங்கடந்து மலைகுகைகள்தான்கடந்து
கூடல்வளநாடு குலவீரன்றான்கடந்து

தருமாபுரங் காண்கிறது.

தாமரைசூழ்அல்லிமகன் தர்மபுரங்கிட்டினனே
அத்திபுரத்தை அடுத்தானலைதாரன்
எத்திசையுந்தோப்பும் எதிர்மலக்காவுகளும்
நாற்றிசையுந்தோப்பும் நல்லமலர்க்காவுகளும்
கொண்டாடிப்பூர்க்குமந்த குங்குமவெண்டாடை
நெடுநீலங்கோங்குவளை நீலவர்னகஸ்தூரி
பூமரங்களத்தனையும் பூர்த்துச்சொரிந்தனனே

மந்தாரைபுன்னைகளு மருவோடிருவாட்சி
மல்லிகைமுல்லை வாய்த்ததொருசெண்பகமும்
வாழுகின்றபுன்னைமரம் மாதுளம்பூவாசனையும்
திருவழகுஞ்சோலைகளும் தெய்வவுலகம்போல்
கண்டான்புலந்திரனுங் கண்கள்ரெண்டும்கொள்ளாதே
இத்தனைநாட்டையும் இளவரையன்தான்பார்த்து
இப்பெரியநாட்டைவிட்டு எங்கொளித்தாரையன்மார்
எந்தவனங்காடுறைந்தார் என்னுடையஐயன்மார்
மாயத்தார்சூதாடி மண்ணிழந்தார்பாண்டவர்கள்
கட்டழகனிந்திரனும் கண்களால்முத்துதிர்த்தான்
பூமரங்களத்தனையும் புலந்திரன்ருன்பார்த்து
பஞ்சவர்கள்கோமானும் பார்த்தன்றிருமகனும்
வந்தாரேஇப்பொழுது மச்சினியாள்கோவிலுக்கு
என்னத்தைநாம்கொடுத்து இந்திரனைக்காண்கிறது
பூவாலேபச்சைவடம் புலந்திரனைக்காண்கிறது
கொண்டுவந்துபோர்த்தினர் கொற்றவர்கள் இந்திரற்கு
பூமரத்தைப்பார்த்து புலந்திரனுங்கூறுகிருன்
காவலர்கள்பஞ்சவர்கள் காடுறைந்துபோயிருக்க
வண்டார்குழலாளும் மயிர்விரித்துபோயிருக்க
ஆர்முடிக்கப்பூர்த்தீர்கள் அழகியபூமரமே
மாற்ருன்முடிக்கவோ வந்துமலர்சொரிந்தீர்
பூமரங்கள்கூறும் புலந்திரனைதான்பார்த்து
ஐவரேநீர்கேளீர் அடியேன்விண்ணப்பமதை
மாலைமுடிபாண்டவர்கள் வனவாசம்போனவன்றே
காவலர்கள்பாண்டவர்கள் காடுறைந்தநாள்முதலாய்
கக்கப்புகழுடைய தர்மர்வனம்போனவன்றே
வண்டார்குழலாள் மயிர்விரித்துப்போனவன்றே
நல்லமழையுமில்லை நாட்டில்விளைவுமில்லை
செந்நெல்விளைவுமில்லை தேசஞ்செழிப்புமில்லை
பூவுகள்மலர்ந்து பூமரங்கள்பூவாது
ஆவுங்கறவாது அரும்பாவிபட்டணத்தில்
வெள்ளியுந்தெற்கடைந்து வேந்தனும்போய்மறைந்து
கன்னியுங்கால்மறுத்து கடலுந்திசைமாறி
பாழாயிருக்குதையா பட்டணங்களத்தனையும்
வேந்தர்பெருமாளே மலராகநாமிருந்தோம்

மாலைமுடியானே வருகிறதுநாமறிந்து
இப்போதிலை துளிர்த்து இந்நேரம்பூபூர்த்தோம்
வருகிறநாளறிந்து மலர்சொரிந்தோமன்னவரே
வருவதற்குமுன்னமே மன்னவரேபோவோம்வா
போரஞ்சாவீரன் புலந்திரனுங்கூறுகிருன்
ஓட்டினார்பன்னிரண்டு உத்தமர்கள்பஞ்சவரை
மாலைமுடிபாண்டவர் வருநாளுந்தானுச்சு
ஆளுவார்பாண்டவர்கள் மாளுவார்நூற்றொருவர்
நம்முதேநாடுகளும் நமக்குத்தான்ராச்சியமும்
எதுக்குமஞ்சாதே யிருமென்ருர்மன்னவரும்
அப்போதுபூமரங்கள் அழகுமெத்தைதான்போல
புட்பமதைசோடித்து புலந்திரற்குதான்கொடுக்க
தருமாபுரத்தில் அதிசயங்காண்கிறது.
அப்பால்திரும்பி ஆணழகன்வருகையிலே
அக்காட்டில்வீற்றிருக்கும் அன்னமுந்தாராவும்
மானும்கலையுமே மயிலுங்குயிலினமும்
சித்தானைக்கன்றுகளும் சிறுத்தைபுலிக்குட்டிகளும்
காட்டானைக்கன்றுகளும் கரடிபுலிசிங்கங்களும்
பாடிபறந்துவரும் பஞ்சவர்னக்கிளிகளும்
ஐந்துதலைநாகமது ஐவர்திருமகற்கு
மாணிக்கமின்னவே மணிவிளக்காய்கொண்டுவந்து
முத்துமுடிமன்னன் முன்கையிலேருதுகாண
மகாமிருகமத்தனையும் வந்தெதிரேகண்டது
வந்தெதிர்கண்டதை மன்னவனுந்தான்பார்த்து
போரஞ்சாவீரன் புலந்திரனுங்கூறுகிருன்
என்னமாயிருந்தீர்கள் இத்தனைநாளிவ்விடத்தில்
பாண்டவர்கள்போனபின்பு பாலமிர்தம்போதாதோ
தாயாதிவாசலிலே சத்துருவின்வாசலிலே
பகையாளிவாசலிலே பாலமிர்தம்உண்டீர்களோ
என்றுமிவருரைக்க யியலானமிருகமெல்லாம்
மகாமிருகங்கள் மன்னன்முகம்நோக்கி
மாலைமுடிபாண்டவர்கள் வனவாசம்போனவன்றே
வண்டார்குழலாள் மயிர்விரித்தநாள்முதலாய்
மன்னவர்கள்ராசாக்கள் வனம்போனநாள்முதலாய்
நாங்கள்-ஒக்கக்குடியிருப்போம் வுத்தமரேயெல்லோரும்

கொங்குமலையிலே குடகுமலைநாட்டிலேயும்
அங்கங்கேசேர யமர்ந்திருந்தோமெல்லோரும்
மாலைமுடியாரே நீர் வருகிறசெய்திகண்டு
காணவிருப்பமுடன் காவலரேவந்தோம்காண்
போரஞ்சாவீரன் புலந்திரனுங்கூறலுற்றான்
அவன்-ஓட்டியபன்னிரண்டில் மூன்பதுந்தானுச்சு
மூன்றுவருஷமின்ன முடிமன்னராளுவதும்
அப்பாலேவீமன் அவர்கள்திருமுடியை
தெண்டுக்கிறைகொடுப்பார் திரியோதிரன்படையை
நம்மதேநாடுகளும் நமக்குத்தான்ராச்சியமும்
அஞ்சாதிருங்களென்று அப்புரந்தானடந்தார்

பாண்டவர்களரண்மனை காண்கிறது.

ஐவரரசாண்ட அரண்மனையைக்கிட்டினானே
கொற்றவர்களது கொலுக்கூடங்காட்டினானே
பாண்டவர்கள்வீற்றிருக்கும் பாரமணிமண்டபத்தே
பொற்றூணும்நற்றூணும் பேரிகையுத்தரமும்
உத்தரமுஞ்சித்திரமும் ஒக்கநிழற்காட்ட
இருட்டிருக்குமாதினமும் எறிமணிசிங்காதனமும்
போட்டிருக்குமந்த பொன்னாலே ஆதினமும்
தருமராது ஆதினமும் சகலகலையாதினமும்
வீமராது ஆதினமும் விசயனார் ஆதினமும்
நகுலராது ஆதினமும் சகாதேவராதினமும்
மன்னவர்களாதினத்தில் மாற்றானைக்கண்டானே
தருமராது ஆதினத்தில் சண்டாளனள்கிறானே
பாண்டவர்கள்தன்னுடனே பகுந்தரசாளாமல்
பாதிஅரசுஅவர் பங்கிட்டுஆளாமல்
எதனாலேகாடுறைந்தார் யென்னுடையஐயன்மார்
தருமத்தையெண்ணியவர் தரணியிழந்தார்கள்
புண்ணியத்தையெண்ணியவர் பூமியிழந்தார்கள்
அரண்மனையைப்பார்த்து அழகியகணமுத்துதிர்த்தான்

துரோபதை யரண்மனைகாண்கிறது.

தோராவடிவழகி துரோபதையாள்வாசலிலே
தையலதுவாசலிலே தங்கப்பொன்னாற்சமைத்து
நாணற்கொடிமுறுக்கி நற்கொடியாள்முத்தமுத்தி
பானுஞ்சுடரும் பசும்பொன்னாலேயடித்து

மாணிக்கத்தாலும் வைடூரியத்தாலும்
ஆச்சிதலைவாசல்கண்டு ஆணழகன்வயரெறிந்து
மாளிகையுமிங்கிருக்க மண்டபமுமிங்கிருக்க
ஆண்டமனைகளும் அரண்மனையுமிங்கிருக்க
எழுநூறுதாதியர்கள் இணைகவுரிதான்வீச
மூந்நூறுதாதியர்கள் முறைசெய்துவந்துநிற்க
ஏறியிருக்குமந்த யிட்டசிங்காதனமும்
ஆச்சிமாரெல்லவரும் அடியாளையாளவந்தீர்
பறுகல்உருத்தவே பறுமணல்தானுதிர
காடுதலையிழுக்க கன்னிதுயில்முள்ளிழுக்க
கானலிலும்வெய்யலிலும் கதரியவர்திரிய
எக்காட்டுக்குள்ளே யிருக்கிருளென்தாயார்
ஆச்சிதலைவாசல்கண்டு அழகியகண்முத்துதிர்த்தான்
இந்திருமப்போது ஏங்கியழும்போது
கொண்டுபறந்ததப்போ குலவீரன்றன்புரவி

புலந்திரன் அத்திபுரங்காண்கிறது.

ஆகாயமார்க்கத்திலே அப்புரவிதான்பறக்க
அத்திபுரங்கண்டாரே ஐவர்திருமகனர்
அந்தவளநாட்டை அடுத்தது அப்புரவி
அம்பலமோவென்றால் ஐந்நூறுகாதவழி
இடம்பெரியவாசலது யெழுநூறுகாதவழி
தூணுக்குத்தூணுமங்கே தொண்ணூறுகாதவழி
ஆயிரங்காதவழி அகலமுள்ள அம்பலத்தில்
நானூற்றுக்காதமது நலம்பெரிய அம்பலத்தில்
முற்நூற்றுக்காதமது முத்தணிந்த அம்பலத்தில்
பொற்றூணும்நற்றூணும் பேரிகைஉத்தரமும்
குளிர்ந்தசந்தணத்தூணுங் குங்குமநற்றூணும்
தூணுக்குத்தூணு துணைமலையாய்ச்சேர்த்து
மெத்தையலங்கரித்து மேற்கட்டுதான்கட்டி
சுத்தியலங்கரித்து தோரணங்கள்தான்கட்டி
கண்ணுடிசல்லிகட்டி காவலன்றன்னம்பலத்தில்
சங்கிறைத்தமண்டபமுந் தங்கமுத்துமாலைகளும்
எங்கெங்குஞ்சோதியிட எழில்முத்துமாலைகளும்
வந்துநிழல்காட்டும் மாணிக்கமாலைகளும்
வாடாததாமரையும் வந்துநிழல்காட்ட

முத்துமரகதமும் முழுபன்னீர்மாலைகளும்
தங்கத்தால்பொம்மைகளும் செங்கழுநீர்மாலைகளும்
செம்பொன்னூர்சிலைகளும் செம்பவளத்தூணுகளும்
எங்கெங்குஞ்சோதிவிட இராசாவினம்பலத்தே
சித்திரஞ்சேர்மண்டபத்தில் செம்பவளமாலைகளும்
வந்துபரிமளங்கள் வாசனைகள்தான்வீச
வாழைகமுகுகளும் வர்னபலாச்சோலைகளும்
சேரவேநாட்டியே திகழ்பெரிய அம்பலத்தில்
நின்றவிடந்தோறும் நிலைதோறும்சப்ரமஞ்சம்
பார்த்தவிடந்தோறும் பந்தங்கள்சேர்விளக்கும்
காடைவிளக்குகளும் கைவிளக்குத்தேர்விளக்கும்
ஏணிவிளக்குகளும் எண்ணுததேர்விளக்கும்
தருமமுடியார்க்குச் சப்பிரநல்விளக்கும்
பந்தங்கள்சேர்வையும் பகல்வத்தியிடிபாணம்
பூவர்ணமத்தாப்பும் பொரிபாணந்தான்முழங்க
எத்திசையுந்தான்முழங்க யிட்டிருக்குமம்பலத்தில்
ஏறியிருக்குமந்த எழுமணிசிங்காதனமும்
வந்திருக்குமன்னர் மகாசேனைதன்னுடனே
முந்நூறுகோடி முடிமன்னரங்கிருக்க
ஈட்டிபிடிமன்னர்கள் யிளவரையரங்கிருக்க
பாங்குபிடிக்கிறதோர் படைமன்னரங்கிருக்க
கத்திபிடிக்குமன்னர் காவலர்களங்கிருக்க
கோடிலட்சங்கோடி கொற்றவர்களங்கிருக்க
சட்டைகழட்டாத சாமந்தரங்கிருக்க
வேதபிராமணரும் வேதியருமங்கிருக்க
பாஞ்சாலமகாராசன் படைகளுமங்கிருக்க
காசிவளநாடாண்டார் கர்னனதுசேனைகளும்
துரும்பரையத்தேன்சொரியும் சோழன்பரிகலமும்
ஏடல்வோதாரனவன் யிடும்பன்பரிகலமும்
ஆரங்கவேதமோதும் அகஸ்தியனூர்தந்தருளும்
மதுரைபரிகலமும் வளநாடிசேனைகளும்
ஏழுலகுராசாக்க ளெங்கும்நிறைந்திருப்பார்
தங்கைமணவாளன் தறுதலையனங்கிருந்தான்
தருமமுடியழகன் சகலருமங்கிருந்தார்
முந்நூறுதாதியர்கள் முத்தின்கவுரியிட

ஐந்நூறுதாதியர்கள் அஷ்டகவுரியிட
எழுநூறுதாதியர்க ளிணைகவுரிதான்வீச
பச்சோலைப்பெண்கள் பரிந்துகவிபாட
மேளவகைகளும் விருதுபலமுழங்க
கவியோர்கவிபாட கட்டியங்களார்ப்பரிக்க
புலவரிருபுறமும் பூவருஷமாய்ச்சொரிய
கீதமேந்தும்ரம்பை கின்னரிகள்வாசிக்க
வீணைகள்கின்னரிகள் வேணபடிவாசிக்க
கர்னன்றிருமருங்கில் கட்டியப்பூச்சக்கரங்கள்
திரியோதிரன்மருங்கில் சிறப்பாகபூச்சக்கரங்கள்
கர்னன்றிருமருங்கில் கண்டுசுழலமிட
அவர்குழலில்மாலை இவர்குழலில்தானுட
இவர்குழலில்மாலை அவர்குழலில்தானுட
ஏறியிருந்தார்கள் யிருவருஞ்சிங்காதனத்தை
கண்டான்புலந்திரனும் கண்கள்ரெண்டுங்கொள்ளாதே
பாண்டவர்தன்னுடனே பகுந்து அரசாளாமல்
பாதி அரசு அவர் பங்கிட்டு ஆளாமல்
எதினாலேகாடுறைந்தார் என்னுடையஐயன்மார்
இக்கோடிராசமன்னர் இருக்கயிடமிருக்க
ஐவரந்தபாண்டவர்கள் அவர்க்கிடமில்லையென்று
அந்நேரங்காட்டே அடித்தோட்டிவிட்டானே
நிற்குமோயிவ்வாழ்வு நிலைக்குமோயிவ்வரசு
இப்பெரிய அம்பலத்தில் இருந்தராசர்தங்கள்முன்னே
கட்டழகியென்தாயார் கால்நடையாய்வந்தாளோ
பார்த்துமிருந்தாரோ பாண்டவர்களைவருந்தான்
கண்டுமிருந்தாரோ காளையவரைவருந்தான்
தக்கப்புகழுடைய தருமராஜ ஆயுதமும்
ஏழானைபலமுடைய இயல்வீமராயுதமும்
ஆணலழகுமன்னன் அருச்சுனர்கை அம்புவில்லும்
நாமக்கொடியுடைய நகுலராஜ ஆயுதமும்
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவர்கைவாளும்
எதுக்கென்றிருந்தது எங்களையராயுதமும்
தன்றேவிக்கில்லாத தைரியங்களேதுக்கு
வெற்றிமதயானை வீமர்பொறுக்காரே
அர்ச்சுனராசதுரை யார்சொல்லுங்கேளாரே

ஆர்சொல்லுங்கேளாரே ஐயமார்நால்வருந்தான்
தக்கப்புகழுடைய தருமர்சொற்கேட்பாரோ
அன்றுநான்சற்றே அறிந்திருந்தேனுமாகில்
தக்கப்புகழுடைய தருமர்சொற்கேளேனே
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியை
வெட்டிபெலியிடுவேன் வீரமாங்காளியற்கு
பட்டந்தரித்து பாருலகையாளவைப்பேன்
காவலர்களைவருடன் கைகூட்டிசேவிப்பேன்
இது-பத்தினியாள்நின்று பரதவிக்க அம்பலமோ
உத்தமியாள்நின்று துகில் உறிகொடுத்தவம்பலமோ
பாவைமனமுருகப் பருந்தாட்டமாட்டிவைத்தான்
அம்பலத்தைப்பார்த்து ஆணழகன்வயிறெறிந்து
கட்டழகன்கோமானும் கண்ணீறையமுத்துதிர்த்தான்
இந்திரனுமங்கே ஏங்கியழும்போது

புலந்திரன் கலந்தாரிகோட்டையைக் காண்கிறது.

மேலாய்ப்பறந்தது வேந்தனதுதன்புரவி
காரிழையாள்மாது கலந்தாரிகோட்டைகளாம்
கற்கோட்டைமுத்திரையுங் கர்னனதுகாவல்களும்
ஆழமணல்பறித்து ஆகாயக்கோட்டைகட்டி
சுற்றிமதிலெழுப்பி சூரியனைக்காணமல்
அஷ்டமதிலெழுபபி ஆதித்தனைக்காணமல்
வாசற்பதினெட்டும் வைத்திருக்குங்காவல்களும்
விழித்தகண்சிமிட்டாத மெல்லியற்குகாவல்களாம்
தாமக்குழலாட்கு தலையாரியோடிவந்து
நாகசுரமூத நற்கவரிகொம்பூத
கூடமுழங்கவே குலவீரர்நற்சூழ
ஆர்ப்பரித்துஓடிவந்தார் அன்னநடையாட்கு
கண்டார்புலந்திரருங் கண்கள்ரெண்டுங்கொள்ளாதே
இது-மாமன்மார்காவல்களோ வைத்தவரிசைகளோ
அம்மான்மார்காவல்களோ அத்தைவரிசைகளோ
என்றுநகைத்து இந்திரரும்பார்த்திருந்தார்

சொக்கர்பிராமணர்போல்வந்து கருணருக்குச் சொல்வது.

மாலைமுடியானும் வருவதற்குமுன்பாக
சோலைமலருடைய சொக்கருமப்போது

பஞ்சாங்கவேதியன்போல் பரமன்வடிவெடுத்து
மன்னன்கருணன்முன்பு மறையவர்போலேவந்து
ஆள்வருத்தாய்காணுகுது அதிகருணவீரியரே
பத்திரமென்றுசொல்லி பரமனும்போய்மறைந்தார்
சொல்லியேபோய்மறைந்தார் சொக்கருமப்போது

கர்னர் கலந்தாரி கோட்டை வருகிறது.

அங்கதேசநாடாளும் அதிகர்னவீரியரும்
காரிழையாள்மாது கலந்தாரிகோட்டைவந்தார்
எண்ணவொண்ணுமகாசேனை எண்பத்தெண்ணுயிரம்பேர்
உருவின ஆயுதத்தை உரையிலேபோடாமல்
விழித்தகண்சிமிட்டாமல் மெல்லியரைப்பார்த்திருந்தார்
தருமமுடியானும் தலைவாசல்வந்துநின்று
அத்தண்டகாவலரை அதிகர்னர்தான்பார்த்து
அந்தப்பொழுதிலே ஐவர்வந்துசொன்னரே
காவலர்கள்வீரியரே கண்ணுண்டாய்பார்த்திருங்கள்
திட்டங்கள்சொல்லியே திரும்புமந்தவேளையிலே

கர்னன் கலந்தாரிக்கு நடனசேர்வை வைத்தது.

சுந்தரப்பூமுடியாள் தூக்கம்வருகுதென்று
கேளிக்கைவேண்டுமென்ருள் கிளிமொழியாள்நாயகமும்
அப்படியேநல்லதென்று அங்குராயசீர்கருணர்
நட்டுமுட்டுநாடகங்கள் நலமுடனேயனுப்பிவைத்தார்
சதுர்தீர்ந்துகொலுவதனில் தானமர்ந்தார் கொலுவதனில்
அப்போதுமாதருக்கு ஆடலும்பாடலும்
பதினெட்டுமேளமும் பண்பாகத்தான்முழங்க
சிற்றிடையாள்மாதர்கள் சிலம்புகலகலென்ன
ஆடலுங்கூற்றும் அரம்பையர்நாடகமும்
நாடகமும்கூற்றும் நடுநடுவேசிந்துகளும்
ஆடாதகூத்துகளும் ஆடினுராயிரம்பேர்
கேளிக்கைபார்த்திருந்தாள் கிளிபவளவாயாளும்

புலந்திரன் ஆகாயத்தில் அதிசயப்படுகிறது.

ஆடல்பாடல்சத்த மாகாயந்தான்கேட்க
பெண்கள்குரலோசை புலந்திரற்குகேள்விபட
கோட்டையில்கேட்கிறது கொம்பனையாளிருப்பிடமோ

தேவடியாள்சந்ததியோ தேன்மொழியாள்வாசலிலே
காதுற்றுக்கேட்டிருந்தார் கனத்தபுரவியின்மேல்

கலந்தாரிக்குச் சொக்கர் சொர்ப்பனஞ் சாதித்தது.

மாலைமுடியானும் வருவதற்குமுன்பாக
சோலைமலருடைய சொக்கருமேதுசொல்வார்
பஞ்சாங்கவேதியன்போல் பத்தினியாள்பக்கம்வந்து
மாதுநித்திரைசெய்கையிலே மறையவர்போலவந்து
மங்கையரேயுன்னுடைய மணவாளன்வந்தான்காண்
வந்தான்காணென்றுசொல்லி மாயமாய்போய்மறைந்தார்
வாசற்படிதனிலே மன்னன்நிற்கக்கண்டாளே
ஏறிட்டுபார்த்ததுபோல் இந்திரனார்சீர்வடிவை
அலர்தாமரைநிறமும் யார்பவளச்செவ்வாயும்
மார்பில்பதக்கமும் வச்சிரமணித்தாழ்வடமும்
காதில்மணியழகும் கட்டழகன்ஒப்பனையும்
உத்தமர்கள்புத்திரன்றன் உறுமாலைகட்டழகும்
ஒருவர்க்கொருவர் உவந்துமிகப்பேசினதும்
உத்தாரமுறவுகளும் உறமுரைக்கட்டளையும்
மதுரையடையாளம் மாதுகையில்கொடுத்ததுவும்
மாணிக்கமெத்தையிலே மன்னவருஞ்சென்றேறி
வெற்றிலைகள்தின்று விரும்பிவிளையாடினதும்
தக்கோலந்தின்று தழுவிவிளையாடினதும்
மாதுவிடையில்லாமல் மன்னனெழுந்திருந்து
போனாற்போல்கண்டு பொற்கொடியும்கண்விழித்தாள்
சொர்ப்பனங்கண்டதல்லால் சுந்திரரைகண்டதில்லை
என்-சென்மமொழியுமட்டும் சிறையிருக்க நீதியுண்டோ
வண்ணச்சிறையிருக்க வைத்தீர்மகாதேவா
இச்சிறைகாக்கயென்னை ஈஸ்வரரேவைத்திரோ
மைத்துனரைத்தானினைந்து மாதுமனந்தானுருகி
எக்காலஞ்செல்லுமோ இந்திரரைநான்காண
கண்டகனவையெல்லாம் காரிழைமார்தன்னுடனே
தோழிமார்தன்னுடனே சொன்னேமேயாமாகில்
எந்நாளுமிந்நினைவே என்பார்களேந்திழைமார்
தாமக்குழலாளுந் தன்மனதில்தானடக்கி
வேல்பொருதுங்கண்ணாளும் விசாரத்துடன்படுத்தாள்

கலந்தாரி தாதிமார் காற்று ஒடுக்கத்தால் வேறொரு
மண்டபம்போய் படுத்தது.

ஆரணங்குதோழிமார் ஆறுயிரம்பேரும்
அம்மானைப்பந்து மாடுங்குழலாடி
உடனேகபள்ளிகொண்டார் உண்டானதாதியர்கள்
பாதியிரவும் பதினைந்துநாழிகைமேல்
வாரியெழுந்திருந்து மங்கையர்களெல்லோரும்
ஒடுக்கத்தினாலே உள்ளமெல்லாம்வியர்வையிட்டு
அந்தவிடம்விட்டு அப்பாலேமண்டபத்தில்
சித்திரஞ்சேர்மண்டபத்தில் தேன்மொழிமார்போய்படுத்
தார், மண்டபகூடத்தில் மங்கையவள்போய்படுக்க
ஒண்டிதனியாகவே ஒளிபிரந்தகண்ணாளும்
கட்டார்கருங்குழலும் கலந்தாரிநாயகியும்
வேல்பொருதுங்கண்ணாள் விசனமாய்பள்ளிகொண்டார்

புலந்திரன் கோட்டைக்குள் வருகின்றது.

அந்தச்சமயத்தில் அழகுபுலந்திரனும்
ஆகாயமார்க்கத்திலே ஐவர்மகள்புரவி
மேலாய்ப்பறந்து வேந்தனதுதன்புரவி
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
ஆறுசுற்றுகோட்டைக்குள்ளே அங்கொருவர்காணாமல்
தாதியர்களண்டையிலே தாவியிறங்கினது
ஏறிட்டுப்பார்த்திருந்தா ரிந்திருமப்போது
ஒக்கபணிபூண்டு ஒருநிறமாய்ப்பட்டுடுத்தி
கூடப்பணிபூண்டு கெம்பனைமார்பட்டுடுத்தி
தேன்மொழிமாரெல்லோருஞ் சேரப்படுத்திருந்தார்
அதுகண்டுபுலந்திரும் ஐவரைமனதிலெண்ணி
ஆறுயிரம்பேரில் ஆரென்றுநான்காண்பேன்
ஆரென்றுசற்றேநா னாய்ந்துபார்ப்பேனோ
பூவணைமெத்தைகளில் பொற்கொடிமார்படுத்திருக்க
ஆரமுலையாளே யாரென்றுநான்காண்பேன்
ஏதுக்குஇங்குவந்தேன் என்தாயார்கட்டளையால்
மண்ணாழிகாலமெல்லாம் வையகத்தையாண்டாலும்
பெண்புத்தியிப்போ பிடரியிலேயென்பார்கள்
ஏதுக்கும்நம்மையிங்கே இசைந்துவரவிட்டாளே
நின்றுபுலந்திரரும் நெடுமூச்சுதானெறிந்து

கட்டழகிநாயகியை கண்டதில்லையென்ரூரும்
காணுமல்நாமும் கனமதுரைபோனக்கால்
வாளால்துணிப்பாளே மைந்தனென்அம்பாராளே
வேந்தர்பெருமாளும் விசாரமிடும்போது

புலந்திரனை புரவி இறக்கிவிட்டது.

அப்போதுதன்புரவி அந்தவிடம்விட்டு
மாதுயிருக்குமந்த வாசற்படிமுன்னலே
கொண்டுவந்துவிட்டது கொற்றவனர்தன்புரவி
தாழயிரங்கியே தருமர்திருமகனை
மேல்பரந்துநின்றது வேந்தனவன்புரவி

புலந்திரன் கதவைத் திறந்தது.

தாள்பூட்டிருந்ததொரு தையலதுபொற்கதவு
மந்திரவாள்தானெடுத்து வைத்தார்மணிக்கதவில்
தானய்திறந்தது தையலதுபொற்கதவு
மெள்ளநுழைந்தாராம் மெல்லிபடுக்கையிலே

புலந்திரன் பெண்சாதியைக் கண்டது.

வாசற்படிதனிலே வந்துநின்றுமன்னவனும்
வாள்மேலேகையைவைத்து மன்னவரும்பார்த்தாராம்
ஏறிட்டுப்பார்த்தார் இந்திரரும்தேவியரும்
வளர்ந்தெழுந்தமார்பும் மாதுயிருஸ்தனமும்
திரண்டெழுந்தபூமுலைமேல் செந்தாமரையழகும்
கண்புருவம்ரெண்டுங் கருங்குருவிவாலதுபோல்
மூக்குத்திருவழகும் மூன்ரும்பிறையதுபோல்
நாக்குத்திருவழகும் நான்காம்பிறையதுபோல்
பல்வரிசைஆணிமுத்தும் பார்க்கமுடியாது
தாடையிருபுறமும் தங்கப்பலகையைப்போல்
இருதுடையின்றன்னழகும் இளவாழைதண்டதுபோல்
அழகுதிருமார்பில் ஆபரணஞ்சோதிமின்ன
மாருமல்பூண்டதொரு மாணிக்கம்நின்றிலங்க
கண்டுபுலந்திரனுங் கண்கள்ரெண்டும்கொள்ளாமல்
இப்படிக்குமீறி ஏந்திழையும்வளர்ந்திருக்க
வைத்தேனேவன்சிறையில் மாபாவியானேனே
பள்ளியறைசோடிப்பை பார்த்தார்பலகாலும்
வண்டார்குழலாளும் வாழாப்பெண்ணுயிருக்க
மாதுக்குமாமன்மார் வைத்தவரிசைகளோ

ஏறிட்டுத்தான்பார்த் திந்திருமெத்திசையும்
மெத்தையலங்கரித்து மேற்கட்டுதான்கட்டி
சுற்றியலங்கரித்து தோரணந்தான்கட்டி
கண்ணடிசல்லிகட்டி கனக்கவலங்கரித்து
நான்குபுறமும் நவரத்தினக்கால்நிறுத்தி
சங்கிழைத்தசப்பிரமுஞ் சாதிலிங்கமாலைகளும்
சித்திரஞ்சேர்மண்டபமும் சேரவலங்கரித்து
மல்லிகைமுல்லையுடன் வாய்த்தசிறுசெண்பகமும்
வெட்டிவேர்மருக்கொழுந்து இணைமல்லிபூச்சரமும்
தூணுக்குத்தூணு துணைமாலை தூக்கிவைத்து
வந்துபரிமளங்கள் வாசனைகள்தான்வீச
முத்தாலேதோரணங்கள் முறைமுறையாய்க்கட்டிருக்க
பந்தலிலேநல்ல பவளக்கால்தூணிருக்க
சித்திரஞ்சேர்பூம்பட்டை சிறுகமடித்திட்டு
சாருமணைபோட்டு தழுவணையுந்தான்போட்டு
ஊணுகப்பூச்சொரிந்து ஓடமலர்க்கண்ணட்கு
காம்பரிந்தவைங்கலப்பூ காரிழைக்குத்தான்சொரிந்து
மெல்லியப்பூம்பட்டு மேலேயணைபோட்டு
சந்தனமுஞ்சாந்தும் தையலர்க்குத்தானுமிட்டு
புனுகுடனேகஸ்தூரி போதவேதான்வைத்து
மடித்தயிலைச்சுருளும் வண்ணப்பலாக்காயும்
செம்பொன்றளிகை திருவணைக்குவைத்திருக்க
தங்கப்பதக்கம்வைத்து சந்தனக்கிண்ணம்வைத்து
கெண்டியிலேதண்ணீரும் கிளிமொழிக்குவைத்திருக்கும்
கற்பூரமுத்தும் காராவிநெய்வார்த்து
குத்துவிளக்குக் கொழுந்துபடதானேற்றி
இருபுறமுங்குத்துவிளக் கெரியவேயேந்திழைக்கு
பொம்மைபதுமைகளும் பொற்கொடியைச்சூழ்ந்திருக்க
அன்னநடையாட்கு அரும்பதுமைதானிருக்க
வெண்சாமரைவீச மெல்லியற்குபொம்மையெல்லாம்
கட்டழகிநாயகிக்கு கைவிளக்குகொண்டுவந்து
ஆரமுலையாட்கு ஆலாத்திகொண்டுநிற்க
செம்பிலேதண்ணீர்கள் சிலபொம்மைகொண்டுநிற்க
பொம்மைபதுமைகளை புலந்திரருந்தான்பார்த்து
வரும்போதுசொன்னளே வையைவளநாட்டியரும்

ஆராய்ந்துமெத்தையை அன்புடனேதான்பார்த்து
பார்த்திருந்தோமென்றுசொல்லி பதறியெழுந்திருந்து
வாளுருவிகைபிடித்து மன்னர்பெருமாளும்
மாணிக்கமெத்தையை மன்னவனுஞ்சுற்றிவந்தான்
பொம்மையைக்கண்டானே பின்பொருபெண்ணறியான்
நீங்களோவென்றுசொல்லி நிற்றிலங்குபூமுடியான்
தானுஞ்சிரித்துமே தனஞ்செயன்கிட்டவந்தான்
ஏறிட்டுப்பார்த்தாரே இந்திருந்தேவியரை
கொண்டைமுடியழகும் கொம்பனையாள்சீரழகும்
பொருந்துமயிரழகும் பொன்பிறைசுட்டிகளும்
கட்டழகிநெற்றியிலே கஸ்தூரிபொட்டழகும்
இட்டதிருநீறு இருகாதில்குறையழகும்
மாணிக்கமின்னவே வைடூரியமின்ன
ஆணிபொன்னுலிழைத்த அன்னத்திருகொப்புகளும்
மாணிக்கவாளி மயிரின்கீழ்சோதிமின்ன
ஊஞ்சலிட்டகாதுக்கு ஒற்றைப்பணிதிகளும்
காரைக்கழுத்தழகும் கட்டிவடந்தன்னழகும்
பாரியரெட்டை பவழத்துதாழ்வடமும்
முன்கைமுதாரிகளும் முழுகடகமோதிரமும்
சந்திரகடகமுந் தாயித்திசோதிமின்ன
அஸ்தகடகமும் அழகானமோதிரமும்
பாடகத்தோடும் பணிசிலம்புசோதிமின்ன
காலாழிபீலிகளும் கட்டழகிசீர்வடிவும்
காலைத்தொடங்கியே கரியகுழல்வரைக்கும்
ஏறிட்டுபார்த்தாரே இந்திரும்தேவியரை
ஈஸ்வரனார்தேவியவள் ஈஸ்வரியுமீடல்லவே
மாயவனார்தேவியவள் மாதுமெதிரல்லவே
இந்திரனார்தேவியவள் இந்திராணியீடல்லவே
தாமக்குழலாளை தட்டியெழுப்பினல்
கூவியெழுந்திருப்பாள் கொம்பனைக்கென்னசொல்வேன்
ஓடிவருவாரே உண்டானகாவலர்கள்
வேந்தன்புலந்திரனார் விசாரமிட்டுநின்றாரே

பெண்ணைப் புலந்திரன் எழுப்புதல்.

எப்படியெழுப்பலாம் ஏந்திழையேயிப்போது
சந்தனத்தைவாரி தையலர்மேல்விட்டெறிந்தான்

சில்லென் றுரைக்க தேன்மொழியாளப்போது
பல்லியெச்சலிட்டதென்று படுத்தாளே தான்திரும்பி
அப்புறத்துக்கிப்புறமாய் அவள்திரும்பித்தான்படுத்தாள்
அன்னநடைமாது அசையாமல்பள்ளிகொண்டாள்
போரஞ்சாமன்னர் புலந்திரருந்தான்பார்த்து
கண்டாரேயிந்த கட்டழகிநித்திரையை
நாமானலாச்சுது நாயகியாள்நித்திரைக்கு
இன்னொருவரானல் இப்படியேநித்திரைகள்
நித்திரைசத்துருவு என்பதெல்லாங்கண்டோமே
நித்திராதேவியெனும் நேரிழையைவேண்டினனே
ஒருசாமப்பொழுதிலே உத்தமியேயிங்குவந்தேன்
ஒருசாமமட்டாய் இருந்துவிளையாடி
வெடியவொருசாமத்துக்குமேன்மையுடன்போகவேணும்
இரவும்பகலும் இணைபிரியாயேந்திழையே
மாதினதுகட்டில்விட்டு மங்கையேநீபோய்வா
இன்றையராவிக்கு இடமுந்தான்வேண்டுமென்றான்
நித்திராதேவியவள் நேரிழையாள்தான்பார்த்து
பூவணையைவிட்டுமே பொற்கொடியுந்தானிறங்கி
மங்கையர்கள்பள்ளிகொள்ளமண்டபத்துக்குள்புகுந்தாள்
நீத்திராதேவியவள் நேரிழையாள்போனபின்பு
போரஞ்சாமன்னர் புலந்திரவீரியரும்
தேவிமுகம்பார்த்து செம்பொன்முடியானும்
தேவேந்திரபகவான் திருநீற்றைதூவினனே
மந்திரவாளாலே மன்னவனுந்தட்டினனே

கலந்தாரி புலந்திரரைக்கண்டது.

சற்றேதான்தட்டலுமே தாமக்குழலாளும் [து
பொட்டெனவேகண்விழித்து பொற்கொடியுந்தான்பார்த்
உள்ளம்நடுங்கி உடம்பெங்கும்விடவிடென்று
பூவணையைவிட்டுமே பொற்கொடியுந்தானிறங்கி
மாணிக்கத்தூணருகே மயில்போலேநின்றுகொண்டு
ஏறிட்டுப்பார்த்தாளே இந்திரனர்சீர்வடிவை
அங்குராயமென்பார்கள் அவரல்லகாணுமென்பான்
காடுறைந்தபாண்டவர்கள் காவலர்களானக்கால்
மாலைமுடியாரென் மாமன்மார்வந்தாரோ
அங்கவர்காணுமவன் அல்லவர்தான்பார்த்து

முடிபணியும்பாண்டவர்கள் முதுகாயிருப்பார்கள்
ஏதோயிருவரும் இளசாயிருக்குரோ
வாலைப்பிராயமது வயதுபதினாறிருக்கும்
வந்தாரொருவராய் மாளிகைக்குள்ளாக
தாதிமாரில்லாமல் தனியேயிருந்தேனே
வந்தவரிங்கே வலியபிடிக்கவந்தால்
நாயகனார்தாமெதிரில் நாக்கைபிடுங்கிக்கொள்வோம்
மாளும்படியொழிய மண்ணிலிருப்பதில்லை
கற்கோட்டைமுத்திரையுங் கர்ணனிடகாவலெல்லாம்
இத்தனையுந்தான்கடந்து மிங்குவந்தான்யாரோதான்
மாலைமுடியானும் மதிலேறிவந்தானோ
ஆருமறியாமல் அரண்மனையில்புகுந்தானோ
ஏறிட்டுப்பார்த்தாளே இந்திரனார்சீரழகை
வாசற்படியிலே மன்னவருந்தானிருந்தார்
வாள்மேலேகையை மன்னவரும்வைத்திருந்தார்
முத்தினுருமாலை முடிமேலேகட்டிருக்க
கட்டழகர்நெற்றியிலே கஸ்தூரிபொட்டுமிட்டு
இட்டதிருநீறும் இருகாதுதன்னழகும்
பூவிட்டகச்சையின்மேல் பொற்சட்டையுஞ்சொருகி
சருவிநிலாவை சரியிடிக்கும்பண்மலரும்
மார்பிற்பதக்கமும் வச்சிரமணிதாழ்வடமும்
ஆரபதக்கமும் அழகுசரப்பளியும்
செம்பொன்பதக்கமுஞ் சேர்ந்தசரப்பளியும்
முன்கைமுதாரியும் முழுக்கடகமோதிரமும்
முத்திரைமோதிரமு முன்கைகடகங்களும்
கச்சைகட்டுமென்மருங்கும் கத்திசொருகழகும்
அலைதாமரைநிறமும் அரபவளச்செவ்வாயும்
காலைத்தொடங்கிக் கரியகுழலளவாம்
ஏறிட்டுப்பார்த்தாள் இந்திரனார்தன்னழகை
இந்திரனார்தாமு மிவருக்கெதிரலவே
ஈஸ்வரனார்தாமு மிவருக்கெதிரலவே
பேரும்பெரிய பெருமாளெதிரலவே
இவன்வடிவழுமொப்பனையு மாளவென்றுவந்தானோ
திருவழகுமொப்பனையுஞ் சிதறவென்றுவந்தானோ
நாம்கூடினோமானுக்கால் கோவென்றுசாவலாமோ

இவன்மாளியதுமுன்னாக மன்னவனையாரென்று
மாணிக்கத்தூண்மறைவில் மயில்போலேதானின்று
பூஞ்சிலம்பாடகமும் போதவேசேர்ந்துவிட
கலந்தாரி புருஷனென்றறியாமல் வைகிறது.
கட்டழகிநாயகியும் கைநீட்டிவார்த்தைசொல்வாள்
அஞ்சாமல்வந்தவ நீ யார்காணும்சொல்லுமென்றாள்
கற்கோட்டைமுத்திரையுங் கர்னனதுகாவல்களும்
இத்தனையுந்தான்கடந்து யிங்குவந்தகாரணமேன்
மாலைமுடியானே என்மதிலேறிவந்தாயோ
உன்னழகோவென்றால் உவமையிடப்போகாது
என்னழகுமெங்கே எவ்விடத்தில்கண்டுவந்தாய்
முன்பின்பழக்கமது முகப்பழக்கந்தானுமுண்டோ
காலைநடைசந்தைகொள்ளகன்னியரைக்கண்டதுண்டோ
அந்திகடைசந்தைகொள்ள ஆணழகாகண்டாயோ
பொய்கைக்கரைதேடி போய்முழுகக்கண்டாயோ
வைகைக்கரையிலே வசந்தமாடக்கண்டாயோ
உப்பரிகைமேலேறி உலாவுகையில்கண்டாயோ
எங்கேயென்னைகண்டா யிவ்விடத்தில்வந்துநின்றாய்
தாண்டிகுதித்தாயோ தங்கத்திருமதிலை
எகிறிக்குதித்தாயோ யெந்தன்திருமதிலை
எகிறிகுதித்தாலும் எழுகுவலைக்காவலுண்டு
காட்டானைக்காண்கிலையோ கண்டதுண்டஞ்செய்கிலையோ
பெண்ணாளரண்மனையில் பெண்புலிகள்காவலுண்டு
பெண்புலிகள்காண்கிலையோ பொஞ்சிபோட்டுக்கொல்லலை
யோ, மலைநாகங்காண்கிலையோ வாரிவிழுங்கலையோ
போங்காணெழுந்திருந்து பொன்மணிவாசல்விட்டு
கேளாதுபோலே கேட்டிருந்தார்புலந்திரரும்
மற்றுமிளங்கொடியாள் மயிலனையாளேதுசொல்வாள்
ஊமைச்செவிடோ உணர்வில்லாவீரியரோ
செவிட்டுப்படுவானோ திறமையில்லாமன்னவரோ
காதுமக்குகேட்கிலையோ கன்னிநான்சொல்லுவது
என்னையெங்கேகண்டாயோ என்னழகுசிந்திவிட
சீதைபடையாத திருவழகுபடைத்தேனோ
அகலிபடையாத ஆணழகுபடைத்தேனோ
பாழாச்சிறையிருக்க மனைதேடிவந்தென்ன

வந்தவரானாலும் வாய்திறந்துபேசாமல்
மவுனமாய் நீயிருந்தால் வாளுக்கிறையாவாய்
ஆர்பெற்றபாலகனோ அன்னீதமாய்மாளவந்தாய்
போடா நீயெழுந்திருந்து பொற்கதவைதாள்பூட்ட
எழுந்துநடமன்னவனே எங்கதவைத்தாள்பூட்ட
பேசாமல்தானிருக்க பெண்கொடியுங்கோபித்து
மன்னன்முகம்நோக்கி மடந்தையருங்கூறுகிறாள்
தாரார்புகழுடைய தருமர்மருமகள்நான்
வெற்றிமதயானை வீமர்மருமகள்நான்
ஆணழகுமன்னன் அருச்சுனர்மருமகள்நான்
இரட்டையர்மருமகள்நான் திட்டமுடன்சொல்லுகிறேன்
ஆணாலேகெட்டவர்கள் ஆருமில்லைவையகத்தில்
பெண்ணாலேகெட்டகதை புண்ணியரேசொல்லுகிறேன்
ஸ்ரீராமர்தேவியவள் சீதையென்னும்பெண்ணரசை
தென்னிலங்கைராவணனும் சிறையெடுத்தான்மாபாவி
இராவணனுஞ்சிறையெடுக்க இராமர்வெகுகோபமதாய்
இலங்கையைத்தானழித்து ராவணனைக்கொல்லலையோ
பெண்ணாலேமாண்டானே பேரானராவணனும்
என்னாலே நீமாள முன்னாள்தலைவிதியோ
என்னாலே நீமாண்டால் உன்னைப்பெற்றாலலையாளோ
பெண்டிருந்தால்வாடாளோ புத்திகெட்டமன்னவனே
போடா நீமன்னவனே புறப்பட்டவழிதேடி
அவ்வார்த்தைசொல்லியும் அதற்குமிவர்பேசாராம்
கல்லுமனதுடையான் காரியத்தைபார்ப்போமென்று
மனைவிமனமறிய மௌனமாய்தாமிருந்தார்
கட்டழகிமாது நல்லாள் கலந்தாரியேதுசொல்வாள்
காவலைத்தாண்டிவந்த கட்டழகாமன்னவனே
காவலர்கள்கண்டாலே கத்திக்கிறையிடுவார்
பொற்கருணர்கண்டாலே போடுவார்பலியாக
திருவழகும்பாவனையுஞ் சிதறவென்றுவந்தாயே
வேண்டுமென்றுசொல்லி விரும்பித்தபசுபண்ணி
மாதவத்தால்பெற்றெடுத்த மாதாவறியாளோ
உன்-ஆச்சியறியாமல் அரண்மனைக்குவந்தாயோ
ஆருமறியாமல் ஆணழகாவந்தாயோ
வந்தவரலாற்றை வாய்திறந்துசொல்வாய் நீ

ஏதுக்குஇங்குவந்து இறக்கிருயுன் னுயிரை
குலமாதருக்காக குடியிருந்தார்மெத்தவுண்டு
தருமமுடியானே தருமமாய்ச்சொல்லுகிறேன்
தேவிக்காய்மாண்டவர்கள் தேசத்தில்கோடியுண்டு
உத்தமவீரியனே உன்னுயிரிழந்ததென்ருல்
தேவியரைக்கொள்ளுவாய் சிறுவரைப்பெற்றிடுவாய்
குலமாதர்தாமொழிய விலைமாதராகாதோ
விலைமாதராகாதோ வேறொருத்திகிட்டாதோ
கொம்பேரிடையாளே கோவிலிலேதேவடிமார்
அதிலொருத்தியாகாதோ அதிசயமுள்ளவனே
நூலால்கடுந்திரளார் வதைசெய்துபோட்டிடுவார்
காசிவளநாட்டாருங் கர்னருன்னைக்கண்டாக்கால்
ஏடல்லோதாரனவன் இருபிளவாய்போட்டிடுவான்
காடுறைந்தபாண்டவர்கள் காவலர்கள்கண்டாக்கால்
மாலைமுடியானேயென் மாமன்மார்கண்டாக்கால்
வெற்றிமதயானை வீமரிருந்தாக்கால்
செம்பொன்திருமுடியை தெண்டுக்கிரையிடுவார்
வயிரத்திருமுடியை வாளுக்கிரையிடுவார்
வெட்டிபிளந்திடுவார் வீமரதுதெண்டாலே
அதுவுந்தானல்லாமல் அரசாளும்நாயகியாள்
அல்லிமலரிலே அவதரித்தபெண்பெருமாள்
அரசாளும்நாயகியாள் அல்லியென்மாமியார்
ஆரவிளமுலையாள் அறிந்தாளேயாமாகில்
வாளாலேவெட்டி யெறிந்திடுவாளென்மாமி
கூடுபங்குபோடுவாள் கொம்பனையாளென்மாமி
ஆரோயிவளென்று ஆகடியம்பேசாதே
வேறொருத்தியென்றுசொல்லி வீம்புகளைப்பேசாதே
மற்றொருத்தியென்றுசொல்லி வம்புகளைப்பேசாதே
எழுந்துநடவுமென்ருள் ஏந்திழையாளப்போது

புலந்திரன் பெண்சாதிசொல்லுக்கு அதிசயப்படுவது.

போரஞ்சாவீரன் புலந்திரனுந்தான்கேட்டு
மனையாட்டிசொன்ன வார்த்தையதுகேட்டு
கட்டாணிவார்த்தைகளும் கைநீட்டுப்பேச்சுகளும்
ஒக்கநின்றுபார்த்ததில்லை உத்தமியாளென்தாயார்
தேவியதுவாய்ப்பிறப்பை திரள்வீரன்தான்கேட்டு

அரைத்திருந்தசந்தனத்தை அள்ளியறைந்தாப்போல்
வற்றிக்கிடந்த வருள்பெரியகாவேரி
முட்டப்பெருகியே கரைபுரண்டுவந்தாற்போல்
பூரித்திருதோளும் பொன்னுபரணமெல்லாம்
இத்தனைவார்த்தைக்கும் ஏனென்றுங்கேளாமல்
மௌனமாய்த்தானிருந்தார் வாசற்படிதனிலே
பொற்கொடியாள்மாது பூவைகலந்தாரி
பேசாமல்தானிருந்த புண்ணியரைத்தான்பார்த்து
கோபத்துடன்தானிருந்தாள் கொம்பனையாளப்போது

புலந்திரன் பெண்சாதியைப்பார்த்துச் சொல்வது.

போரஞ்சாமன்னர் புலந்திரவீரியரும்
தேவியின்றன்முகத்தை திரும்பியவர்பார்த்து
அன்னநடையாளே அமிர்தப்பசுங்கிளியே
வாழும்பெருமைகளும் மாமன்மார்சேவகமும்
கர்னன்பெருமைகளும் காவலர்பேர்சேவகமும்
இத்தனையுஞ்சொல்லி எடுத்துரைத்தாய்பெண்மயிலே
மங்கிலியத்தோடே மயிலனையே நீயிருக்க
கொண்டார்பெருமை குடிப்பெருமைசொல்லலையே
ஆளன்பெருமை அரிவையரேசொல்லலையே
வண்டார்குழலாளே வாழாப்பெண்ணுயிருக்க
நீர்செய்தகுற்றங்கள் நேரிழையேதானுமுண்டோ
சொல்லுஞ்சொல்லுமென்று செவிகொடுத்துகேட்டிருந்தா[ர்
கோபம்பெருகிக் கொம்பனையாள்கண்சிவந்து
ஆரமுலையாளும் அளவற்றகோபமதாய்
மாணிக்கத்தூண்மறவை மயிலனையாள்தானும்விட்டு
கொள்வினையுமங்கே கொம்பனையுமாராய்ந்து
கூட்டுறவுகொண்டு கொற்றவனேவந்தாயோ
வந்தவழிபார்த்து மன்னவனே நடவுமென்றாள்

புலந்திரன் பெண்சாதியை வளப்பங்கேட்பது.

ஆரணங்குசொல்லுகையில் அதுகேட்டுயிந்திரரும்
அன்னமேகோயில் ஆர்கோட்டைசொல்லுமென்றார்
ஆரணங்கேயும்முடைய ஐயன்பேர்சொல்லுமென்றார்
மங்கையரேயும்முடைய மாமன்மார்பெயருமென்ன
மாலையிட்டுக்கொண்ட மணவாளன்பெயருமென்ன
உன்னுடையபெயரும் வுரையுமென்றாரிந்திரரும்

பெயருரைப்பாயாமானல் போவேனெழுந்திருந்து
சொன்னபிறகுதான் சுந்தரியேநான்போவேன்
சொல்லாதபோனல் தோகையரேநான்போகேன்
சொல்லுஞ்சொல்லுமென்று செவிகொடுத்துகேட்டிருந்தார், நின்றவள்விசாரமிட்டு நெடுமூச்சுதானெறிந்து
கண்டகனவை கயற்கண்ணாள்தானினைந்து
பேர்கேட்டுவேர்பிடுங்க புண்ணியரேவந்தீரோ
ஆனாலுங்குறைவில்லை ஆனதொருமன்னவனே
என்றுயிளமுலையாள் எண்ணுதுமெண்ணுகிறள்
மதுரைவளநாட்டாளும் வந்தாரோவென்றறியேன்
வாழ்பாண்டிமன்னர் வந்தாரோவென்றறியேன்
ஆனந்தமார்பர் அவரேயிவரானல்
மெத்தவுதாசினங்கள் வேந்தரைச்சொன்னேமே
இவ்வளவுமுட்கொடுத்து இருந்துமிகக்கேட்டாரே
ஆச்சியுடனே அறிக்கையிட்டுசொல்வாரே
அவரோயிவனரோ யாதுமறிகிலேனே
என்னவிதுமாயமோ ஏதுந்தெரியவில்லை
பெயருரைத்தோமானல் போவாரெழுந்திருந்து
மாணிக்கத்தூண்மரவை மங்கையருந்தானும்விட்டு
வேல்பொருதுங்கண்ணாள் வெளிப்புறமாய்வந்துநின்று
கைநீட்டிச்சொல்லுகிறள் கட்டார்கருங்குழலாள்
கட்டழகாவிந்தமனே கலந்தாரியரண்மனைதான்
எங்களையர்தேத்தரசன் என்தாயார்துற்சடையாள்
அம்மான்மார்நூற்றிருவர் அரசாளும்பூபதியாள்
தேசத்தழகுமன்னன் திரியோதிரப்பெருமான்
பேரால்மிகுந்ததிரு பெருந்திருவாளென்மாமி
அருமையாயெனைவளர்க்கும் அம்மானதிகர்னர்
பொற்கருணர்தேவி பொன்னுருவாளென்மாமி
என்பேர்கலந்தாரி யெழுந்துநடமன்னவனே
இந்தவகைப்பெயரும் ஏந்திழையேசொன்னயே
கொண்டவர்கள்பெயரோ கொடுத்தவர்கள்தன்பெயரோ
எவர்களதுபெயரோ எனக்கரியச்சொல்லுமென்றார்
கொடுத்தவர்பேர்சொன்னல் கொண்டவர்பேர்சொல்லுமென்றார், அவ்வார்த்தைகேட்டு அருங்கிளியுமேதுசொல்வாள், சொல்லுகிறள்மாது துலங்குநவமணிபோல்

தாரார்புகழுடைய தருமனரவர்பாண்டவர்கள்
வெற்றிமதயானை வீமன்மகாராசன்
ஆணுலழகுமன்னன் அருச்சுனராசதுரை
நகுலசகாதேவரென்னும் நலம்புகழும்பாண்டவர்கள்
மாமன்மாரைந்துபேர் மாமியாரேழுபேர்
துரௌபதைசுபத்திரையும் தோகைபவளக்கொடி
நாககன்னிபோகவதி நறுநுதலாள்மின்னொளியும்
அல்லிமலர்தனிலே அவதரித்தபூவையரும்
எந்தனுக்குமாமியார் யெழுந்துநடமன்னவனே

கலந்தாரியை புருஷன்பெயர் சொல்லுமென்றது.

கேட்டுப்புலந்திரருங் கிருபையுடனேதுசொல்வார்
இப்போதெரிந்தது ஏந்திழைபெண்ணணங்கே
மாலையிட்டபுருஷன் மணவாளன்சொல்லுமென
தாலிகட்டிக்கொண்ட தலைவன்பேர்சொல்லுமென
மணவாளனென்றுசொல்ல மனதுமிகத்தளர்ந்து
துக்கித்துப்பெண்மயிலுஞ் சொல்லிநடுநடுங்கி
சொன்னால்தான்போவான் சுந்தரப்பூமுடியான்
என்றுயிளமுலையாள் யெடுத்துரைப்பாள்மன்னவர்க்கு

கலந்தாரி புருஷன்பெயர் சொன்னது.

கேளுங்காண்மன்னவரே கிளிமொழியாள்மணவாளன்
இந்திரனென்புருஷ ரென்பேர்கலந்தாரி
இப்பவென்றால்தெரிந்ததோ யெழுந்துநடவுமென்றாள்
போரஞ்சாவீரன் புலந்திரருங்கூறலுற்றார்
இந்திரனென்றாயே இருவருண்டுராச்சியத்தில்
அண்டத்துமிந்திரனோ ஆகாயமிந்திரனோ
வேர்பிரித்துச்சொல்லுமென்றார் வேந்தர்பெருமாளும்
காரிழையாள்மாது கலந்தாரியேதுரைப்பாள்
அர்ச்சுனனீன்றெடுத்த அழகுள்ளவிந்திரனார்
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரவீரியனார்
அவரிடதேவியென்று அரியவுரைத்தாளே
அத்திபுரமு மடங்கலுமென்னுதென்றாள்
அந்தவள நாடு வடங்கலுமென்னுதென்றாள்
தெண்பாண்டிநாடாளுஞ் சேரவேயென்னுதென்றாள்
செம்பொன்படுந்துறையும் தீவுகளுமென்னுதென்றாள்
பவளப்படுந்துறையும் பட்டணமுமென்னுதென்றாள்

ஐவரும் நூற்றுவரும் அன்புடன்வாழுகையில்
கொற்றவர்கள்யாவருங் கூடியிருக்கையிலே
மகாராசராசரவர் மருமகள்வேண்டுமென்று
சரியொத்தசம்பந்தந் தையனல்லாள்வேண்டுமென்று
மாலையிட்டாரெந்தனை வளநாட்டுயிந்திரற்கு
திரும்பிப்பகையாச்சு தென்னவர்க்கும் நூற்றுவர்க்கும்
பாண்டவர்களைவரும் பாரவனம்போனபின்பு
அன்றுமுதலின்றளவும் அழைத்துவரயாருமில்லை
மாலையிட்டுக்கொண்ட மணவாளன்மைத்துனரும்
மணவாளநாட்டிலே மன்னருந்தானிருக்க
மைத்துனனார்வைத்த வன்சிறைகார்க்கிறேன்யான்
அவர்-வைத்தசிறையிலே வாடுகிறேன்மன்னவனே
போரஞ்சாவீரனவர் புலந்திரன்தான்கேட்டு
சிறையென்றுசொல்லுகையில் தென்னன்பெருமானும்
காவலர்கள்வீரியனுங் கண்ணிறையமுத்துதிர்த்தான்
அங்கவனைக்காணுமல் அழுதகண்ணீர்தான் துடைத்து

புருஷன் தானென்று புலந்திரன்சொல்வது.

போரஞ்சாவீரனவர் புலந்திரனுங்கூறலுற்றான்
காரிழையாள்மாது குலந்நாரிநாயகியே
உன்னை-மாலையிட்டுக்கொண்ட மணவாளன்யான்காணும்
தாலிதரித்ததொரு தர்மமகன்யான்காணும்
கொண்டுசிறையில்வைத்த கொற்றவனும்யானே
மதுரையைவிட்டுவந்தேன் மங்கையரேயிப்போது
அனந்தலெழுப்பியென்னை ஆச்சிவரவிட்டாள்காண்
ஆருமறியாமல் அரிவையரேயிங்குவந்தேன்
ஓமப்புகையிலே வுத்தமியே நானிருந்தேன்
சுந்தரியேயுன்னுடைய சுண்டுவிரல்பிடித்து
தையலேமங்கிலியம் தரித்தவரும்யான்காணும்
அன்னமே நீயெனக்கு அத்தைமகள்காணும்
காடுறைந்தபாண்டவர்கள் காவலர்கள்தன்மகன்யான்
வேறொருவரென்றுசொல்லி விசனமதுவேண்டாம்
மற்றொருவரிங்கே வருவாரோகாவலிலே
கற்கோட்டைமுத்திரையுங் கர்னனதுகாவல்களும்
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்காவல்களும்
இத்தனையுந்தான்கடந்து யிங்கேவருவாருண்டோ

அரசாளும்நாயகியா ளல்லித்திருமகன்யான்
ஐவர்பயின்றெடுத்த அழகுள்ளவிந்திரன்யான்
போரஞ்சாவீரன் புலந்திரன்யான்காணும்
ஆரணங்கேநானுனக்கு அம்மான்மகன்காணும்
வேறொருவரென்று விகற்பங்களெண்ணாதே

கலந்தாரி அடையாளங் கேட்பது.

என்றுரைக்கமன்னவரும் யேதுரைப்பார்நாயகியும்
மாதுயெடுத்துரைப்பாள் மைத்துனரைத்தான்பார்த்து
மதுரையிலிருந்துவந்த மைத்துனருமானுக்கால்
மாமி அடையாளம் மன்னவரேதாருமென்றாள்
போரஞ்சாவீரனவன் புலந்திரனுங்கூறுகிறான்
வரும்போதுதந்தனள்காண் வையைவளநாட்டாளும்
வையைக்கரைதனிலே சிவபூசைசெய்கையிலே
கட்டழகியடையாளம் கைநழுவிவிட்டேன்காண்
வைத்துமறந்துவிட்டேன் மயிலணையேயென்றுரைத்தார்
மாதுகருங்குழலாள் மைத்துனரைத்தான்பார்த்து
எங்கள்-அம்மான்மார்தன்னுடனே அறிக்கையிட்டுசொ
ல்லவில்லை, காவலர்கள்தம்முடைய கர்னருக்குச்சொல்ல
வில்லை, சுற்றியருகிருக்குந் தோழியற்குச்சொல்லவில்லை
இன்றையராத்திரிக்கு இன்பமுடன்போய்படுத்து
நாளையராத்திரிக்குராசாவே நீர்வாரும்
மாமியார்கையில் வாங்கிவந்தாலடையாளம்
மாணிக்கமெத்தையிலே மருவயிடந்தருவேன்

புலந்திரன் அடையாளங்கொடுத்தது.

போரஞ்சாவீரன் புலந்திரனுந்தான்கேட்டு
இவள்-கட்டாணிவார்த்தைகளும் கைநீட்டிபேச்சுகளும்
வாய்விளங்கப்பேசுகிற மங்கையரைத்தான்பார்த்து
இந்தாருமென்று எடுத்துமவள்கைகொடுத்தான்
கண்டாளடையாளங் கடுகெனவேதான்வாங்கி
உள்ளேநுழைந்து ஒருசொம்புஜலமெடுத்து
பூஷணத்தைசுத்திசெய்து பூப்போட்டுதெண்டனிட்டு
அத்தையடையாளம் அன்பாகத்தானெடுத்து
பெட்டியிலேயடைத்து புலந்திரனார்முன்புவந்தாள்
வையைவளநாட்டா ளும்மைமறந்தாளோ
திருடிகொண்டுவந்தாயோ தென்னமுடிவேந்தரே

நம்பேனொருநாளும் நாயகனேயுந்தனைநான்
மைத்துனர்மெய்யானால் மாணிக்கத்தூண்பிளந்தால்
அத்தைமகனென்று அன்பாயிடங்கொடுப்பேன்
மாதுகலந்தாரி மயிலனையாள்சொல்லுகையில்
போரஞ்சாமன்னரவர் புலந்திரவீரியரும்
ஆரை நினைத்தானே ஐவர்திருமகனும்
சோலைமலருடைய சொக்கரைத்தானினைத்தார்
நஞ்சையமுதுண்ட நாதரைத்தோத்தரித்தார்
அரனார்செயலாலே ஆரணங்குபொற்றூணு
தானாய்வெடித்ததுவே தையலதுபொற்றூணு
மாதுகலந்தாரி மைத்துனரைத்தான்பார்த்து
மாமிமகன்மெய்யானால் மதிலோடுகற்கோட்டை
எட்டியேதானடந்தா லிருக்கவிடந்தருவேன்

புனந்திரன் கோட்டையைக் கடக்கவைத்தது.

மாது அவளுரைக்க மன்னவருமேதுசொல்வார்
அட்டாளுஞ்சொக்கரென்னும் ஐவரைத்தான்துதித்தான்
காமனைக்கண்ணாலெரித்த கர்த்தரைத்தான்துதித்தான்
அப்படியேநடந்தது அவளுடையகற்கோட்டை
எட்டிநடந்ததுவே இருப்பிடத்திற்சேர்ந்ததுவே
அப்படியும்நம்பவில்லை ஆரவிளமுலையாள்
போர்க்கஞ்சாமன்னர் புனந்திரும்நீரானால்
வாசற்படிதனிலே மணிப்பதுமைகட்டிருக்கும்
மணிப்பதுமைவாய்திறந்து மன்னவரேசொன்னக்கால்
மருவயிடந்தருவேன் மைத்துனரென்றுசொல்லி

புலந்திரன் மணிப்பதுமையைப் பேசவைத்தது.

அவ்வார்த்தைதான்கேட்டு அழகுள்ளஇந்திரனார்
விலங்குக்கும்குத்துக்கும் வெட்டுண்டுசாகாமல்
அறியாமலிங்குவந்தேன் ஆரணங்குகோட்டைக்கு
ஆரை நினைத்தானும் அளவற்றசிந்தையிலே
பிட்டுக்குமண்சுமந்த புனிதரைத்தான்தொழுதான்
சொக்கரைத்தானினைந்து தொழுதானேதார்வேந்தன்
மாயாண்டிகிருபையினால் மணிப்பதுமைவாய்திறந்து
சொல்லுகிறதுமணிப்பதுமை சொர்னக்கிளிபோலே
தருமர்திருமகன்காண் தாரார்கருங்குயிலே
கூடிமருவிடுங்கள் கொற்றவருந்தேவியுமாய்

காதாரக்கேட்டாளே கலந்தாரி நாயகியும்
மந்திரக்காரனோதான் மலையாளவித்தையுண்டோ
ஏமாத்தவந்தவனோ ஏதுமறியேனே

கலந்தாரி தூணைவரவழைத்தது.

எண்ணுதுமெண்ணி இளங்கொடியுமேதுசெய்தாள்
பத்தினியுநானானல் பார்த்தன்மகளானக்கால்
மாணிக்கத்தூணே வாருமென்றுதானழைத்தாள்
மாணிக்கத்தூணும் வந்துவளைந்ததுகாண்
மாமிஅுடையாளம் மங்கையரும்கட்டிவைத்து
மாலையிட்டுக்கொண்ட மணவாளனிவரானல்
பெட்டியும்பேழைபோய் பொருந்துமென்றாள்பொற்றூ
ணே, பேழையான தூணிலே போட்டடைத்தாளடையாள
ம், ஆகாயவாணிகளும் அருந்துதிசாட்சிவைத்தாள்
பூமிதேவியம்மாள் பூவிளக்கே நீர்சாட்சி
அக்கினியே நீர்சாட்சி ஆதிசிவன் நீர்சாட்சி
மெய்யானசாட்சிகள் மெல்லியரும்வைத்தபின்பு

கலந்தாரி புருஷனென்றறிந்து பள்ளியறை
கூட்டிப்போனது.

என்று அடிபணிந்தாள் ஏந்திழையுமப்போது
போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறுகிறான்
ஆருமறியாமல் ஆச்சிவரவிட்டாள்காண்
வாருமென்றுசொல்லி வானவிரல்கைபிடித்து
செம்பொன்கதவடைத்துச் சிக்கெனவேதாள்பூட்டி
சாளரவாசல்களை தனித்தனியேதாள்பூட்டி
மங்கையரைக்கொண்டு மாளிகையினுள் நுழைந்தார்
அடுத்திருக்கும்பஞ்சணைகள் அரிவையரேயாகாது
கொண்டுவந்தேன்பூமெத்தை கொம்பனையே நாம்கூட
பூமெத்தைபோட்டாராம் பொருந்திவிளையாட
மல்லிகைமெத்தையிலே மாதரைக்கொண்டுசென்று
மாதரைப்புல்கி மடிமேலேகுந்தவைத்து
ஆரந்திருத்தி அழகுபணிதான்பூண்டு
குப்பியில்சாந்தும் குழாயில்புநுகணிந்து
தேவியையலங்கரித்து செம்பொன்மணிமுடியாள்
தாழுமணிந்துகொண்டு தாமந்தவாழ்மார்பன்
வாய்த்தயிலைச்சுருளும் வர்னப்பலாக்காயும்

பண்டுபலாதிகளும் பழங்கள்ரசக்கனியும்
மடித்தயிலேச்சுருளும் மாதருக்குத்தான்கொடுத்தான்
தாழுமிலையடைக்காய் தின்றுதனஞ்செயனுர்
மாதுமுகம்நோக்கி மன்னனெடுத்துரைப்பான்
மங்கையரேமீறி வளர்ந்துசமைந்திருக்க
திங்களொருக்கால் தேன்மொழியேமுழுகிருயோ
மங்கையரே நீருமிங்கே வாழாதிருந்ததெல்லாம்
அந்தப்பாவங்களெல்லாம் அம்மான்மார்தன்னுேடே

புலந்திரனும் பெண்சாதியுங் கூடினது.

வெற்றிலேதின்று விரும்பிவிளையாடி
தென்மதுரைராமருக்குச் சீதைவந்துவாய்த்ததுபோல்
கந்தருடன்வள்ளியம்மன் கைகலந்தபாவனேபோல்
சாரையோடுசற்பம் சருவியிழைந்தாப்போல்
தேவியுடனே திருந்தடைக்காய்தின்றிருந்தார்
பூவணையைவிட்டுப் பொற்கிளியுந்தானிரங்கி
கவரிகொண்டுவீசலுமே கண்தெளிந்துகண்விழித்தான்
பலகாலுந்தன்னேப் பழகினவள்போலே
அருகாகவெண்கவரி ஆரணங்குவீசுகிருள்
இளவாழைத்தண்டொத்த இணைக்கைகள்நோகுதே
அநேகநெடுநேரம் அருந்திவிளையாடி
காரிழையாள்மாது கலந்தாரிநாயகியாள்
மல்லிகைமெத்தையை மயிலணையாள்விட்டிறங்கி
காலோடுகைகழுவி கனிவாயுங்கொப்பளித்து
வாயோடுபல்லுகளும் மதிமுகமுஞ்சுத்திசெய்து
மைத்துனரைப்பார்த்து மாதுயெடுத்துரைப்பாள்
தக்கப்புகழுடைய தர்மர்பெயராலே
நானுமொருபொருளாய் நாயகமேவந்தீரோ
பாண்டிப்பெருமாளே பசியோடிருக்கிறீரோ
பொற்றளிகையிட்டு பொற்கிளியுமுன்னேவைத்தாள்
பொற்றளிகைதானும் புசித்துமே அப்போது

இருவருக்கும் வாது.

போரஞ்சாவீரனவன் புலந்திரனுங்கூறுகிருன்
கோதையுடன்குந்தி கொற்றவனுரேதுசொல்வார்
மாதேயிளங்கொடியே மயிலணயே நீகேளாய்
சகுனிப்படுபாவி சண்டாளன்வாசலிலே

மாதைத்துகிலுரிந்த மாபாவிவாசலிலே
கச்சாயந்தின்பதில்லை கன்னியிளமயிலே
வெற்றிமதயானை வீமராதுதெண்டாலே
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியை
வெட்டிபலியிடுவார் வீமராதுதெண்டாலே
பாரதமுடிந்துவுங்கள் பார்வேந்தர்மாண்டாக்கால்
ஆரணங்கேயுன்னுடைய அம்மான்மார்மாண்டாக்கால்
மாமியார்வீட்டிலே வரப்போகவிருக்கிறது
மாமியார்வீட்டிலே மருவுண்டிருக்கிறது
பாண்டவர்நாடுபெற்று நாமும்பயந்தெளிந்து
கொற்றவர்கள்நாடுபெற்று நாமுங்குறைநீங்கி
மாலைமுடிபாண்டவர்கள் வந்தபிறகாக
வண்டார்குழலாள் மயிர்முடித்தபின்பாக
கச்சாயந்தின்று கலந்துவுறவாடுவதும்
என்றுரைக்கமன்னர் ஏந்திழைதானழுதாள்
தேவியழும்போது தேர்விசயன்புத்திரனார்
மாமன்மார்கண்டாரென்று மங்கையயே நீயழுதால்
என்-அம்மான்மாரைச்செய்த அக்கிரமம்நீகேளாய்
உருவமதயானை உத்தமர்களைவரையும்
விருந்தருந்தவாருமென்று வேந்தரைத்தானழைத்து
சகுனியால்சூதாடி தருமாபுரந்தோற்று
எத்தோப்புந்தோற்று இருப்பிடமுந்தான்தோற்று
ஆனைகளும்தேருகளும் அணிமணிச்சிங்காசனமும்
முத்துமுடியு முருபவளச்செவ்வாயும்
சேர அவர்தோற்று செம்பொன்மணிமுடியார்
நாடுமிகத்தோற்று நால்வரையுந்தான்தோற்று
வித்தகனார்பாஞ்சாலன் பெற்றவிளங்கொடியை
கொற்றவர்பாண்டவர்கள் கொண்டகுலவிளக்கை
மாதாவையும்வைத்து மன்னவர்கள்தோற்றார்கள்
தாமக்குழலாளை தள்ளிவந்தானம்பலத்தில்
வேல்பொருதுங்கண்ணாளை வீதிநடக்கவைத்தான்
அன்னநடையாளை அம்பலத்திலேற்றிவைத்தான்
சொல்லாதுஞ்சொல்லி துகிலுமுரியவைத்தான்
பாஞ்சாலன்புண்ணியத்தால் பாண்டவர்கள்புண்ணியத்தா
ல், மாளாதேவந்தது மாதுதுகிலாடை

சற்றேநழுவியே உடல்குலேந்தாளாமாகில்
வெற்றிமதயானே வீமரதுதெண்டாலே
மாள்கிறது அன்றலவோ மாமன்மார் நூற்றெருருவர்
சாகிறது அன்றலவோ தனஞ்செயன்கை அம்பாலே
மாமன்மார்பட்டாரென்று மங்கையரே நீயழுதாய்
ஏலங்குழலாளே எனக்குதுக்கம்வாராதோ
தம்மாணேயென்றனே தருமமுடியழகன்
தையலவள்கேட்டு தரியாளேபூமியிலே
பூவணேயைவிட்டிறங்கி புனக்கிளியுமப்போது
இதுவுமொருகாரியம்போல் இவ்வாணேவந்ததென்ன
ஆணேவிடுமென்று அடிவணங்கிதெண்டனிட்டாள்
வந்துவிழவொட்டாதே மன்னரெடுத்தணேத்து
விட்டேனே ஆணேயெல்லாம் வேல்பொருதுங்கண்ணுளே
ஆரமுலேயாட்கு அடைக்காய்சுருள்கொடுத்து
பொற்கொடியேயெந்தனுக்கு போகவிடைதாருமென்ருர்
விடையென்றுகேட்கையிலே வேந்தன்மனேயாட்டி
போகவேவந்தீரோ புதுமைகளேக்காட்டி
காவலழிக்கவந்தீர் கட்டழகாமன்னவரே
காரியங்கள்பார்ப்பதற்குக் காவலரேவந்தீரோ
மதுரையை நானறியேன் வைகைவளநாடறியேன்
சீரானமதுரையென்று சீமைகளும்நானறியேன்
சத்திரஞ்சாலேகளும் தாமரைபொய்கைகளும்
சித்திரச்சோலேகளுந் திருவாலவாயறியேன்
பெண்ணுய்ப்பிறந்து பெருமாள்மூடிசூட்டி
அன்னம்போலாண்டானே ஐம்பத்தறுகாதம்
என்றுசொல்லகேட்டிருப்பேன் ஏன்கணவா நானறியேன்
பார்க்கவேநான்வருவேன் பாண்டிவளநாட்டை
இருவரையுமொன்று எடுக்காதோயிப்புரவி
வருகிறேன்நானுமுங்கள் வைகைவளநாட்டுக்கு
நானும்வருகிறேன் நாயகரேகூடவென்ருல்
போரஞ்சாமன்னன் புலந்திருமேதுசொல்வார்
ஆரென்றெனேயறியாய் அரிவையிளமயிலே
மதுரை துரையாளுகிற மாதுமையாள்புத்திரற்கு
போரஞ்சாமன்னன் புலந்திரவீரியற்கு
ஆனந்தமார்பனுக்கு அடப்பம்பிடிக்கிறவன்

அந்தவடையாளஞ்சொல்லி அணைந்தேனேயிப்போது
மெய்யாய் நீயென்பிறகே மெல்லியரேபின்தொடர்ந்தால்
தருமடிவுனக்கு தாரார்கருங்குழலே
அவ்வசனங்கேட்டு அரிவையெடுத்துரைப்பாள்
மைத்துனரைத்தான்பார்த்து மாதுயெடுத்துரைப்பாள்
வந்ததொருபூவணைக்கு மருவியுறவாடி
வந்தபொழுதே மணவாளா நீர்காணும்
நகைநகைத்தாரிந்திரும் நாயகியாள்சொல்லுகையில்
போர்க்கஞ்சாவீரன் புலந்திரனுங்கூறுகிருன்
கற்கோட்டைமுத்திரையுங் கர்னனதுகாவல்களும்
இத்தனையுந்தான்கடந்து இங்கேவருவாருமுண்டோ
மதுரையைவிட்டுவந்த மணவாளன் நான்தாண்டி
காரிகையேயுன்னை களவாகக்கொண்டுசென்ருன்
தேடிதிரியாரோ சேனைகளத்தனையும்
மாலையிட்டுக்கொண்ட மணவாளன் நானல்லவா
தாலிதருத்ததொரு தருமர்மகன்யானல்லவோ
களவாகக்கொண்டுசெல்ல காரியமேன் நாயகியே
நாளை-பாரதமுடித்து படுகளமுஞ்சென்ருக்கால்
மங்கையரேஎன்னுடைய மாமன்மார்மாண்டாக்கால்
பாண்டவர்கள் நாடுபெற்று பதியமர்ந்தபிற்பாடு
மன்னவர்கள் நாடுபெற்று வந்தபிரகாக
வண்டார்குழலாளு மயிர்முடித்தபிற்பாடு
அப்போதுதண்டிகையும் ஆளும்வரவிடுவேன்
உன்-மைந்தனும் நீயுமாய் வாருமென்றுதானுரைத்தார்
காரிழையாள்மாது கலந்தாரிதான்கேட்டு
எனக்குமைந்தருமுண்டாச்சோ மன்னர்பெருமானே
பிள்ளையுமுண்டாச்சோ பேர்பெரியமன்னவரே
போர்க்கஞ்சாவீரன் புலந்திரருமேதுசொல்வார்
உங்கள்குலம்போலயல்ல ஓடமலர்க்கண்ணுளே
ஆண்மலடுபெண்மலடு அடங்கலுந்தான்மலடு
கண்ணிலான்பெற்றெடுத்த கபடரெல்லாந்தான்மலடு
எங்கள்குலங்கேளாய் இளங்கொடியேசொல்லுகிறேன்
தேர்விசயனருச்சுனனுர் தெருவழியேவரும்போது
முன்னழகுகண்டு மொய்குழல்மார்சோர்ந்திடுவார்
அப்போதேகொர்ப்பம் அடையுங்காணுரணங்கே

வந்ததொருபூவணையில் மருவிவிளையாட
எனக்கு-மைந்தனில்லையென்றால் வையகங்களேசாதோ
பிள்ளையில்லையென்றால் பூதலத்தாரேசாரோ
பேடைமலர்க்கண்ணாளே பெறுவது ஆண்பிள்ளை
உன்-அம்மான்மார்பெயரை ஆரணங்கேவையாதே
எங்கள்-ஐவரதுபெயரை இடவேண்டுமாரிழையே
ஆணழகர்ஐவரிலே அருச்சுனவென்றழையும்
சித்திரவில்பேரனவன் சின்னஅருச்சுனனார்
அப்படியேயாகுதுகாண் ஆணழகர்மன்னவனே
விருந்துவருகுதடி மெல்லியிளங்குயிலே
பொற்கொடியேயெந்தனுக்குப்போகவிடைதாருமென்றார்
விடையென்றுகேட்கையிலே வேல்பொருதுங்கண்ணாளும்
மைத்துனரைத்தான்பார்த்து மாதுயெடுத்துரைப்பாள்
தாதியர்களறியாமல் தார்வேந்தாவந்திரோ
பிஞ்சுபணிமுடியாள் புத்திரரேயுண்டானால்
பொல்லாமசக்கையது பொருந்திற்றேயாமாகில்
அம்பலத்தாரெல்லாம் அறிந்துவிட்டாராமாகில்
என்னசொல்வேன்நானும் என்மாமாநூற்றுவர்க்கும்
மாமியடையாளம் மன்னவரேநீர்கொடுத்தீர்
உம்முடையவடையாளம் வுத்தமரேதாருமென்றாள்
தருவீரென்றுமறுத்தாள் தாமக்குழலாளும்
போரஞ்சாமன்னர் புலந்திரருந்தான்பார்த்து
எண்பத்தெண்ணாயிரம்பேர் இளங்கொடிமார்தானுமுண்டு
கொம்பனைமார்தங்களுடன் கூடக்கொலுவிருப்பேன்
சல்லாபம்பேசியே சரசங்கள்செய்யவந்தால்
தங்கைதமக்கையென்பேன் தையலர்கள்யாவரையும்
பாண்டவர்கள்நாடுபெற்றுப் பதியமர்ந்தபிற்பாடு
வண்டணியுங்குழலாள் மயிர்முடித்தபிற்பாடு
உண்பதுந்தின்பதுவும் உன்மாளிகையிலேறுவதும்
அன்றுகாண்மாதரசே ஆரணங்கேயென்றுரைத்தார்
விடிந்துவருகிறது விஜயன்மருமகளே
போகவிடைதாருமென்றார் புலந்திரனாரப்போது
விடையென்றுகேட்கையிலே வேல்புருவங்கண்ணாளும்
மாதமொருபயணம் வருவீரோமன்னவரே
சொல்லுமென்றுகேட்டாள் சொர்னப்பசுங்கிளியும்

ஒருநாளும்பொய்வார்த்தை உரையாதவுத்தமனும்
எங்கள்- ஆச்சிக்குச்சொல்லி அறிக்கையிட்டுஅப்படியே
மாதமொருமுறைதான் வருகிறேன்தப்பாமல்
விடையென்றுகேட்கையிலே மெல்லிகருங்குழலாள்
பூவணையைவிட்டிறங்கிப் பொற்கொடியாள்நாயகமும்
வாய்த்தயிலைச்சுருளும் வர்னத்துவர்பாக்கும்
காவலனார்வீரியற்கு கைநிறைய அள்ளியிட்டாள்
வேசியரல்லவோ கொடுப்பாயிலையமிர்தம்
ஏலக்கருங்குழலே இதுகளொன்றும்யானறியேன்
கொம்பனையே நீருங் குடியிருந்துகாத்திரோ
இந்நாட்டுவாசனைகள் ஏந்திழையேயல்லவிது
இந்திரலோகத்தில் இருந்துவந்தவாசனைகள்
ஆகையினாலே அரசியரே நான்கொடுத்தேன்
சொற்படியே நீயெனக்குப் போகவிடைதாருமென்றார்
தாரார்கருங்குழலாள் சரணமென்றடிபணிந்து
ஆருயிரவருக்கும் அவருடையதேவியர்க்கும்
பொன்னின்மலைநாடாளும் போரெழுதிஐவருக்கும்
வையமுழுதாளுகின்ற மாமியார்தங்களுக்கும்
தெண்டனிட்டவிண்ணப்பஞ் செப்புவீரவர்களுக்கு

புலந்திரன் மதுரைக்குப் பயணப்பட்டது.

என்றுசொல்லமாதுநல்லாள் இந்திருமனமகிழ்ந்து
சிங்காதனத்தைவிட்டு திகழக்குதித்திறங்கி
மன்னவருமுன்னடக்க மாதரும்பின்னடக்க
ஆகாயவான்புரவி அலைதான்முன்புவர
வானப்புரவியது வந்ததுமன்னவன்முன்
புரவியழகனவன் புகழ்வீரன்பேரழகன்
மதுரைமணவாளன் வந்தபடிவாராதே
என்றுமவள்கூறி இறங்கியேதெண்டனிட்டாள்
தேவியின்றன்முகத்தைத் திரும்பியவர்பார்த்து
அங்குபடிகாலைவைத்து ஆனந்தவாழ்மார்பன்
ஏறினாப்பொழுது இளவிஜயன்புத்திரனும்
உத்தமர்கள்புத்திரனும் உதாறிச்சியேறினனே
ஏறினதுகண்டாளே இந்திரைத்தான்காணள்
மைந்தரைப்போகவிட்டு வாடிமனந்தளர்ந்தாள்
வாடிமனந்தளர்ந்து வானமுகம்வேறுபட்டு

பள்ளிகொள்ளுமண்டபத்தில் பைங்கிளியுந்தான்புகுந்து
கூடியிருந்தோமே குங்குமக்கட்டிலிலே
ஏறியிருந்தோமே எழில்பெரியமண்டபத்தில்
இன்னமொருமுறை இனிகாணப்போவதுண்டோ
என்று-செம்பொன்கதவடைத்து சிக்கெனவேதாள்பூட்டி
பூவணைமேலே பொற்கொடியும்பள்ளிகொண்டாள்
தாமக்குழலாளும் தழுவணையிற்பள்ளிகொண்டாள்

புலந்திரன் மதுரைக்குவருகிறது.

பொன்னுமணியழகன் புலந்திரனார்தன்புரவி
ஆகாயமாயெழும்பி அந்தரத்தில்தான்பறந்து
தாமரைசூழ்நாடுகளும் தருமாபுரங்கடந்து
வாழ்மதுரை நாட்டில் வந்தது அப்புரவி
சிங்காரத்தோப்பிலே சென்றது அப்புரவி
சந்தனவாழ்மரத்தில் தனஞ்செயரைத்தானிறக்கி
கொண்டுவந்துவிட்டது கொற்றவனார்தன்புரவி
செம்பொன்கடிவாளஞ் சிக்கெனவேதான்பிடித்து
வைகைக்கரையிலே மன்னவனார்வந்திறங்கி
மஞ்சள்நீர்தோட்டத்தில் மன்னவனார்வந்திறங்கி
ஆடைகளைந்து ஆபரணந்தான்களைந்து
நன்ருய்ப்பணிதிகளை நாயகருந்தான்கழட்டி
பச்சைவடங்களைந்து பாண்டியப்பெருமானும்
கட்டழகியிதழுங் கண்டானேபுடவையிலே
இனி-காணவகையிலையே கட்டழகிசீர்வடிவை
பார்க்கவகையிலையே பாவையழகியரை
சாந்திக்கழுத்தியரை சந்தனப்பூமேனியரை
குங்குமமொத்ததொரு கொம்பேரிடையாளை
அவள்-கட்டாணிவார்த்தைகளும் கைநீட்டிப்பேசுவதும்
பார்க்கவகையிலையே பாவையழகியரை
எத்தனைநாள்செல்லுமோ இளங்கொடியைநான்காண
மாதரையான்பிரிய வைத்தீரேமகாதேவா
கோதையரைநான்பிரிய கொடுமைவைத்தீர்ஈஸ்பரரே
இவளைப்பிரிந்திருக்க என்னகுறைசெய்தேனோ
தேவியரைத்தானினைந்து சிந்தைமிகக்கலங்கி
ஆனந்தவாழ்மார்பன் ஆழச்சுனையிறங்கி
கொற்றவர்கள்கோமான் குளித்துக்கரையேறி

ஈரங்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
துவட்டங்கொண்டு துவட்டியபந்தஇந்திரனும்
அனந்தம்பணிபூண்டு ஆனந்தவாள்மார்பன்
நாணயப்பணிதிகளை நாயகருந்தான்பூட்டி
தென்மதுரைநாட்டான் திருநீற்றுக்காப்பணிந்து
சிந்தித்துநின்ற சிவனையடிபணிந்து
சந்தனங்கொண்டணிந்து தங்கத்திருமேனியெல்லாம்
குங்குமங்கொண்டணிந்து கொற்றவனுந்தான்திமிறி
மாணிக்கப்பச்சைவடம் மன்னன்வரிந்துடுத்தி
மாதாவின்பாதத்தை வணங்கவேவேண்டுமென்று

புலந்திரன் தாயாரிடம்வந்து சேர்ந்தது.

சிங்காரத்தோட்டம்விட்டு தென்னரசுநாட்டானும்
சித்திரவீதிகளும் தெருவும்பலகடந்து
மாதாகொலுவிருக்கு மண்டபத்தின்முன்னேவந்து
மாதாவின்கொலுவை வலமாகச்சுற்றிவந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டு
மாணிக்கபொற்பீடம் மன்னவனும்வீற்றிருந்தான்
அமர்ந்தார்கொலுவி லல்லித்திருமகனும்
அப்போ-சோலைமலருடைய சொக்கனார்கோவிலிலே
என்னுயிர்ச்சின்ன மெங்குமேதான்முழங்க
நாகசுரம்பதினெட்டு கவுரிகளும்நின்றூத
ஊதினசின்னங்க ளுத்தமியாள்தொனிகேட்டு
வெகுநேரமாச்சுதே வேந்தர்வரக்காணேமே
கர்னறிந்தாரோ காவலர்கண்டாரோ
மாலைமுடியானை வதைசெய்தாராமாகில்
நான்-மாளும்படியொழிய மண்ணிலிருப்பதில்லை
பஞ்சவர்க்கென்னசொல்வேன் பாஞ்சாலிக்கென்னசொல்வேன், அங்கவருக்கென்னசொல்வேன் அர்ச்சுனருக்கென்னசொல்வேன், சிந்தையிலேயெண்ணி செங்கண்
(ணீர்முத்துதிர்த்தாள்

புலந்திரனைத் தாயார் கண்டது.

தட்சணமேகெவுளியது சாற்றிற்றுதேன்மொழிக்கு
பூவணையைவிட்டிறங்கிப் பொன்மதுரைநாட்டாளும்
செம்பொன்கதவைத் திறந்தந்தபொற்கொடியும்
மைந்தன்கொலுவிற்கு மண்டபத்திற்போய்புகுந்தான்

மைந்தன்புலந்திரனை வளநாடிதான்பார்த்தாள்
அரைத்திருந்தசந்தனத்தை யள்ளியறைந்ததுபோல்
வற்றிக்கிடந்ததொரு வருள்பெரியகாவேரி
முட்டப்பெருக்கிக் கரைபுரண்டுவந்ததுபோல்
பூரித்திருதோளும் பொன்னாபரணமின்ன
சந்தோஷங்கொண்டு தையல்வருகையிலே
மாதாவரவுகண்டு மன்னர்புலந்திரனும்
சிங்காதனத்தைவிட்டுத் திகழக்குதித்திரங்கி
இந்திருமப்போது எதிரேநடந்துவந்து
பூவும்புதுமலரும் பொன்னருகுயட்சதையும்
மாதாவின்பாதம் மலர்தூவிதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை வாழ்த்தியெடுத்தணைத்து
வாழ்வீர்வளர்ந்திடுவீர் மண்ணூழிகாலமட்டும்
நிற்பீர்நிலைத்திருப்பீர் நீரரசையாண்டிடுவீர்
கற்பதித்ததூண்போல் கலங்காதரசாள்வீர்
என்னைப்பெறுவீ ரெதிர்த்தார்முடிபெறுவீர்
பிள்ளைபெருவீர் பெருமாள்பதம்பெறுவீர்
அத்திபுரமாள அரசுதனைப்பெற்றிடுவீர்
மதுரைநகராள்வதற்கு மைந்தரைப்பெற்றிடுவீர்
காரிழையாள்மாது கலந்தாரிகோட்டையிலே
மைந்தரைப்பெறுதற்கு மனங்குளிரவாழ்த்தினாள்
ஆசனம்போட்டார்கள் அங்கிருந்ததாதியர்கள்
இட்டதொருஆசனத்தி லிந்திரரும்வீற்றிருந்தார்
மைந்தர்புலந்திரரை வளநாடிதான்பார்த்து
உச்சியிலேதானிருந்து உள்ளங்கால்பரியந்தம்
பார்த்தாள்பலகாலும் பார்த்திபன்தன்மகனை
போனபுதுமைகளைப் புகழ்வீர்காளெனென்னிடமே
தேவிதன்னரண்மனைக்கு சென்றமொழியுமில்லை
குங்குமங்கதம்பம் குலைந்துயிருக்கவில்லை
போய்வந்தேனென்று பொய்யுரைத்தீர்மன்னவனே
எங்கேயிருந்துவந்தீர் இளவயதுகோமானே
எத்தூரஞ்சென்று எவ்விடத்தில்பள்ளிகொண்டீர்
என்ன அவள்கேட்க எடுத்துரைப்பாரிந்திரனார்
போய்வந்தேனென்னாச்சி பொய்கைதனில்நீராடி
புட்பமலரெடுத்து போற்றிபணியவந்தான்

உள்ளத்தைத்தானுரைத்தான் உத்தமசிகாமணியும்
மலர்குழலாள்மாது மயிலணையாளே துரைப்பாள்
நீர்-போனபுதுமைகளும் பொற்கொடியைக்கண்டதுவும்
ஆனந்தவாழ்மார்பன் அரசாளுந்தன்மைகளும்
அரசர்புதுமைகளும் வைத்திருக்குங்காவல்களும்
எதிரொருவரில்லாம விராச்சியத்தையாள்கிறதும்
உத்தமர்கள்பாண்டவரை ஓட்டியரசாள்கிறதும்
கட்டழகிதம்முடனே கைகலந்தபாவனைபோல்
ஒன்றுமொளியாம லுத்தமனேசொல்லுமென்றாள்
என்னுணைதம்பி எனக்கரியச்சொல்லுமென்றாள்
ஆனாலொளியாமல் ஆச்சியரேசொல்லுகிறேன்
ஆணைவிடுமென்று ஆச்சியரைதெண்டனிட்டான்
ஆணைவிடுவதில்லை அருளாளாசொல்லுமென்றாள்
தென்னாடியாதினத்தில் சிறுவனும்வீற்றிருந்து
மாதாவின்முன்னாக மன்னவனுமேதுசொல்வான்
எங்களை-ஆருயிரவரென்னு மணிதிரளாம்பாண்டியற்கு
பொன்னின்மலைநாடாளும் போரெழுதியைவருக்கும்
வையமுழுதாளுகின்ற மாமியார்தன்தனக்கும்
தெண்டனிட்டவிண்ணப்பம் தெரிவிப்பீர்மன்னவனே
என்று-தென்னாற்கருங்குழலாள்தெரிவித்தாள்யாவருக்கும்
அந்த-மாதுவிடைகொடுக்க வந்தேன்காணாச்சியரே
ஆகாயவான்புரவி யலர்தாளாயெங்கேயென்றாள்
பொன்னுமணியழகன் புலந்திரனுமேதுசொல்வான்
பூங்காவனந்தனிலே புரவியைவிட்டேனென்றான்
அரசாளும்நாயகியா ளல்லியருந்தான்கேட்டு
மாதுகருங்குழலாள் மலர்காவில்போய்புகுந்து
வான்புரவிகைபிடித்து வைகைவளநாட்டியரும்
கடிவாளங்கைபிடித்துக் கட்டழகியல்லியம்மாள்
தேவேந்திரனுரைத் தெரிசித்துபெண்மயிலும்
நீர்-வரவிட்டகாரியங்கள் நிறைவேற்றிதிரிந்ததுகாண்
புரவிவருகுதுகாண் புண்ணியரேயென்றுசொல்லி
கண்டுகொள்ளுமென்றுசொல்லி கயற்கண்ணாள்தெண்ட
னிட்டாள், ஆகாயமாயெழும்பி பரந்ததுகாண்புரவி
வணங்கியெழுந்திருந்து வண்டார்குழலாளும்
மைந்தனிருக்கிறதோர் மண்டபத்திற்போய்புகுந்து

பொற்றளிகையிட்டுப் பொற்கொடியுமைந்தனுமாய்
இளைப்பாருமண்டபத்தில் இருந்தாரிருவருமாய்
ஆணையெல்லாம்விட்டேன்காண் ஆனந்தவாழ்மார்பா
என்றுமிகக்குளிர்ந்து இருந்தார்கள்மதுரையிலே

கலந்தாரியை தாதிமார்கண்டது.

அப்படியாயிருந்த ஆனதொருநாளையிலே
மற்றுநாளானபின்பு மாதுகருங்குழலாள்
கருநீலப்பூங்குழலாள் கலந்தாரிநாயகமும்
தாமக்கருங்குழலாள் தன்னுடையதாதியரை
பேர்சொல்லிதானழைத்தாள் பேடைமலர்கண்ணாளும்
அசந்துநித்திரைபோய்விட்டாளவர்மருமகளும்
அத்தைமகன்மேல்நினைவாய் அசந்துநித்திரைபோகிறு
ளாம், அந்நேரந்தாதியர்க ளலண்டுஎழுந்திருந்தார்
தங்களுக்குள்ளாகத் தையலர்கள்விசாரமிட்டு
முந்தியெழுந்திருந்து முருகுழல்மாரோடிவந்தார்
நம்மையெல்லாந்தட்ட நாயகியாளெழுப்பிடுவாள்
மாதுக்குநித்திரைகள் வந்தவாறுஎவ்வாறு
என்றுமனந்தளர்ந்து ஏந்திழைமார்விசாரமிட்டு
செம்பொன்கதவருகில் தேன்மொழிமார்வந்துநின்று
வாளேந்திக்கைதனிலே மயிலனைமார்யாவர்களும்
பாவையருகில்வந்து பள்ளியறைபோய்புகுந்து
ஏறிட்டுப்பார்த்தார்க ளிளங்கொடியாள்சீர்வடிவை
ஆடையவிழ்ந்தது அறியாளாம்பெண்கொடியும்
ஆபரணங்களைந்ததுவும் ஆரணங்குநானறியேன்
உற்றுப்பார்த்தார்கள் ஒளிவுடையாள்சீர்வடிவை
சந்தனங்கள்பூசிச் சரிந்துயிருந்ததுகாண்
வகைவகையாய்பூச்சரங்கள் வந்தவாறுஎவ்வாறு
இருவர்பள்ளிகொண்டதுபோ லிருக்குதுகாண்மாதர்களே
இறைந்துமிருக்குதுகா ணெங்கெங்கும்பூச்சரங்கள்
அடைக்காய்களித்தவனு லரைப்படிக்கமாயிருக்கும்
முழுபடிக்கமாய்பிறந்து முழுதலைக்கும்வழிந்தோட
வண்டார்குழலாட்கு வாசனைகள்மிஞ்சுதுகாண்
இந்தநாடுவாசனைக ளேந்திழையேயல்லவிது
இந்திரலோகத்திற்கு எட்டுதேவாசனைகள்
மன்னர்திருமகனுர் வந்தாரோவிசையுடனே

அரசாளும்நாயகியா ளல்லிவரவிட்டாளோ
ஆகாயந்தானிருந்து அந்தாமாய்குதித்தாயோ
கற்கோடிமுத்திரையுங் கர்னன துகாவலிலே
எப்படிக்குவந்தாரோ ஏதுவிசாரமிட்டு
தாமக்குழலாளைத் தட்டிஎழுப்பவென்றான்
இந்திரர்மேற்சிந்தையினு லெழுந்திருக்கப்போவதில்லை
இதுவேயல்லாமல் யாதொன்றுந்தானறியாள்
தாதியர்களெல்லோரும் தையலரைப்பார்த்திருந்தார்
குளிர்சாந்துசந்தனமுங் குளிர்கவரியிற்றெளித்து
ஈரெட்டுவெண்கவரி யிசைந்தவெண்சாமரங்கள்
காரிழைமார்தன்காதல் கவரிபரிமாரினார்கள்
மெல்லிநல்லாள்மதிமுகத்தில் வெண்கவரிவீசலுமே
கவரிகொண்டுவீசலுமே கணைதெளிந்துகண்விழித்தாள்
சுற்றிநிறைந்திருக்கும் தோழிமார்தாதியர்கள்
அத்தனைபேரையு மரிவையவள்கண்காட்ட
மெல்லியர்களெல்லோரும் வெளியேமறைந்தார்கள்
தாய்போல்வளர்த்தெடுத்த தாதிதனித்திருந்தாள்
தனித்திருந்ததாதியவள் தனியாகவந்துநின்று
மாதுதனையெடுத்து மடிமேலேதான்வளர்த்தி
ஆரணங்கள்தான்திருத்தி யழகுபணிதான்பூட்டி
கோவைகள்தான்திருத்திக் குழற்கோதிகொம்பனைக்கு
மாளிகைகள்தான்திருத்தி மயிற்கோதிகொம்பனைக்கு
மெத்தனவேகோபமதாய் மெல்லியரைத்தான்பார்த்து
கண்கள்சிவப்புடனே கன்னியவளேதுசொல்வாள்
வர்னப்பசுங்கிளியே வாடாதசெண்பகமே
வாடியிருப்பதென்ன மாதுதிருமுகங்கள்
சீரிருக்குதுகாண் செண்பகப்பூமேனியெல்லாம்
அலர்ந்தசெந்தாமரைப்போல் வரிவையரேயுன்முகங்கள்
மலர்ந்திருக்குநெடுநாள் வாடியிருக்கக்காரணமேன்
குங்குமம்பூசிக் குலைந்துமிருக்குதுகாண்
வகைவகையாய்ப்பூச்சரங்கள் வந்தவாரெவ்வாறு
பங்கிட்டுக்கொள்ளுவோம் பாங்கிமாரெல்லவரும்
மெத்தகலங்கியே மெல்லியேயிருப்பதென்ன
அடைக்காய்கள்தின்றால் அரைப்படிக்கமாயிருக்கும்
மேல்வாய்வருந்துங்காண் மெல்லியரேதம்பலங்கள்

வண்டார்கருங்குழலே வாசனைகள்மிஞ்சுகுது
இந்நாட்டுவாசனைக ளிளங்கொடியேவல்லவிது
வானவர்லோகத்தில் வந்ததொருவாசனைகள்
காரிழையேயுன்னைக் கலியாணம்பண்ணுகையில்
தாலியுடன்மாலையுஞ் சந்தனமுங்குங்குமமும்
மந்தாரக்கூறையும் மைகளுடன்றுன்சிவப்பும்
வரவிட்டார்கண்டீரோ வரவிட்டார்குழலாளே
அந்தப்பரிமளங்கள் ஆரணங்கேவந்ததுகாண்
மன்னர்திருமகனார் வந்தாரேவுரவாக
அரசாளும்நாயகியா ளல்லிவிவேகியல்லோ
பூதம்பணிசெய்யும் பொற்கொடியாள்வாசலிலே
மேகத்திலேற்றி மெல்லவரவிட்டாளே
ஆருமறியாம லருச்சுனனார்புத்திரரும்
மாலுமுடியாளே மைத்துனனும்வந்தாரோ
கட்டார்கருங்குழலாள் கலந்தாரிதான்கேட்டு
கண்கள்சிவந்து காந்தாளந்தானுகி
அவ்வலரிகண்கள்ரெண்டும் செவ்வலரிபூத்ததுபோல்

கலந்தாரி தாதிகளுக்குச் சொல்லுதல்

தாமக்கருங்குழலாள் தாதிமுகம்பார்த்து
ஏண்டி நீதாதிகளே யிடும்புகளைபேசவந்தாய்
மதுரை அரசாளும்பூமுடியார் அங்கேயிருக்கையிலே
என்-மைத்துனனாரிங்கே வரும்வாறுமெவ்வாறு
கற்கோட்டைமுத்திரையுங் கர்னரதுகாவல்களும்
ஐயாயிரந்தோழி யருகிலிருந்தீர்கள்
காரிழையாள்தாதிகளே கண்கெட்டுப்போனீரோ
இச்சிறையில்காக்க எல்லோருஞ்சொல்லீரோ
வன்சிறையில்காக்கவைத்தால் மாதரெல்லாஞ்சொல்லீரோ
தாதியர்க்கெளிதாகத் தையலரும்நானிருந்தேன்
வேண்டேனினிச்சென்மம்வெறுத்தேன்காண்மங்கையரே
மாண்டாலுஞ்சேதமில்லை வண்டார்குழலியரே
ஆரவிளமுலையா ளறைந்துகொண்டுதானழுதாள்
தாமக்கருங்குழலாள் தாதியருந்தோழியரும்
செங்கமலநாயகியாள் சேரவேயோடிவந்து
காசிவளர்கர்னன் கட்டழகன்தான்கேட்டால்
ஆக்கினைகள்வந்துவிடு மரிவையிளமயிலே

அரியாமற்சொன்னே மரசேபொருத்தருள்வீர்
மாதின்திருவடிக்கே வந்துமிகத்தெண்டனிட்டாள்
தாதியவள்தணிக்கத் தணிந்திருந்தாள்தையலரும்
கொம்பேரிடையாளுங் கோபந்தணிந்தபின்பு
போசனங்களாச்சுதென்று பொற்கொடியுந்தானழைத்தாள்
பூவணையைவிட்டிறங்கிப் புட்பமலரணையாள்
வாசமுமீந்து மலர்குழலாள்பூவுதரி
பல்லைவிளக்கிநல்ல பவளவாய்க்கொப்பளித்து
ஸ்நானங்கள்செய்து சந்திசெபந்தான்முடித்து
மாணிக்கமண்டபத்தில் மங்கையரும்வீற்றிருந்தாள்
தாதியர்களெல்லாந் தையலர்முன்வந்துநின்று
பொன்னின்துகிலொதுக்கிப் பின்புறமாய்வந்துநின்று
மாணிக்கச்சீப்பாலே வாரிமயிர்கொண்டையிட்டு
பரிமளபுட்பங்கள் பைங்கிளியாள்பூக்குழலில்
மருக்கொழுந்துமாலைகள் வைத்துமுடித்தார்கள்
புட்பமலராட்குப் பூமுடித்தானபின்பு
புலிமுகமுக்காலிவைத்துப் பொற்றளிகைதானும்வைத்து
மற்றுமுள்ளகாய்கறிகள் வானத்தளிகைவைத்தாள்
பொறித்தபொறிக்கறியும் பொன்போல்சிறுபருப்பும்
பத்துவகைக்கறியும் பதினெட்டும்பச்சடியும்
அன்பானபச்சடியும் அடைவாய்பரிமாறி
புத்துருக்குநெய்யும் புதுமையுடன்றான்வார்த்து
பொன்போன்றசெம்பிலே வெந்நீருந்தான்வார்த்து
அந்தவடிசில் அமுதுண்டபிற்பாடு
முடிபூவுஞ்சந்தனமும் மிகவாரிவெள்ளிலையும்
அடைக்காயுந்தின்று ஆனந்தவாழ்மாரி
பூசித்துத்தானிருந்தாள் புருஷனைத்தினந்தோறும்

கலந்தாரிக்குக் கெர்ப்பமுண்டானது.

பொன்னுமணியழகர் புலந்திரனார்தேவியரும்
முனைவீரர்தேவியர்க்கு மூன்றுதிங்களாச்சுது
வண்டார்குழலாட்கு மைந்தனைத்தோன்றிற்று
இட்டபடுக்கையிலே எழுந்திருக்கத்தள்ளாது
உற்றுற்றுப்பார்த்து ஒருபோதுவுண்டிருப்பாள்
தின்றுளிலையடக்காய் தேனார்குழலாளும்
அம்மாநீராடாள் அருங்குழல்பந்தாடாள்

காரிழையாள்மாதுக்கு கழுத்துகள்நேர்ந்ததுகாண்
குழிசாலுகள்போல சூலவயிறுபெருத்து
திருவயிறுமேனியுஞ் சீர்பெறவேதான்செழிக்க

கலந்தாரி கெர்ப்பமடைந்ததை
தாதிமார்காண்கிறது.

தாய்போலேவளர்த்தெடுத்த தாதியவள்பார்த்து
மாதுமுகம்நோக்கி மங்கையெடுத்துரைப்பாள்
வண்டார்குழலியரே மங்கையராய்த்தோன்றுவதேன்
மாலைக்குழலாளே மைந்தன்வந்தவாரேது
கழுத்தடிகள்நேர்ந்து கன்னிமுகம்வேறுபட்டு
இளைப்புந்தளிர்ப்புமாக ஏந்திழையேசொல்லுவதேன்
மன்னன்திருமகனார் வந்தாரோவுறவுடனே
அரசர்களும்பூமுடியா ளல்லிவரவிட்டாளோ
மெத்தவறிவுடையாள் மெல்லிவரவிட்டாளோ
மாலையணிமார்பன் மைத்துனனார்வந்தாரோ
பூங்குழலேவுனைத்தழுவி புல்கியவர்போனாரோ
வேறுபட்டமாதரசே மெல்லியரேயுறையுமென்றான்

கலந்தாரி தாதிகளைத் தூறுகிறது.

அவ்வசனங்கேட்டு ஆரவிளமுலையாள்
ஆரூதகோபமது ஆற்றமுடிபோகாமல்
இத்தனைஇடும்புகளை என்னுடனேசொல்லவந்தீர்
முன்னொருவம்புகளை மொய்குழலேசொன்னீர்கள்
காசிவளர்பூமுடியார் கர்னருக்கறிக்கையிட்டு
ஆக்கினைகள்செய்யாமல் ஆரணங்கேநானிருந்தேன்
ஒருவரறிந்தால் உலகமெல்லாந்தானறியும்
இந்நாள்வரையிலும் இருந்துவளர்ந்தோமே
கூடியிருந்தீரே கொம்பனைமாரெல்லோரும்
இதுநடுவில்வந்து எவரழித்தாரெந்தனையும்
கொல்லவினைசெய்கிறாய் கொம்பேரிடையாளே
இந்தச்சிறைவைத்ததினால் எல்லோருஞ்சொல்வீரோ
தாதியர்க்குயேளிதமாய்த் தையலரேநானானேன்
என்றுமிகத்துக்கித்து ஏந்திழையாள்சொல்லுகையில்
தாதியர்களெல்லோரும் தையலண்டையோடிவந்து
சுத்திநிற்கும்பெண்களுக்குஞ் சூழ்ந்திருக்குந்தாதிகட்கும்
காசினியோர்புகழுங் கர்னர்வரும்வேளையிலே

ஆரவிளமுலையாள் அழுதகுரல்கேட்டால்
நாக்கோடுமூக்கறுப்பார் நல்லசெவிதானறுப்பார்
என்று-மாதுதிருவடிக்கு வந்திறங்கிதெண்டனிட்டு
தாமக்கருங்குழலாள் தாதியருங்கூறுவாள்
மாதாநீரொளித்தாலும் மைந்தனொளித்திடுமோ
சூலொளிக்கப்போகாது துன்னுங்கருங்குழலே
இன்னமொருதிங்கள் ஏந்திழையேசென்றாலும்
தானேயறிகின்றார் தங்கக்குழலாளே
நாங்கள்-அறியாமற்சொன்னோம் அரசேபொறுத்தருள்வீர்
என்று-மாதுதிருவடிக்கு வந்திறங்கிதெண்டனிட்டாள்
தாதியவள்தணிக்கத் தனித்திருந்தாள்தையலரும்

கர்னன் வேட்டைக்குப் போய்வருவது.

காசிலிவர்னர் கர்னரதிகாரன்
வேட்டைக்குப்போய் மீண்டுவருகையிலே
விடாய்த்துமொருமண்டபத்தை வீற்றிருந்தகர்னரவர்
சிந்துகவிதனிலே அல்லியம்மாள்தூதுவனும்
ஆனந்தமாகவே ஆச்சாரச்சாவடியில்
மேளங்கள்தாளங்கள் விருதுபலமுழங்க
அவன்வரும்வழிதனிலே அதிகர்னர்வீற்றிருந்தார்
மண்டபத்தினருகாக மாதுமையாள்தூதுவன்

அல்லியுடையதூதன் கர்னரைக்காண்கிறது.

வந்தங்கேநின்று மன்னவனைபபார்த்து
ஆரோதெரியாது ஆதித்தசந்திரன்போல்
ஆரென்றுபார்ப்போமென்று அருகினில்வந்துநின்று
காணவென்றுதானும் கையெடுத்துதெண்டனிட்டான்
அடிபணிந்ததூதுவனை யாரென்றுதான்கேட்க
ஆருயிரவரென்னும் அதிவீரபாண்டியர்கள்
அணிமதுரைநாட்டுக்கு அரசுமன்னன்தூதுவன்யான்
பொன்னுமணியழகன் புலந்திரற்குத்தூதுவன்யான்
அதற்குநீரையரல்லோ அதனாலேகுற்றமுண்டோ
மன்னர்திருவடிக்குமறுபடியுந் தெண்டனிட்டான்
மாணிக்கத்தூண்மறைவில்மங்கையரும்போயொளித்தாள்

கர்னர் கலந்தாரியைக்கேட்டது.

காசிலிவர்கர்னர் கர்னரவர்தான்பார்த்து
மாதுமையாள்தானொளிக்க மன்னவருமேதுரைப்பார்

நாணமறிந்தாயோ நாமக்குலவிளக்கே
வெட்கமறிந்தாயோ வேல்புருவங்கண்ணாளே
நாணமும்வெட்கமும் நாயகமேகற்றுயோ
நீயேயறிந்தாயோ நேரிழையேபுத்திகளை
காரிழையேயுந்தனுக்கு கற்பித்தார்யாரோதான்
உன்-மைத்துனனார்மீறி வளர்ந்துயிருக்கிறார்
நாடாளக்கற்றாலும் நாமக்குலவிளக்கு
செம்பொன்மணிமுடியான் செங்கோல்பிடித்தாலும்
வாராதிருந்தானே வளவிலொருபயணம்
வண்டார்குழலாளை வாழாப்பெண்ணாக்கிவைத்தான்
ஆனந்தமார்பனை ஆணையிட்டுவரவழைத்து
விஜயன்றிருமகனை விலங்குகள்போடவைப்பேன்
என்றுமிவருரைக்க ஏந்திழையாள்தான்பேசாள்
ஏறிட்டுப்பார்த்தாரா மிந்திரனார்தேவியரை
காலைத்தொடங்கி கரியகுழலளவாய்
பார்த்தார்பலகாலும் பார்த்தன்மருமகளை
தருமமுடியழகன் தாதியரைத்தானழைத்து
இவள்-மையெழுதுங்கண்ணாள் மலர்சொரியுஞ்செவ்வா
யாள், சந்திரவாயுதம்போல் தளும்புகிறதிருமுகங்கள்
சீறியிருப்பதென்ன செண்பகப்பூமேனியெல்லாம்
அலர்தாமரைபோல் ஆரணங்குதிருமுகங்கள்
மலர்ந்ததிருமுகங்கள் வாடியிருப்பதென்ன
ஆடைகுறைவாச்சோ ஐவர்மருமகட்கு
ஆரமுலையாட்கு ஆபரணங்குறைச்சலுண்டோ
ஏதனாலேவாடினாள் எங்கள்குலவிளக்கு
மதுரைக்குப்போக மங்கையரும்நினைத்தாளோ
மைத்துனரைத்தானும் மாதுநினைத்ததுண்டோ
வண்டணியுங்குழலாள் வாடியிருப்பதென்ன
இதுவென்னகருமம் எனக்கரியக்கூறுமென்றார்
தாமக்கருங்குழலாள் தாதியவளேதுசொல்வாள்
வேறொன்றுமில்லையையா வேந்தர்பெருமானே
தாரார்குழலுடையாள் தலைநோகுதென்றுசொல்லி
உண்ணாதிருந்தாள்காண் ஒன்றிரண்டுநாளாக
கர்னாதுகேட்டு காரிழையேதாதிகளே
எந்தனுக்குசொல்லாமல் இருந்தகருமமென்ன

உங்களை-சிறையிலேவைத்து சீர்பாதமாறிவைப்பேன்
தலையைசிறைத்து தாள்விலங்குபோட்டுவைப்பேன்
என்று-ஏறிட்டுபார்த்தாராம் இந்திரனார்தேவியரை
காலைத்தொடங்கி கரியகுழலளவாய்
பார்த்தார்பலகாலும் பார்த்தன்மருமகளை
தாய்போல்வளர்த்தெடுத்த தாதியரைத்தானழைத்து
வண்டார்குழலாட்கு மைந்தராய்த்தோன்றுதுகாண்
பேடைமலர்கண்ணாட்குப் புத்திரராய்த்தோன்றுதுகாண்
மன்னர்திருமகனும் வந்தானோயிவ்விடத்தில்
வாள்விசயன்புத்திரனும் வந்தானோவுறவாக
கற்கோட்டைமுத்திரையுங் காவலர்கள்விழித்திருக்க
ஆகாயமார்க்கத்தில் அந்தரமாய்வந்தானோ
மாதுமணவாளன் வந்தானோசொல்லுமென்று
கர்னரவர்கேட்கையிலே காரிழைமார்கூறுவார்
நாலால்கடுந்திரளார் நூற்றுவற்கும்பிள்ளையில்லை
மகாராசராசருக்கு மைந்தன்முதலில்லையே
ஆரைநீர்கண்டீர் அடையாளம்நீர்பார்த்தீர்
நீர்-கண்டகுறிப்பை கருத்துடனேசொல்லுமென்றாள்
காசிலிவர்னர் கர்னரவரேதுசொல்வார்
வண்டார்குழலாட்கு மைந்தனேதப்பாது
மாதுமணவாளன் வந்தகுறிகாணோமே
மதுரைதுரைமகனும் வரத்துமில்லையென்று
ஏந்திழையே நீங்கள் என்மேலேஆணைவிட்டு
தாமக்கருங்குழல்மார் தாதியருமூப்பிகளும்
சேரவேயோடிவந்து சேயிழைமாரெல்லவரும்
காசிலிவர்னர் கர்னரேயும்மாணை
உம்மாலேயாணையடி ஒருகுறியும்நாமறியோம்

கர்னர் தாதிகள்மேற் கோபித்தது.

காசிலிவர்னர் கர்னருங்கண்சிவந்து
அவளுக்கு-ஒன்றைபணிதியிட்டு வுத்தரியபட்டுடுத்தி
ஆபரணமிட்டு அழகாகப்பட்டுடுத்தி
வைத்தேனேயுங்களை மங்கையற்குக்காவலாய்
சொல்லுதற்குவைத்தேனே தோகையிளங்கொடியே
ஆடைகளையுமென்றார் ஆபரணம்வாங்குமென்றார்
திரளானஆபரணஞ் சேரக்கழட்டுமென்றார்

பாவாடையோர்டே பைங்கொடிமார் நீங்களுங்கள்
மாணிக்கப்பேழையிலே வைத்தாரேவுங்களை நான்
ஆக்கினைகளில்லையே அலைதாரன்பட்டணத்தில்
வாசல்பேரத்தனையும் வகையுறவேவெட்டிடுவேன்
சிந்துநாடாளுகிற தேத்தரசன்மன்னவனை

கர்னன் தூதனைக்கண்டு புலந்திரன் செய்திகேட்டது.

காசிலிவர்னர் கர்னருந்தான்வாழ்த்தி
தூதன்றனைப்பார்த்து சொல்லுவாரொருவசனம்
என்னைப்போல்மீறியே இந்திரனும்வளர்ந்தானே
நாடாளக்கற்றானே நாமக்குலவிளக்கு
செம்பொன்மணிமுடியான் செங்கோல்பிடித்தானே
இப்படிக்குமீறியே இந்திரனும்வளர்ந்திருக்க
வண்டார்குழலாளும் வளர்ந்துசமைந்திருக்க
திங்களொருமுறைதான் தேன்மொழியாள்முழுகுகிறாள்
பேடைமயிற்கண்ணாள் பிள்ளைபெருங்காலம்
காவலிலேவைத்ததுயான் காக்கிறேன்கண்மணியே
மாலைமுடியாளும் வரவிட்டாலாகாதோ

கர்னருக்குத் தூதன்சொல்வது.

என்றுரைக்கக்கர்னர் எடுத்துரைப்பான் தூதனவன்
மதுரையறுகாதம் மன்னவனுமாளுகிறான்
மற்றுமுள்ளநாடனைத்தும் மன்னனரசாளுகிறான்
அரசாளும்நாயகியாள் அல்லிபெருமாளும்
காவலர்கள்பாண்டவர்கள் காடுறைந்தநாள்முதலாய்
மாலைமுடிபாண்டவர்கள் வனவாசம்போனமுதல்
வண்டார்குழலாளு மயிர்விரித்தநாள்முதலாய்
மாதமொருமுறைதான் வருவாள்கொலுமுகத்தில்
என்றுரைக்கத்தானும் எடுத்துரைப்பார்கர்னரவர்
நல்லதுதூதுவனே நான்றங்குமண்டபத்தில்
போசனமாகுதுகாண் பொருந்தியமுதுண்டு
நடவுங்காண் தூதரென்று ராசமன்னர்சொல்லுகையில்
அவ்வசனங்கேட்டு அத்தூதனேதுசொல்வான்
உண்டுபசியாறிவந்தேன் உங்கள்கிருபையினால்
போசனங்கள்தேவையில்லை புகழ்வீராளந்தனுக்கு
வெகுநேரஞ்சென்றாலே மெல்லியருங்கோபிப்பாள்
மாதினிடகோபத்தை மன்னவரே நீரறிவீர்

போகவிடைதாருமென்று புகழ்வீரன்தெண்டனிட்டான்
அவ்வசனங்கேட்டு அலங்காரபூஷணியாள்
தாமக்கருங்குழலாள் தாதிகளைத்தோளூன்றி
காரிழையாள்மாது கைலாகுதான்கொடுக்க
மெத்தவேதானடந்து வேல்புருவங்கண்ணாளும்
மாமனவர்வந்திருக்கும் மண்டபஞ்சென்றேறினார்
மாமனார்பாதமது வணங்கியேதெண்டனிட்டாள்
வந்துபணிந்ததொரு மருமகளைத்தான்பார்த்து
வாழ்வாய்வளருவாய் மாயனடிபெருவாய்
மகாலட்சுமியைப்போல் மங்கிலியமுண்டாக
மதுரைஎல்லாமாள்வதற்கு மைந்தனைப்பெற்றிடுவாய்
வாழ்த்திவிடைகொடுக்க மாதுகருங்குழலாள்
அரிவையற்குசொல்லி அறிக்கையிடவேண்டுமென்று
தன்மனதுக்குள்ளே தார்வேந்தர்தானினைத்து
மேளவகைகளும் விருதுகள்கையமர்த்தி
மாதினதுகோட்டைக்கு மன்னவரும்போய்புகுந்தார்
வாசல்பதினெட்டும் வைத்திருக்குமுத்திரையும்
சேரவேதான்திறந்து செம்பொன்மணிமுடியாள்
உத்தமனும்வீரியனும் உள்கட்டிற்போய்புகுந்தான்
காலுக்குநீர்வார்த்தால் காரிழைமாதகியாள்
பாவையழகியரும் பட்டாலடிதுவட்டி
மாணிக்கஆசனங்கள் மன்னருக்குதான்போட்டார்
இட்டதொருஆசனத்தில் இன்பமுடன்வீற்றிருந்தார்
வந்தஇளைப்பால் மன்னர்திருமுகமும்
கவரிபணிமாறினார் கட்டழகிதாதியர்கள்

கர்னன் கலந்தாரியை தாதிகளைவிட்டழைப்பது.

தமக்குகவரியிட்ட தாதிமுகம்நோக்கி
அரசாளும்நாயகியை அல்லிதிருமகனார்
போரஞ்சாவீரன் புலந்திரனார்தேவியரை
காரிழையாள்மாது கலந்தாரிநாயகத்தை
ஆரமுலையாளை அழைத்தோடிவாருமென்றான்
தன்கையில்கவுதாரியை தானெருத்திகைகொடுத்து
மங்கையாள்பள்ளிகொண்ட மண்டபத்திற்போய்புகுந்தாள்
திருவேயுருவழகே செல்வப்பெருந்தேவி
அத்திநகருடைய அலங்காரபூஷணமே

கலந்தாரி கர்னரைக்காண்கிறது.

அன்னமேயும்முடைய அம்மானும்வந்தார்காண்
மங்கையரேயும்முடைய மாமனும்வந்தார்காண்
காசிநகராளும் கர்னரிங்கேவந்தார்காண்
மாலைமுடிமார்பன் மண்டபத்தில்வந்துநின்று
உம்மையழைத்துவர உத்திரவுசொன்னார்காண்

கர்னன் தூதனுக்குவெகுமதி செய்தனுப்பியது.

வந்துபணிந்ததொரு மாதினது தூதனுக்கு
உத்தரீயப்பட்டுகளும் உடுக்கநல்ல ஆடைதந்தார்
வாய்த்தயிலைச்சுருளும் வர்னப்பழக்காயும்
காவலனும்வீரியனும் கைநிறைய அள்ளியிட்டான்
போகவிடைபெற்று போய்விட்டான் தூதனவன்

கர்னன் கலந்தாரிகோட்டைக்குவருவது.

அப்போகர்னர் ஆலோசனைபுரிந்து
காரிழையாள்மாதுநல்லாள் கலந்தாரிநாயகிக்கு
அவர்-மைத்துனனார்மீறி வளர்ந்தவருமைகளும்
தோரணக்கழுவுதனில் சுந்தரனைப்போட்டிடுவேன்
உத்தமிமாருங்களை உசுதூண்டில்போட்டிடுவேன்
என்றுமிகக்கோபித்து எரிபறந்துகண்சிவந்து
வாளையுருவிக்கொண்டு மன்னவரும்புறப்பட்டார்
வாசற்படிகடந்து மன்னன்பெருமாளும்
மற்றுமொருநினைவாய் மன்னவனுந்தானினைந்து
அவள்-ஆச்சியரைக்கேட்டு அறிந்துமேநாம்வருவோம்
என்று-வாளைவுறையிலிட்டு மன்னரதிகருணர்
தருமமுடியழகன் தலைவாசல்தான்கடந்து

கர்னர் கலந்தாரியின் தாயாரைக்கேட்க வருகிறது.

அவன்-சேனைபரிகலமுந் திரளுமணியுடனே
வந்துபணிந்ததொரு மகனையும்பாராமல்
கோபமுடனேயந்த கொற்றவனுந்தானடந்தார்
மாதினதுகோட்டையை மன்னவனுங்கிட்டிவந்தான்
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாளப்போது
மேளவகையும் விருதுடனேமெல்லியரும்
கேளிக்கைபார்த்திருந்தாள் கிளிமொழியாள்தங்களுடன்
மாதினதுகோட்டையை மன்னவனுங்கிட்டிவந்தார்
தண்டிகையைவிட்டிறங்கி தருமமுடியானும்

உத்தமனார்வீரியனும் உட்கட்டிற்போய்புகுந்தார்
தாமக்கருங்குழலாள் தாதியெதிர்கண்டு
இவர்-வந்ததொருகாரியம் மாதேதெரியாது
ஆலாத்திகாட்டாமல் அரிவையரே நாமிருந்தோம்
என்றமிகத்தாதியர்கள் எல்லோருமோடிவந்து
காலுக்குநீர்வார்த்து கட்டழகிதாதியர்கள்
பாவையழகியர்கள் பட்டாலடிதுவட்டி
கவுரிபரிமாறினார் காரிழைமாரப்போது
தனக்குகவுரியிட்ட தாதிமுகம்நோக்கி
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாளெங்கேயென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அரிவையர்களோடிவந்து
துன்னுங்கருங்குழலாள் துற்சடையண்டைவந்து
தெண்டனிட்டதாதியர்கள் தேனார்குழலாட்கு
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாள்தான்பார்த்து
எங்குவந்தாய்தாதி எனக்கரியக்கூறுமென்றாள்
கர்னர்வந்தாரென்று காரிழைமார்சொல்லுகையில்

கர்னரைக்காண துற்சடைவருகிறது.

கர்னர்வந்தாரென்றவுடன் கடுகியெழுந்திருந்தாள்
பட்டுபளபளென்ன பாடகக்கால்சோதிமின்ன
முத்துமிணிமினென்ன மோதிரக்கால்சோதிமின்ன
மாதுநடையசைந்து வந்தாளேமயில்போல
கர்னாதுபாதத்தில் கட்டழகிதெண்டனிட்டாள்
வந்துபணிந்தவளை வாழ்த்தியந்தமன்னவனும்
ஆசனம்போட்டார் அங்கிருக்கும்தாதியர்கள்
இட்டதொருஆசனத்தில் இருந்தாளிளங்கொடியும்
அங்கவளநாட்டார் அதிகருணர்திருமுகத்தை
அண்ணா-வாடியிருப்பதென்ன மன்னர்திருமுகங்கள்
சீரியிருப்பானேன் செண்பகப்பூமேனியெல்லாம்
அலர்ந்தசெந்தாமரைப்போல் அண்ணாவுன்திருமுகங்கள்
கருகியிருப்பதென்ன கர்னர்பெருமாளே
மானகங்கொண்ட மன்னன்திரியோதிரன்
ஆடரவங்கொண்ட அரசன்திரியோதிரன்
இடும்பனவனுன்னை யேடாகூடஞ்செய்தானோ
என்னகருமமிது எனக்கறியச்சொல்லுமென்றாள்
என்றுமவன்கேட்டு எடுத்துரைப்பான்மன்னவனும்

கர்னர் துற்சடைக்குச் சொல்வது.

எனக்கு-பத்தினியாள்சாபம் பலிப்பதற்குமுன்னாக
அரசாளும்நாயகியாள் அல்லித்திருமகனார்
போரஞ்சாமன்னன் புலந்திரவீரியரும்
இந்திரனார்தேவி என்னகதிபோனாலும்
தாமக்குழளாளென் தலைக்குவினைசெய்தாளோ
வேல்பொருதுங்கண்ணாளும் வெட்டியெறிந்திடுவாள்
என்றுரைக்ககருணர் எதுரைப்பாள்துற்சடையும்
மாதுநல்லாளிப்பொழுது வன்கொடுமைசெய்தாக்கால்
வேல்பொருதுமல்லியம்மாள் வெட்டவினைசெய்வாளே
நீர்-அத்திபுரத்தை அரசாண்டிருக்காமல்
நீர்-மாளுகிறகாரியமேன் மன்னன்பெருமாளே
என்னகருமம் எனக்கரியச்சொல்லுமென்றாள்
காசிவளநாட்டார் கருணரவரேதுசொல்வார்
காரிழையாள்மாது கலந்தாரிநாயகிக்கு
பொல்லாமசக்கைகள் பொருந்தித்துபொற்கொடிக்கு
ஆகாதமசக்கை ஆரிழைக்குண்டாச்சு
வண்டார்குழலாட்கு மைந்தனாய்த்தோன்றுகுது
மதுரைப்பெருமாளும் வந்ததுகாணேமே
என்னகருமமோ என்றாரேகருணரவர்
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாள்கூறுவாள்
மர்துமணவாளன் வந்தால்வரவேணும்
உமது-மைந்தன்புலந்திரனார் மன்னவன்தான்வரவேணு
ம், மற்றுமொருமன்னவர்கள் வருவாரொருகாவலிலே
வாசற்றடைதாண்டி வருவாரொருவருண்டோ
தாதிமார்தங்களுக்கு தையலர்கள்சொல்லலையோ
தாதியவர்க்கேட்கிலையோ தார்வேந்தாவென்றுரைத்தாள்
தங்கையவள்சொல்லுகையில் தனஞ்சயனார்கூறலுற்றார்
தாதியரையெல்லாம் தனித்தனியேகேட்டுவிட்டான்
தாங்களெல்லாமறியோமென்று தன்மேலே ஆணையிட்டார்
என்னுங்கருங்குழலாள் துற்சடையுந்தான்கேட்டு
மாதுதிடுக்கிட்டு வயிறுமொருகைபிசைந்து
இழந்தோமேநாமும் யிளங்கொடியையின்றேடே
ஆர்சொல்லுங்கேளானே அரவக்கொடிவேந்தன்
என்றுஆரவிளமுலையாள் அரைந்துகொண்டுதானழுதாள்

துற்சடையாள் கலந்தாரியை காணவருதல்.

ஆரணங்குமவள்சேதி அறிந்துநான்வருவேனென்று
வேல்புருவங்கண்ணளும் வேந்தரைக்கையமர்த்தி
மன்னவரைக்கையமர்த்தி மாதுவெளியில்வந்தாள்
தண்டிகைகொண்டுவந்தார் தாமக்குழலாட்கு
தாமக்குழலாளும் தண்டிகைமேலேறினாள்
வண்டார்குழலாளை மறைத்தார்கள்குடையதனால்
சுற்றிபிரம்படிக்க தோழியர்சூழ்ந்துவர
மாதினதுகோட்டையண்டை மங்கையரும்வந்துவிட்டார்
வாசற்பதினெட்டும் வைத்திருக்குமுத்திரையும்
சேரவேதான்திறந்து தேனார்குழலாளும்
தண்டிகைவிட்டிறங்கி தையலந்ததுற்சடையாள்
ஓடமலர்க்கண்ணளும் உட்கட்டில்போய்புகுந்தாள்
தாமக்குழலியர்கள் தாதிகளெதிர்கண்டு
காலுக்குநீர்வார்த்தார் காரிழைமார்தாதியர்கள்
பாவையழகியரும் பட்டாலடிதுவட்டி
வந்துயிளைப்பார வான்கவரிவீசினார்கள்
மாணிக்கஆசனத்தில் மங்கையரும்வீற்றிருந்தாள்
தாதிமுகம்நோக்கி தையலருமேதுசொல்வாள்
காரிழையாள்மாது கலந்தாரிநாயகத்தை
ஆரமுலையாளை அழைத்துவாயிங்கேயென்றாள்
என்-கையில்கவுதாரியைத் தானொருத்திகைகொடுத்து
வீசுங்கவுரிதனை வேறொருத்திகைபிடித்து
மங்கையரும்பள்ளிகொண்ட மண்டபமேபோய்புகுந்து
அழகேதிருவுருவே அலங்காரப்பூஷணமே
அன்னமேசொர்ணமே அமிர்தமடமானே
சாந்துகழுத்தியரே சந்தனப்பூமேனியரே
ஆரணங்கேயும்முடைய ஆச்சியழைக்கிறாள்காண்
ஆச்சியென்றுசொல்லுகையில் அதிகமனமகிழ்ந்து
பூவணையைவிட்டிறங்கிப் பொற்கொடியாள்நாயகியும்
மாதாவின்பாதமது வணங்கியேதெண்டனிட்டு
வண்டார்குழலாள் மலரணையாள்பூவெடுத்தாள்
தாமக்குழலாளும் தையலரைதோளூன்றி
காரிழைமாதருக்குக் கைலாகுதான்கொடுக்க
மெத்தெனவேதானடந்து வேல்பொருதுங்கண்ணளும்

துற்சடையாள் புத்திரியைக் கண்டது.

மாதாவும்வீற்றிருக்கும் மண்டபஞ்சென்றேறினள்
வந்துபணிந்ததொரு மகளாரைவாழ்த்துகிருள்
வாழ்வீர்வளர்ந்திடுவீர் மாயனடிபெறுவீர்
அத்திபுரமாள அரசுகளைப்பெற்றிடுவீர்
கண்களிலேயொத்திக் கனிவாயைமுத்தமிட்டு
கற்பூரந்தின்னதொரு கனிவாயைத்தான்முகந்து
வண்டார்குழலாரை வாய்நெருடிமுத்தமிட்டு
ஏறிட்டுப்பார்த்தார்கள் இளங்கொடியாள்சீர்வடிவை
பார்த்தாள்பலகாலும் பார்த்தன்மருமகளை
காசிலிவர்னர் கருணருரைத்ததெல்லாம்
பொய்யென்றிருந்தேனே புகழ்வீரன்சொன்னதெல்லாம்
மெய்யாகத்தோன்றுதே வேல்புருவங்கண்ணுட்கு
சுற்றிநிற்கும்பெண்கள் சூழ்ந்திருக்குந்தாதியர்கள்
அங்கவரைக்கண்காட்டி ஆரமுலையாளும்
கூறுவாள்வாய்திறந்து கொம்பனையைத்தான்பார்த்து
வண்டார்குழலாளே மைந்தனைய்தோற்றுதுகாண்
பேடைமலர்க்கண்ணுளே பிள்ளையாய்த்தோற்றுதுகாண்
மன்னர்திருமகனர் வந்தாரோயிவ்விடத்தில்
வாள்விசயன்புத்திரனர் வந்தாருவுளவாக
கற்கோட்டைமுத்திரையுங் கர்னரதுகாவலிலே
அரசாளும்பூமுடியாள் அல்லிவரவிட்டாளோ
ஆகாயவான்புரவி அவரேறிவந்தாரோ
உனது-மைத்துனனர்வந்த வாரெனக்குச்சொல்லுமென்
ருர், என்-கண்ணுட்டிநாயகரை கண்ணுலேபாரேனே
மாதுமணவாளருக்கு மருவவிட்டுப்பாரேனே
மாலைமுடியாரை மறையவைத்துப்பாரேனே
ஏகாந்தமாக எனக்கொருகால்சொல்வாயோ
மைத்துனனர்வந்த வகையெனக்குச்சொல்வாயோ
அவள்-வார்த்தைகள்பேசாமல் மறுவார்த்தைதானுரைப்
பாள், பூஞ்சிலம்பைப்பார்த்து புனக்கிளியுந்தானுரைப்பா
ள், கண்டாளேமவுனத்தைக் காரிழையுமப்போது
காசிலிவர்னர் கருணர்பெருமாளும்
மாளுகிறேனென்று வாளுருவிகைபிடித்து
ஆயுதம்நாட்டி அலைதாரன்மாளுகிருர்

காசிலிவர்னர் கருணரேமாண்டாக்கால்
மகாராஜராஜா மன்னவர்கன் நூற்றுவரும்
சேரவேமாளுவார் செம்பொன்முடிராஜர்
உங்களையர்தன்முதலாய் என்தாயார்தன்முதலாய்
நாங்கள்-அத்தனைபேரும் அழியத்திருவுளமோ
மாளத்திருவுளமோ வண்டார்குழலாளே
மைத்துனனுர்வந்த வாரெனக்குச்சொல்லுமென்றாள்
இவள்-வார்த்தையுரையாமல் மறுவார்த்தைதான்பேசாள்
தன்-பூஞ்சிலம்பைபார்த்து புன்கிளியுந்தானிருப்பாள்
துன்னுங்குழலாள் துற்சடையுங்கூறுவாள்
மகாராஜராஜாக்கள் மன்னர்கள்தம்மாணை
அரசாளும்நாயகியாள் அல்லிதிருவாணை
வனவாசங்காடுரையும் மன்னர்திருவாணை
மாதுகுழல்விரித்த மயிலணையாள்திருவாணை
உன்-மைத்துனர்மேலாசைகண்டீர் மாதரசேசொல்லுமெ
ன்றாள், என்னுணைமாதரசே எனக்குனக்குசொல்லுமென்
றாள், மைத்துனர்மேலாணையிட மாதருங்கோபித்து
வண்டார்குழலாளு மலரணையைவிட்டிரங்கி
பள்ளிகொள்ளுமண்டபத்தை பைங்கிளிஉட்புகுந்தாள்
தழுவணையில்கைகொடுத்து தையலருஞ்சார்ந்திருந்தாள்
துன்னுங்கருங்குழலாள் துற்சடையுந்தான்பார்த்து
மாதுதிடுக்கிட்டு வயிற்றைபிசைந்துகொண்டாள்
இழந்தோமேநாமும் இளங்கொடியையிந்நேரம்
ஆரமுலையாளும் அழகியகண்முத்துதிர்த்தாள்
தாமக்குழல்மங்கையர்கள் தாதியர்கள்வந்துநின்று
மாதிருக்குமண்டபத்தை மங்கையர்கள்போய்புகுந்து
இத்தனை ஆணைக்கும் இருந்தீர்தாய்மடிமேலே
மைத்துனன்மேலாணையிட வந்துவிட்டீர்கோபித்து
உன்-மைத்துனனுரிங்கே வந்தபடிதப்பாது
ஆணழகரிந்திரனுர் வந்ததாய்த்தோன்றுகுது
காசிலிவர்னர் கருணர்பெருமாளும்
மாளுவேனென்றுசொல்லி வாளுருவிகைபிடித்து
ஆயுதம்நாட்ட அவரிருக்கப்பூங்கொடியே
அங்குதிசைநாட்டான் அவர்மாண்டாராமானல்
மகாராஜராஜாக்கள் மன்னவர்கள்நூற்றுவர்கள்

சேரவேமாளுவார் செம்பொன்மணிமுடியார்
உங்கள்-ஐவர்முதலாக ஆச்சியருந்தான்கூட
ஆரணங்கேநாங்கள் ஆயிரம்பேர்தாதியரும்
இத்தனைபேர்மாள இழக்கத்திருவுளமோ
மாளத்திருவுளமோ வண்டார்குழலாளே
மைத்துனனார்வந்த வகைபிரித்துசொல்லுமென்றாள்
அதற்குப்பவளசேனை அல்லிமருமகளும்
பார்த்தார்கள்தாதியரும் பைங்கிளிமாரெல்லோரும்
உமது-மைத்துனர்மேலாணை மாதரசேசொல்லுமென
தாய்போல்வளர்த்தெடுத்த தாதியவள்சொல்லுகையில்
ஆரணங்குநீரும் ஆணைவிடுஞ்சொல்லுகிறேன்
நீர்-சொன்னபிறகல்லவோ தோகையாணைவிடுவதுகாண்

கலந்தாரி தாதிகட்குச் சொன்னது.

காரிழையாள்மாது கலந்தாரியேதுரைப்பாள்
முழுகிய நாலாம்நாள் முருகுழலேயெல்லோரும்
உடனுகப்பள்ளிகொள்ளும் உண்டானபெண்களெல்லாம்
பாதியிரவுசென்று பதினாறுநாழிகையில்
வீசுதுகாண்மேனியெல்லாம்வெகுநெருப்பாயெங்களுக்கு
மண்டபத்தின்கூடத்தில் மாதாவேபள்ளிகொண்டோம்
அன்றையராத்திரியில் அருச்சுனனார்புத்திரரும்
ஆகாயவான்புரவி அவரேயலர்தாரன்
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
சந்தனமுங்குங்குமமுஞ் சவ்வாதுபரிமளமும்
வகைவகையாய்ப்பூஷணங்கள் வகையுடனேதான்கொடு
த்து, அன்றையராத்திரியில் அவர்வந்துபோனார்காண்
அடையாளம்தான்கொடுத்து அவர்போனார்தென்மதுரை
எங்கேயடையாளம் என்றாளேதாதியவள்
மாணிக்கப்பேழையிலே மைந்தரேகட்டிவைத்தேன்
இத்தனை ஆக்கினைக்கு இருந்தீர்காண்தாய்மடிமேல்
மைத்துனர்மேலாணையிட மாதரசேகோபித்தீர்
மகாராசராசாக்கள் மன்னர்மேலாணையிட்டேன்
வனவாசங்காடுறைந்த மாமன்மேலாணையிட்டேன்
மாமியார்பாஞ்சாலி மயிலணைமேலாணையிட்டேன்
அரசாளும்நாயகியாள் அல்லிமேலாணையிட்டேன்
உமது-மைத்துனனாராணை முக்காலும்நானுமிட்டேன்

ஏலங்குழலாளே இருமென்றெழுந்திருந்தாள்
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாள்தானிருக்க
மாதிருக்குமண்டபத்தை மயிலனையாளோடிவந்து
ஆருமறியாமல் அங்கொருவர்காணுமல்
அடையாளந்தான்கொடுத்து ஆணழகர்போனாராம்
மாணிக்கப்பேழை மாதரதுமுன்னேவைத்தாள்
அல்லிக்கயிறும் அழுந்தியசீராவும்
சீருவுங்கச்சை திருமுடியும்தானெடுத்து
அல்லியடையாளமென்று அரிவையவள்சொல்லலுமே
ஆணிப்பொன்னாலே அழுத்திட்ட அடையாளம்
சபதமுடித்தாரே தருமமுடியாரும்
இப்படிக்குமீறி இந்திரரும்வளர்ந்தாரோ
நாமக்குலவிளக்கு நாயகர்வீரியரும்
செம்பொன்முடியாருஞ் செங்கோல்பிடித்தாரோ
முத்திரைமோதிரத்தை முருகுழலாள் தானெடுத்து
கட்டழகன்மோதிரத்தைக் கண்களிலேதானுமொத்தி
பவுத்திரமோதிரத்தை பைங்கிளியாள்தானெடுத்து
கண்மணிநாயகரைக் காணேனென்றுக்காலும்
மாதுமணவாளன் வந்ததைப்பாரேனே
காவலர்கள்வீரியரைக் கண்ணாலேபாரேனே
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்காணுமல்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிபாளையத்தில்
பாராமற்போனேனே பாவிநானேனே
காணுதிருந்தேன் கண்ணற்றுளானேனே
கண்டோமேநாமுமிந்த கட்டழகிநிண்ணயத்தை
ஒரு-தாதியறிந்தாளோ தையலதுதன்னடத்தை
என்று-திரேகங்குளிர்ந்து இருதோளும்பூரித்து, பூட்டுமிக
விட்டுதாம் பொன்னபரணமெல்லாம், எங்கள்-அண்ண
ருக்குச்சொல்லி அறிக்கையிடவேண்டுமென்று

துற்சடையாள் கர்னனுக்குச் சொல்லவருகிறது.

சுற்றிப்பிரம்படிக்க சூழ்ந்துவர அரிவையற்கு
ஆயிரம்பேர்தாதியர்கள் அருகினிலேபுடை-சூழ
ஏறிப்பிரம்படிக்க யேந்திழைமாரெச்சரிக்க
மாறிப்பிரம்படிக்க மண்டபஞ்சென்றேறினாள்
தண்டிகைவிட்டிறங்கித் தாமக்குழலாளும்

ஆரவிளமுலையாள் அரண்மனையிற்போய்புகுந்தாள்
அங்குதேசாதிபதி அதிகர்னர்பெருமாளும்
ஏறிட்டுப்பார்த்தார் இளங்கொடியாள்சீர்வடிவை
அலர்ந்தசெந்தாமரைப்போல் ஆரணங்குதிருமுகங்கள்
தாமமுடியாளும் தலைதப்பிவிட்டாளோ
வேல்பொருதுங்கண்ணாளும் வெட்டுதலைவிட்டாளோ
என்னகருமந்தங்கை எனக்கரியச்சொல்லுமென
அஞ்சாதே அஞ்சாதே அண்ணாவேயஞ்சாதே
மதுரைதுரைமகனும் வந்தார்மறைவாக
உன்-மைந்தர்புலந்திரரும் மாதிடம்வந்தாராம்
ஆருமறியாமல் அலைதாரனங்குவந்து
அடையாளந்தான்கொடுத்து அல்லிமகன்போனாராம்
அரசுமன்னர்வைத்த அடையாளமென்றுசொல்லி
மாணிக்கப்பேழையை வைத்தாரேமுன்னிலையாய்
ஆணிப்பொன்னாலே அழுந்திய னுப்பிவிட்ட
பத்தாயிரம்பொன்பெற்ற மாணிக்கவன்சரமும்
கண்டாரடையாளம் கருணர்பெருமானும்
இப்படியேமீறியே இந்திரனும்வளர்ந்தானே
நாடாளக்கற்றானே இராசகுலவிளக்கு
ஊராளக்கற்றானே உத்தமசிகாமணியும்
செம்பொன்மணிமுடியான் செந்நாடுபூண்டானே
தென்னமுடிவேந்தன் செங்கோல்பிடித்தானே
மன்னர்திருமகனு மண்டலத்தையாள்கிறானே
முத்திரைமோதிரத்தை முடிமன்னர்தானெடுத்து
கட்டழகன்மோதிரத்தைக் கைதனிலேதானணிந்தான்
சரியாயிருந்ததுவே தருமமுடியார்க்கு
பவுத்திரமோதிரத்தை பார்வேந்தன் தான்பார்த்து
கட்டழகன்மோதிரத்தைக் கண்மலரிலொற்றிக்கொண்டார்
மாதுமணவாளன் வந்தபடிதப்பாது
மகாராசராசாவை வைத்திருந்துபாரேனோ
மைந்தன்புலந்திரன்றன் வடிவழகைப்பாரேனோ
மாதுமணவாளனுக்கு மருவிட்டுப்பாரேனோ
காணாதிருந்தேன் கண்ணற்றானேனே
பாராதிருந்தேனே பாவினாநானேனே
முத்திரைமோதிரத்தை முடிமன்னர்கையிலிட்டு

மற்றுமடையாள மருமகளேகாட்டுமென்றூர்
காட்டினளடையாளம் கர்னர்மனமகிழ
அடிசில்வரும்வேளை ஆச்சுதுகானண்ணுவே
உண்டுபசியாறி வுத்தமரே நடவுமென்றுள்

கர்னர் புரப்பட்டு வருகிறது.

அங்குதேசாதிபதி அதிகருணரே துசொல்வார்
மகாராசராசாக்கள் மன்னவர்கள் நூற்றுவரும்
சும்மாவிருப்பார்கள் துன்னுங்கருங்குழலே
அங்கே அடிசில் அமுதுண்பேன் தங்கையரே
ஏலங்குழலியரே இருவென்றெழுந்திருந்தார்
வேந்தரதிகர்னர் வெளியேபுறப்பட்டார்
வேட்டைபரிதளமும் வேந்தனதுசேனைகளும்
காட்டில்வாழ்மானுகளும் கானமயிலுகளும்
ஆனைமுயலுகளும் அன்பானவுடும்புகளும்
சிட்டுகுருவிகளுஞ் சிறுகுருவிபூங்குருவி
மன்னவர்கொண்டிருக்கும் வல்லூருகுருவிகளும்
சேரவந்துகூடிற்று சேனைகளத்தனையும்
வேட்டைபுரவிமேல் வேந்தனுந்தானேறி
ஒக்கப்புரவிவிட்டார் வுண்டானதோழரெல்லாம்
சேனைமனுவுகளுந் திரளும்பரிகலமும்
மகாசேனைதன்னுடனே மாலைநெடுமுடியார்

அம்பலத்தில் இரகசியம்.

கூடிவருகையிலே கும்பல்சூழ்ந்துபேசுகிறூர்
காரிழையாள்மாது கலந்தாரிசெய்திகளை
தங்களுக்குள்ளேதான் தனித்தனியேபேசலுற்றூர்
இரகசியங்கள்மிஞ்சுகுது ராசாக்கள் அம்பலத்தில்
அந்தரகசியம் அம்பலத்தில்பெருகியதே
எழுதரிய அம்பலத்தில் ஏகாந்தமிஞ்சினதே
தேசத்தழகனவன் திரியோதிரன்பார்த்து
தனக்குக்கவரியிடும் தாதிமுகம்நோக்கி
ஏதடிபூந்தாதி யேகாந்தரகசியங்கள்
இரகசியங்கள்பெருகுது நலமானதாதியரே
பாண்டவர்கள்ஐவரும் படைகூட்டிவாராரோ
ஆணழகர்பாண்டவரின் ஐவர்வெளிபட்டாரோ
கட்டழகர்பாண்டவரின் காலாள்வருகிறதோ

தருமராதுதம்பியர்கள் தனஞ்செயர்கள்வாராரோ
அம்பலத்துரகசியங்கள் அறிந்துவாதாதியென்ருன்
வீசுங்கவரிகளை வேருெருத்திதானெடுத்து
படிக்குப்படிகடந்து பாவையிளந்தாதி
மானுகன் அம்பலத்தில் வந்தாளேதாதியவள்
உற்றிருந்துகேட்கிருள் ஒருவரும்சொல்லார்கள்
கோணுதமாதவத்துக் குருக்களடிபணிந்தாள்
ஆர்பணிதாதி அரியவுரையுமென்ருர்
ஆர்பணியுமல்லநான் ஐயாவேயுன்பணிநான்
தேசத்தழகுமன்னன் திரியோதிரன்பணிநான்
என்னகருமமிது எனக்கறியசொல்லுமென்ருள்
அம்பலமெல்லாம் அடையாரகசியங்கள்
எழுதரிய அம்பலத்தில் ஏகாந்தமிஞ்சுகுது
பாண்டவர்கள்ஐவரும் படைகூட்டிவாராரோ
ஆணழகர்பஞ்சவர்கள் ஐவர்வெளிபட்டாரோ
காவலர்கள்பாண்டவரிற் காலாள்வருகிறதோ
அம்பலத்துரகசியங்கள் அரிந்துவரச்சொன்ஞர்கள்
என்னகருமமையா யெனக்கறியசொல்லுமென்ருள்
அவ்வார்த்தைகேட்டு அன்பாய்குருக்களுந்தான்
சொல்லப்பயப்படுவோம் சுந்திரதாதியரே
பயப்படுவாருமுண்டோ பார்வேந்தர் அன்னமுண்டு
அரசன்சோர்வுண்டிருந்து அஞ்சிநடுங்குவதேன்
சொல்லுமையாவென்று தோகையிவள்கேட்கையிலே
வேருென்றுமில்லைகாண் வேல்புருவங்கண்ணுளே
அரசாளும்நாயகியாள் அல்லித்திருமகஞர்
பொன்னுமணியழகா புலந்திரர்தேவியற்கு
காரிழையாள் நல்லாள் கலந்தாரிநாயகிக்கு
வண்டார்குழலாட்கு மைந்தராய்த்தோன்றுதுகாண்
மதுரைதுரைமன்னன் வந்ததுவுங்காணுமே
அதஞலேகாணுகுது அடார்ந்தரகசியங்கள்
தங்களிலேகூடி தனித்தனியேபேசுகிருர்
அவ்வார்த்தைகேட்டு அடிபணிந்துதாதியர்கள்
மீளத்திரும்பிவந்தாள் வேல்புருவங்கண்ணுளும்
தேசத்தழகுமன்னன் துரியனடிபணிந்து
ஆசனத்தின்கீழே அடிபணிந்துதெண்டனிட்டாள்

என்னகருமமடி எனக்கரியச்சொல்லுமென்றான்
சொல்லப்பயப்படுவேன் சுந்தரப்பூமுடியே
பாவையழகியற்கு பாவம்வரக்காரணமேன்
அரசாளும்நாயகியாள் அல்லித்திருமகனார்
அருச்சுனனாரீன்றெடுத்த அழகுபுலந்திரனும்
போர்க்கஞ்சாவீரன் புலந்திரனார்தேவியற்கு
ஆகாமசக்கை அருமசக்கையாரிழைக்கு
இட்டபடுக்கையிலே எழுந்திருக்கதள்ளாது
உண்ணாள்குளியாளாம் ஒருநேரமுண்பாளாம்
பந்துபிடித்தறியாள் பள்ளாங்குழியாடாள்
சிந்துகவிகேளாமல் தேனார்குழலாளும்
வேல்புருவங்கண்ணாள் விளையாடசம்மதித்தாள்
வண்டார்குழலாட்கு மைந்தராய்த்தோன்றுதுகாண்
மதுரைவளநாட்டான் வந்ததுவுங்காணுமே
அதனாலேகாணுதையா யம்பலரகசியங்கள்
தங்களிலேகூடித் தனித்தனியேபேசுகிறார்

துரியோதிரன் தாதிகளுக்குச்சொல்லுவது.

என்றுரைக்கத்தாதி இருசெவியில்கேட்டு
தேசத்தழகுமன்னன் திரியோதிரப்பெருமான்
கண்டீரோதாதியர்கள் கர்னன்செய்தகாரியத்தை
ஆற்றிலேதான்மிதந்து அலைந்தொழுகிப்போகாமல்
தேர்ப்பாகனென்று சிலபேர்கள்சொல்லாமல்
பிள்ளைக்குப்பிள்ளையாய் பெரியபிள்ளையாகவேதான்
பொன்னால்மகுடமது பிரபலமாய்த்தான்கொடுத்து
மாற்றிவளர்த்துநான் மகுடமுடிதரித்து
உந்தனைநானுமிப்போ உள்ளாளாய்வைத்தேனே
செகத்தில்புதையாதே சிறுமணல்பாயாதே
உத்தமனுமெந்தனுக்கு வுபகாரஞ்செய்தேனே
தேர்ப்பாகனென்று தெரியவேவேண்டுமோ
சமயமுதலிகளைச் சாமார்த்தியமந்திரிகளை
அங்கவரையெல்லாம் அனுப்பிவிடைகொடுத்து
சேரவிடைகொடுத்து செம்பொன்முடியானும்
சிங்காதனத்தைவிட்டு திகழக்குதித்திரங்கி
அருந்ததிகாணாதே அரண்மனைபோய்புகுந்து
தாமக்கருங்குழலாள் தாதியர்கள்மூப்பியரும்

காலுக்குநீர்கொண்டு காரிழைமார்வந்தார்கள்
சிங்காதனமிட்டார் தேருர்குழலார்கள்
இட்டதொரு ஆசனத்தில் இருந்தாளேதேர்வேந்தன்
பேடைமலர்க்கண்ணுள் பெருந்திருவாளெங்கேயென்ருர்
நீலக்கருங்குழலாள் நீலமுத்துமண்டபத்தில்
கிளிமொழியாள் தங்களுடன் கேளிக்கைப்பார்க்கிருள்
மாதுயிருக்குமந்த மண்டபத்திற்போய்புகுந்து
நூலாள்கடுந்திரளார் நூற்றெருதேவியற்கு
மைத்துனனுர்வார வரவுகண்டமங்கையர்கள்

பெருந்திருவாள் துரியோதனனைக்கண்டது.

சிங்காதனத்தைவிட்டுத் திகழக்குதித்திறங்கி
மாதர்களெல்லோரும் மறைவாகப்போவார்கள்
பேடைமலர்க்கண்ணுள் பெருந்திருவாள்தான்பார்த்து
எதிரேநடந்துவந்து ஏலங்குழலாளும்
மானுகங்கொண்டீரோ மதியற்றுப்போனீரோ
தம்பிமார்தேவியென்று மணிக்கதலைவத்தான்பிடித்து
பள்ளியறையில் பைங்கிளியும்கொண்டுசென்று
பேடைமலர்க்கண்ணுள் பெருந்திருவுங்கூறுவாள்
தருமமுடியாரே தனித்துவரக்காரியமேன்
என்னகருமமது எனக்கறியச்சொல்லுமென்ருர்
அடி-கண்டாயேமாதேநீ கர்னர்செய்தகாரியத்தை
அவர்- ஆற்றிலேமிதந்து அலைந்துநழுகாமல்
தேர்ப்பாகனென்று சிலபேர்நகையாமல்
பிள்ளைக்குப்பிள்ளையாய்ப் பெரியபிள்ளையாகவென்று
மாற்றிவளர்த்தேனே மகுடமுடிதரித்து
உத்தமனென்றே யுலகமெல்லாம்பேருமிட்டு
என்றுமிவனுரைக்க ஏந்திழையுங்கூறுவாள்
பேடைமலர்க்கண்ணுள் பெருந்திருவுங்கூறுவாள்
இந்நாளுறுதியா யிருந்தரசாண்டோமே
சுந்தரப்பூமுடியார் துரோகமொன்றுஞ்செய்ததில்லை
என்னவினைசெய்தார் எனக்கரியச்சொல்லுமென்ருர்
அந்தமொழிகேட்டு அரசன்விளம்பலுற்ருன்
சுந்தரப்பூமுடியாள் சொல்லுவாள்வார்த்தையொன்று
கேளாயிளமயிலே கிரீடிபயின்றெடுத்த
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரனுர்வீரியன்

ஆனந்தவாழ்மார்பன் அவருடையதேவியரை
காரிழையாள்மாது கலந்தாரிநாயகத்தை
என்னுடையகோட்டையிலே யிளங்கொடியைவையாமல்
அவள்-ஆச்சி அரண்மனையில் ஆரணங்கைவையாமல்
தன்னுடையகோவிலிலே தையலரைவையாமல்
வேறேயொருகோட்டை வேறாகவீடுகட்டி
மாதினதுகோட்டைக்கு மறுபடியும்போனதில்லை
கற்கோட்டைமுத்திரையாங் காவலுந்தன்னுதென்று
வாசலுக்குக்காவல் வாள்வீரர்சூழ்ந்துநிற்க
இரவும்பகலுமா யிளங்கொடியாள்தன்னுடனே
மருவியுறவாடியே மைந்தன்கெற்பமாச்சுது
பிள்ளைகெற்பமானாள் பெருந்திருவாள்நாயகியும்
என்றுமிகவரசன் ஏந்திழைக்குச்சொல்லுகையில்

பெருந்திருவாள் சொல்லுகிறது.

பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவுங்கூறுவாள்
சிவசிவாவென்று திருச்செவியில்கையைவைத்தாள்
அரகராவென்று ஆரணங்குமுத்துதிர்த்தாள்
நம்முடையகர்னரை நாம்சொல்லக்காரணமேன்
இந்நாளுறுதியுடன் இருந்துவரக்கண்டோமே
சுந்தரப்பூமுடியான் துரோகமொன்றுஞ்செய்ததில்லை
அவனை-தாயார்முலைகொடுத்துத் தந்தையால்சீராட்டி
மாரணைமேலே வளர்க்கவைத்தார்தாயாரை
ஏறிட்டுப்பாராரோ என்னாளும்ராசமன்னன்
நாடகசாலைகளும் நாயகிமாரோடிவந்து
தங்கைதமக்கையென்பார் தையலர்களியாவரையும்
தன்பாதமேகண்ணாகப் பார்த்திருப்பான்புகழ்வீரன்
கர்னரைச்சொல்லுகிற காரியமோவித்தனையும்
அங்கவளநாட்டார் அவர்முன்னேசொன்னாக்கால்
ஆயுதத்தால்தன்னுயிரை அழித்துக்கொள்வாராணழகர்
மெல்லியருந்தானுமாய் விசாரித்துவருகிறோம்
என்னாணையென்று இளங்கொடியாள்மாலையிட்டாள்

கர்னர் வருகிறது.

காசிலிவர்னர் கர்னரவர்வாராமல்
ஆதித்தன்புத்திரனார் அங்கவளநாட்டழகன்
கெங்கையிலேவந்த கீர்த்திபிரதாபன்

வையைப்பெருகிவர வந்தான்காண்கர்னாவர்
வேட்டைகளாடிவாரார் வேந்தர்பெருமானும்
வெள்ளித்தடிக்காரர் வீரியமாய்ச்சூழ்ந்துவர
துள்ளும்படைவீரர் துடிப்புடனேசூழ்ந்துவர
கண்டாயோமாதேநீ கர்னர்செய்தகாரியத்தை
நாகசுரமேளம் நற்கவரிநின்றூத
கோணக்கொம்பூதுவார்கள் கொற்றவனுர்வீரியற்கு
ஊதினுர்சின்னம் உலகேழுந்தானதிர
விருதுக்குமாலை மெல்லியருங்கேட்டிருந்தாள்
வந்துகுறிகினுர் மானுகனம்பலத்தில்
ஏறிட்டுப்பார்த்தார்காண் இராசாவினம்பலத்தில்
நான்வந்துகொலுகலைப்பேன் நாடாறுமம்பலத்தில்
இன்றுகொலுகலைந்த தேதோகருமமிது
மானுகனம்பலத்தில் வந்துகுறிகினுர்
வேட்டைபரிசனமும் வேந்தனதுசேனைகளும்
சேரவந்துகூடிற்று சேனைகளத்தனையும்
அங்கவளநாடாளும் அதிகருணர்வீரியனும்
பங்கிட்டுகொண்டான் படைமன்னர்சேனையெல்லாம்
சமயமுதலிகளைச் சாமர்த்தியமந்திரியை
அங்கவரையெல்லா மனுப்பிவிடைகொடுத்து
சிங்காதனத்தைவிட்டுத திகழக்குதித்திரங்கி
ஆலாத்திகொண்டுவந்தார் ஐயாயிரந்தாதியர்கள்
முத்தாலேஆலாத்தி முன்னுலேசுத்திவிட்டார்
பவளத்தாலாலாத்தி பத்துநூறுயிரம்பேர்
புறவிவிட்டுத்தானிறங்கி பொற்கருணர்தானடந்தார்
ஒத்தைத்துறைகளுடன் உண்டானதோழருமாய்
கைகட்டித்தானடந்தார் காவலர்களெல்லோரும்
தருமமுடியான் தலைகட்டிற்போய்புகுந்தான்
தாமக்குழலார்கள் தாதிமாரெதிரில்வந்து
காலுக்குநீர்வார்த்தார் காவலனுர்வீரியற்கு
ஆசனம்போட்டார்கள் அங்கிருக்குந்தாதியர்கள்
இட்டதோராசனத்தில் ஏருமல்மன்னவனுர்
பேடைமலர்க்கண்ணுள் பெருந்திருவாளெங்கேயென்ருர்
ஏகாந்தம்பேசுகிருர் இருவரும்பள்ளியறை
நான்வாரேனென்று நாயகமேசொல்லுமென்ருர்

பெருந்திருவாளண்டையிலே பொற்கொடியுமோடிவந்து
ஆசனத்தின்கீழே அடிவணங்கிதெண்டனிட்டாள்
கருணர்வந்தாரென்று கட்டழகிசொல்லுகையில்
வரச்சொல்லுமென்றுரைத்தாள் மாதுபெருந்திருவாள்
தாதியவளோடிவந்து தையல்வரச்சொன்னாள்காண்
அவ்வசனங்கேட்டு ஆணழகர்வுள் நுழைந்தார்

கர்னர் பெருந்திருவாளைக்கண்டது.

பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்தன்னடிக்கே
ஆசனத்தின்கீழே அடிவணங்கித்தெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை வாழ்த்தினாள்மன்னவரை
வாழ்வீர்வளருவீர் மண்ணூழிகாலமட்டும்
நீரேயரசாள்வீர் நீடூழிகாலமெல்லாம்
இருவர்நடுவாக இருத்தியந்தராசாவை
வாடியிருப்பானேன் மன்னருடதிருமுகங்கள்
கட்டித்தயிருகளும் காவடியிலன்னமும்
பாணக்கம்நீர்மோரும் வரவிட்டேன்பார்வேந்தா
விடாய்த்துநீமண்டபத்தில் வேந்தனேவரவில்லையோ
எந்தவழிவந்தீர் என்றாள்பெருந்திருவாள்
ஆச்சிநானந்த அவ்வழியில்வந்ததில்லை
மற்றுமொருவழியை வந்தேனாச்சியரே
மாலைமுடியானே நீ வருவதற்குமுன்பாக
ஆரப்பசிக்குதென்று அரவக்கொடியாரும்
ஆனந்தவாழ்மார்பர் அடிசலுக்குத்தான்வந்தார்
மாலைமுடியாரே நீர்வந்தசெய்திகண்டு
தாமிஷமாய்நின்றார்கள் தனஞ்செயர்களிருவருமாய்
மஞ்சள்நீராடியே மன்னனாரிருவருமாய்
ஆனந்தமாய்நீங்கள் அடிசலுக்குவாருமென்றாள்
சுந்தரப்பூமுடியான் தோழரையுங்கோர்த்து
மஞ்சள்நீர்ச்சாலையிலே மன்னவரும்போய்புகுந்தார்

துரியோதனனுங் கர்னருங்கூடியது.

ஆனபணிகழட்டி ஆனந்தவாழ்மார்பன்
நனையாப்பணிதிகளை நாயகிமார்தான்கழட்டி
மாலைமுடியாரும் மஞ்சள்நீர்தானாடி
ஈரத்துயில்களைந்து இழைசேர்ந்தடட்டுடுத்தி
ஆனபணிபூட்டி ஆனந்தசுந்தரர்கள்

தேனல்லோதாரார் திருநீற்றுக்காப்பணிந்து
பூசைபண்ணுமண்டபத்திற் போனாரிருவருமாய்
நித்தியபடிதானங்கள் நிறையவேதான்கொடுத்து
செம்பொன்முடியாருஞ் செபதபந்தான்முடித்து
சுந்தரப்பூமுடியான் தோழனையுங்கைகோர்த்து
அமுதுண்ணுமண்டபத்தை அலங்கிட்டுநீர்தெளித்து
எங்குமலங்கரித்து எத்திசையும்நீர்தெளித்து
பொற்றடுக்குமேலே புகழ்வீரர்வீற்றிருந்தார்
சிங்கமுக்காலிவைத்து செம்பொன்றளிகைவைத்தாள்
பொரித்தபொரிக்கரியும் பொன்போல்சிறுபருப்பும்
கூட்டிப்படைத்தாள் கொம்பேரிடையாளும்
அந்த அடிசில் அமுதுண்டபிற்பாடு
அத்தளிகையுண்டபின்பு மறுதளிகையுண்டார்கள்
கையலம்பிக்கொண்டு கனகமணிமண்டபத்தில்
தாமக்கருங்குழலார் தாதியருமூப்பியரும்
வாய்த்தயிலைச்சுருளும் வாரித்துவர்பாக்கும்
வாங்கியமுதுசெய்து மன்னரிருவருமாய்
அந்திக்கொலுச்சாமம் ஆச்சுதுகாணநேரம்
ஆபரணந்தான்பூண்டு அழகியபட்டுடுத்தி
சுந்தரப்பூமுடியார் தோழனையுங்கைகோர்த்து
ஆனந்தவாழ்மார்பர் அம்பலத்தில்தான்போனார்
வரவெதிரேகண்டார் மாலைமுடியாரை
காசிலிவர்னர் கர்னர்பெருமானும்
இருமிருமென்று இணைக்கடகக்கையமர்த்தி
சிங்காதனத்திலே சேரவிருந்தார்கள்

துரியோதிரன் கர்னரைக்கேட்கிறது.

தேசத்தழகுமன்னன் திரியோதிரப்பெருமான்
கர்னரைத்தான்பார்த்து கபடனெடுத்துரைப்பான்
நீ-பெருகிய ஆற்றிலே பேரற்றுப்போகாமல்
சேற்றிலமுந்தாதே சிறுமணல்பாயாதே
தேர்ப்பாகனென்று தெரிந்துமிகச்சொல்லாதே
பிள்ளைக்குப்பிள்ளையாய் பெரியபிள்ளையாகவுன்னை
மாற்றிவளர்த்தேனே மகுடமுடிசூட்டியுன்னை
மன்னனென்றுபேருமிட்டு மண்ணாளவைத்தேனே
உபகாரமெத்தசெய்தாய் உற்றதொருதேர்ப்பாகன்

என்றுமிவருரைக்க எடுத்துமிகவுரைத்தார்
காசிலிவர்னர் கர்னரவரே துசோல்வார்
என்னைப்-பேழையில்வைத்ததும் பேருற்றில்விட்டதும்
தேர்ப்பாகன்றன்கையிலே சிக்கிவகைபட்டதுவும்
என்னை-மாற்றிவளர்த்து மண்ணுளவைத்ததுவும்
அறியாதோவிந்நாடு அம்பலத்துசேனையெல்லாம்
இந்தப்பேச்சைசொல்லவோ இந்தச்சபைநடுவே
சொல்லவேவேணுமோ சுந்தரப்பூமுடியார்
இந்நாளுறுதியா யிருந்தோமரசாண்டோம்
சுந்தரப்பூமுடியார் துரோகமொன்றும்செய்ததில்லை
இந்நாளுமில்லாதிப்போ தென்னவினைசெய்தேன்
சுந்தரரேசொல்லாமல் சொன்னால்தெரிவதுண்டோ
தீயினாற்சுட்டபுண்ணு சீக்கிரத்திலாறிவிடும்
நாவினாற்சுட்டபுண்ணு நாயகனேயாருது
இப்போ-என்னவினைசெய்தேன் எனக்கறியச்சொல்லும்
தேசத்தழகுமன்னன் திரியோதனன்கேட்டு
அரசாளும்நாயகியாள் அல்லித்திருமகனார்
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரன்தேவியரை
காரிழையாள்மாது கலந்தாரிநாயகத்தை
அவள்-ஆச்சியரண்மனையில் ஆரணங்கைவையாமல்
என்னுடையகோட்டையிலே இளங்கொடியைவையாமல்
வேறேயொருகோட்டைகட்டி வீணானவீடுகட்டி
மன்னரதுகோட்டைக்கு மறுபடியும்போனதில்லை
நூலால்கடுந்திரளார் நூற்றுவரும்போனதில்லை
வாசலுக்குகாவலாயுன் மைந்தனைக்காவல்வைத்து
இரவும்பகலுமா யிளங்கொடியாள்தன்னுடனே
மருவியுறவாடி மைந்தனுண்டாக்கிவிட்டார்
என்றுமன்னன்தானுரைக்க இதைக்கேட்டுகர்னரவர்
அரகராவென்றுசொல்லி அரசனுங்கண்சிவந்து
சிவசிவாவென்றுசொல்லி திருச்செவியிற்கையைவைத்து
காசிலிவர்னர் கர்னருங்கண்சிவந்து
உருக்கியசெம்பொனது வுதிரம்போற்கண்சிவந்து
உன்சோற்றையுண்டதுவும் புன்னரசையாண்டதுவும்
பிஞ்சுமணிமுடியாற் புனலடையவேண்டுமென்று
வேண்டேனினிசென்மம் வேறுநினைப்பதில்லை

மாண்டுமடிந்திடுவேன் வைகுந்தஞ்சேர்ந்திடுவேன்
செத்துமடிந்திடுவேன் சிவன்பாதஞ்சேர்ந்திடுவேன்
மாளுகிறேனென்றுசொல்லி வாளுருவிகைபிடித்தான்
கொற்றவர்களேகோமான் சூலையிலேவாளைவைக்க
அம்பலத்துசேனை அலையக்கொலுகடந்து
சேனைகளத்தனையும் சேரவந்துபணிந்தார்கள்
ஆனந்தமார்பன் அறியும்வாளால்வீசினர்

துரியோதனன் கர்னருக்குச் சமாதானஞ்சொல்வது.

தேசத்தழகன் திரியோதனன்பார்த்து
கண்டோமேயென்று கர்னருடகோபத்தை
இந்நாளுங்கண்டதில்லை இவருடையகோபத்தை
ஆருக்குண்ணடவொட்டான் அங்கவளநாட்டான்
என்று-சிங்காதனத்தைவிட்டு திகழக்குதித்திறங்கி
பின்னுகவந்து பெருமாளைச்சேர்த்தணைத்தான்
இணையீர்இணைதோழா என்னுயிர்காவலனே
காலங்களீரேழும் கண்டுணரவைத்தவனே
என்தளிகைபுழுநீக்கும் தர்மப்பெருமானே
என்னைக்-கண்டுண்ணவைத்த கர்னர்பெருமானே
தனித்தாய்தனியே தார்வேந்தாவுன்கோபம்
கைபதைக்கவாய்துடிக்க கண்ணைதுடைத்துக்கொண்டார்
கண்டார்கணையாழி கட்டழகன்கைதனில்தான்

கர்னர் புலந்திரன் கணையாழி காட்டினது.

இந்நாட்டுவேலையல்ல இந்தக்கணையாழி
மதுரையிலேவேலைகண்டீர் மன்னரசுகோமானே
ஆருடையஆழியிது அடையாளஞ்சொல்லுமென்றார்
ஆழியெடுத்து அலைதாரன்வாசித்தான்
அரசாளும்நாயகியாள் அல்லித்திருமகனர்
உன்-மைந்தன்புலந்திரனர் வந்ததுநானறியேன்
அறியாமல்சொன்னேன் அரசேபொருத்தருள்வீர்
என்று-வாய்த்தயிலைச்சுருளும் வர்னப்பழக்காயும்
காவலர்வீரியற்குங் கைநிறையஅள்ளியிட்டார்
என்னுணைநீரும் இலையமிர்தந்தின்னுமென்றான்
மன்னுடிவாசங்கள் மன்னர்கையில்தான்கொடுத்தான்
வாசங்கள்சாப்பிட்டு மன்னன்தனித்திருந்தான்
தேசத்தழகுமன்னன் திரியோதனன்கூறுவான்

பருவமதயானை பஞ்சவர்களைவரையும்
நாடுநகரமும் நல்லதொருராச்சியமும்
அடங்கலுந்தோற்று அனைவரும்போனாரே
முத்திரிகையிடப்போனீர் முடிமன்னர்கோவிலெல்லாம்
அன்றயெடுத்துவந்த ஆழியிதுகாணும்
அடையாளமல்லவென்று அலைதாரன்கூறினான்
எங்கேயடையாளம் எடுத்துவந்துகாட்டுமென்றான்
உத்தமனார்கர்னர் ஊழியைத்தான்பார்த்து
துன்னுங்கருங்குழலாள் தூற்சடையாளரண்மனையில்
மதுரையடையாளம் மாணிக்கப்பேழையிலே
இருக்கிறதென்றுசொல்லி எடுத்தோடிவாருமென்றான்
உத்தமர்கள்வீரியரும் ஊழியப்பேர்தான்கேட்டு
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாள்தானிருக்கும்
மாதிருக்குமண்டபத்தை வந்துமிகதெண்டனிட்டார்
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாள்தான்பார்த்து
நீர்-யாரீபணிமன்னா அரியவுரையுமென்றான்
ஆர்பணியுமல்ல அடியேன்திருப்பணிதான்
காசிலிவர்னர் கர்னர்பணிதானுமென்றான்
ஆரணங்கேயும்முடைய வண்ணார்பணிதானுமென்றான்
மதுரைப்புலந்திரரும் வந்ததுமில்லையென்று
மாதுமணவாளர் வைத்தபடியில்லையென்று
காசிலிவர்னர் கர்னர்மேல்சந்தேகமாய்
கூறினார்கண்டீரோ கொடிநாகங்கொண்டவரும்
மதுரையடையாளம் மாணிக்கப்பேழையிலே
இருக்குதென்றுசொல்லி எடுத்துவரச்சொன்னார்கள்
எங்கேயடையாளம் எடுத்துவந்துதாருமென்றார்
துன்னுங்கருங்குழலாள் துற்சடையுந்தான்கேட்டு
அவர்- ஆர்சொல்லுங்கேளார் அரவக்கொடிவேந்தன்
இழந்தோமேநாமும் இளங்கொடியையின்றேடே
ஆரமுலையாளும் அழகியகண்முத்துதிர்த்தாள்
மாணிக்கப்பேழையிலே மாதருங்கைகொடுத்தாள்
வாங்கிதன்கைப்பத்தி மாலைமுடியானும்
காசிலிவர்னர் கர்னர்திருவடிக்கு
கொண்டுவந்துவைத்து கொற்றவனுந்தெண்டனிட்டு
மாணிக்கப்பேழையை மன்னவனுந்தான்திறந்து

ஆணிப்பொன்னாலே அழுத்தியகுப்பியிட்டு
ஆயிரம்பொன்பெற்ற அபரஞ்சிவர்னசரம்
மன்னவனுங்கைகொடுத்தான் மாணிக்கமோதிரத்தை
பார்வேந்தன்கைகொடுக்க பதினாகங்கோண்டோனும்
ஐவரிடதேவியவள் அரிவைவனம்போனாளே
மூத்திரிகைபோடப்போநீர் முடிமன்னர்வீட்டனைத்தும்
அன்றாஎடுத்துவந்த அடையாளப்பேழையிது
அடையாளமல்லவென்று அரசனுமேதுசொல்வான்
அந்தப்படிசொன்னாலும் அரிவையரைவைப்பதில்லை
தேனார்குழலியரை தீவளர்த்திதள்ளிவிடும்
அங்குதேசாதிபதி அதிகருணர்கூறுகிறார்
ஆரமுலையாளும் ஆளனுப்பிபோகவிட்டு
வண்டார்குழலாளை மருவோலைவந்தபின்பு
தேனார்குழலாளை தீவளர்த்திதள்ளிடுவோம்
தேசத்தழகுமன்னன் திரியோதனன்கேட்டு
எப்படிசொன்னாலும் இளங்கொடியைவைப்பதில்லை

துரியன் கோபித்து அக்கினியை
வளர்த்தச்சொன்னது.

செம்பொன்மணியோரைத் தீக்குழிவெட்டுமென்றார்
அக்கினியில்தள்ளிவிட்டு அரிவையிளமாதரசை
அத்திநகர்பட்டணத்தை ஆளாமல்விடுவதில்லை
வீண்வார்த்தைபேசாதே வேணமட்டுஞ்சொன்னாலும்
இளங்கொடியைவைப்பதில்லை என்னதான்சொன்னாலும்
தேனார்குழலாளைத் தீவளர்த்திதள்ளிடுவேன்
உத்தமர்கள்வீரியனும் ஊழியரைத்தானழைத்து
நித்திலங்குபூமுடியாள் நியமித்தபேரெல்லாம்
அத்தண்டபேரையும் அழைத்தோடிவாருமென்றான்
அத்தனைபேர்களும் அம்பலத்தில்வந்துநின்று
எங்களையழைத்தது யேதுவகைசொல்லுமென்றார்
உங்களையழைத்தவகை ஒன்றாற்குறைவுமில்லை
அல்லிமருமகளை அக்கினியிற்றள்ளுதற்கு
அதனாலழைத்தேனென்று அரசனுக்குதெண்டனிட
அத்தனைபேருமாய் அம்பலத்தில்வந்துநின்று
எங்கேஐயாதீக்குழிகள் எவ்விடத்தில்வெட்டுவது
அல்லிமருமகளை அக்கினியில்தானேற்ற

தேனூர்குழலாளைத் தீயெரிக்கநான்பார்க்க
என்-ஆசாரவாசல்முன்னே அடரவேவெட்டுமென்றான்
வெட்டிக்குழிபரித்தார் வேந்தரந்தநாழிகையில்
தீக்குழிகளாச்சுதென்று தெண்டனிட்டாரூழியர்கள்
தீயைவளர்த்துமென்றார் துரியோதிரப்பெருமான்
நித்திலங்குபூமுடியார் நிமித்தங்கர்னர்தான்கேட்டு
காவலாம்வீரியர்கள் காட்டகத்தில்வந்துநின்று
பட்டமரம்பார்த்துப் பரிவுடனேயெல்லோரும்
ஆச்சாவுந்தேக்கும் அழகாய்பிளந்தடுக்கி
சந்தனத்தேக்குஞ் சதுராய்ப்பிளந்தடுக்கி
மூட்டினார்தீயை மூடிமன்னர்சொற்படிக்கு
வானமட்டுந்தீயும் வளர்ந்துதேயன்னேரம்
ஆகாயமட்டும் அக்கினிகள்தான்வளர்த்தி
தீக்குழிவளர்ந்ததென்று செண்டனிட்டார்சேவகரும்
தேசத்தழகுமன்னன் திரியோதிரன்கேட்டு
அல்லிமருமகளை அக்கினியிற்றள்ளுதற்கு
அந்திப்பொழுதிலே அக்கினியிற்றள்ளுதற்கு
ஆரமுலையாளை அழைத்தோடிவாருமென்றான்

அக்கினியில் கர்னர் விழப்போனது.

காசிலிவர்னர் கர்னரதுகேட்டு
என்மேல்சந்தேகம் எழில்வீராகண்டாயோ
அக்கினியில்நானுமிப்போ ஐயாவேகுதிக்கிறேன்
என்று-வரிந்துகட்டிபச்சைவடம் மன்னரதிகர்னர்
தீக்குழியைச்சுற்றிவந்தான் தென்னன்பெருமானும்
அம்பலத்துசேனையெல்லாம் அடரக்கொலுகலைந்து
கட்டிப்பிடித்தார்கள் கர்னர்பெருமாளை
கொற்றவனும்வீரியனும் கோபந்தணிந்தபின்பு
தேசத்தழகுமன்னன் துரியோதனன்பார்த்து
காசிலிவர்னர் கர்னர்திருமகனார்
சிந்துநாடாளுகின்ற செல்வப்பெருமானை
அல்லிமருமகளை அக்கினியிற்றள்ளுதற்கு
அந்திப்பொழுதிலே அக்கினியிற்றள்ளுதற்கு
ஆரணங்கையிப்போ அழைத்துவரச்சொல்லுமென்றார்

தூதர்கள் கர்னர் புத்திரனுக்குச் சொல்வது.

உத்தமர்கள்வீரியனும் ஊழியப்பேர்தான்கேட்டு

சிந்துநாடாளுகின்ற செல்வப்பெருமானே
அவர்-ஆசனத்தின்கீழே அடிவணங்கிதெண்டனிட்டார்
நீர்-யார்பணிதூதர் அறியவுரைவுமென்றார்
தேசத்தழகனவன் துரியோதனன்பணிதான்
வேறென்றுமில்லையையா வேந்தர்பெருமானே
உங்கள்-ஐவர்மேல்சந்தேகமாய் அரவக்கொடிவேந்தன்
கூறினார்கண்டீரோ கொற்றம்பூமன்னவனே
அல்லிமருமகளை அக்கினியிற்றள்ளுதற்கு
வானந்தளாவுந்தீயும் வளர்ந்ததுமன்னவனே
காரிழையாள்மாது கலந்தாரிநாயகத்தை
அக்கினியிற்றள்ள அழைத்துவரச்சொன்னார்காண்

கர்னர் புத்திரன் சொல்வது.

ஊழியப்பேர்தானுரைக்க வுத்தமனுந்தான்கேட்டு
அல்லிமருமகளை அக்கினியிற்றள்ளிவிட்டு
ஆள்வானோபின்னிருந்து அத்திநகர்பட்டணத்தை
அறியாரோதானும் அல்லியுடசேவகத்தை
மதுரைதுரைச்சியரை மணமாலைசூட்டவென்று
காசொன்றுநேராதே காளையந்தஅருச்சுனனார்
முந்தியேவந்து முடிமன்னர்மாலையிட்டார்
மதுராபுரியாளை மணமாலைதான்சூட்டி
தேவேந்திரலோகம் சென்றாரேயருச்சுனனார்
அப்படியல்லவே ஐவருடசேவகங்கள்
ஏழாம்வயதினிலே எதிர்த்துவந்தநீன்முகனை
எட்டிமயிர்பிடித்து எடுத்துவுடல்பிளந்து
கோமானுதிரங் குடித்துக்கரையோடி
மன்னன்குடல்பிடுங்கி மணமாலைபூண்டுகொண்டார்
இவன்-அக்கினியில்தள்ளி அரசாளப்போறானோ
அன்று-பத்தினியைகொண்டுவந்து பாரசபைநடுவே
மாதினதுதுகிலாடை மானுகன்தானுரிந்தான்
தக்கப்புகழுடைய தருமர்பொறுத்திருந்தார்
அன்றுபொறுத்ததுபோல் ஐவரின்றுபொறுப்பாரோ
ஐவர்பொறுப்பதில்லை ஆனந்தவாழ்மார்பா
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்சேனையெல்லாம்
சேரக்கருவறுப்பார் சேனைகளத்தனையும்
அத்திபுரம்பட்டணத்தை அடங்கலையுந்தானிடித்து

பருத்தியும் ஆமணக்கும் பஞ்சவர்களிரைத்திடுவார்
பொரும்பொருமென்று பொற்கருணர்புத்திரரும்

கர்னர் புத்திரன் கலந்தாரியைக் கண்டது.

ஆரணங்குசேதி அறிந்துநான்வருவேனென்று
உத்தமவீரியனும் உட்கட்டிற்போய்புகுந்தான்
தாமக்கருங்குழலாள் தாதியெதிர்கண்டு
ஆதீனம்போட்டார்கள் அங்கிருக்குந்தாதியர்கள்
வந்துயிளைப்பாறி மன்னன்திருமுகத்தை
தாதியரைப்பார்த்து தார்வேந்தனேதுசொல்வான்
வாலைக்குழல்மாரே எங்கள்மதனியரை நீயழையும்
ஆரணங்குமப்போது அழைத்தோடிவாருமென்றார்
தன்கைகவுரி தானொருத்திகைகொடுத்து
மங்கையரும்பள்ளிகொண்ட மண்டபம்போய்புகுந்து
காரிழையாள்மாது கலந்தாரிநாயகமே
அத்திபுரம்நகருக் காதீனத்துக்குடையவனே
தான்பிறந்தநாட்டுக்கு தானேயதிபதியாய்
முத்துஞ்சூடுநாடு முழுதமுடையவனே
மங்கையரேயும்முடைய மைத்துனனார்வந்ததுகாண்
காசிலிவர்னர் கர்னர்திருமகனார்
மாலைமுடியழகர் மண்டபத்தில்வந்திரங்கி
அழைத்துவரச்சொன்னா ரன்பானமைத்துனனார்
சொல்லுதற்குமுன்னமே தோகையெழுந்திருந்து
பூவணையைவிட்டு பூங்கிளியுந்தானிரங்கி
தாரார்குழலுடைய தாதிகள்தோளூன்றி
காரிழைமார்தாதியர்கள் கைலாகுதான்கொடுக்க
மெத்தெனவேதானடநது வேல்புருவங்கண்ணாளும்
மைத்துனனார்வந்திருக்கும் மண்டபம்போய்புகுந்தாள்
மாலைமுடியானும் மதனிவரவுகண்டு
சிங்காதனத்தைவிட்டு திகழக்குதித்திறங்கி
மதனியார்பாத மலர்தூவிதெண்டனிட்டான்
வந்துபணிந்தவரை வாழ்த்தியந்தமங்கையரும்
கன்னியர்கள்மாலை கடுகிமணம்பெறுவீர்
வாழ்ந்திடுவீரென்று மனங்குளிரவாழ்த்தினாள்
இட்டதோராசனத்தில் ஏராமல்தானிருந்தான்

கலந்தாரி சொல்வது.

அப்போது-காரிழையாள்மாது கலந்தாரிஏதுரைப்பாள்
மைத்துனருநீருமிங்கே வந்தகருமமென்ன
மாலைக்குழலியரே மதனியரேநீர்கேளீர்
மதுரைப்பெருமானும் வந்ததுமில்லையென்று
தீயைவளர்த்தினர் தேசத்தழகுமன்னன்
வானமட்டும்தீய்கள் வளர்ந்ததுகாணந்நேரம்
ஆனைக்குழியகலம் அக்கினியும்வளருகுது
அக்கினியில்தள்ளவும் அழைத்துவரச்சொன்னாரே
ஆதலாலிங்குவந்தேன் அன்னக்கிளிமதனியென்ருன்
அவ்வசனங்கேட்டு அல்லிமருமகளும்
கட்டார்கருங்குழலாள் கலந்தாரியேதுசொல்வாள்
சீரியெரிபறந்து செங்கயற்கண்முத்தரும்பி
அல்லிமருமகளை அக்கினியில்தள்ளிவிட்டு
ஆள்வானேபின்னிருந்து அத்திநகர்பட்டணத்தை
அறியானேதானும் ஐவரதுசேவகத்தை
ஆணுளழகுமன்ன னருச்சுனராசதுரை
மதுரைதுரைச்சியரை மணமாலைசூட்டவென்று
பூமியைவலமாக வருகின்றவேளையிலே
காசொன்றும்நேராதே காளையந்தவருச்சுனனர்
தாலியும்நேராதே தார்வேந்தரந்நேரம்
மாதுகருங்குழலை மன்னவர்மாலையிட்டு
தேவேந்திரப்பட்டணம் தேர்விஜயராண்டாரே
அப்படியல்லவோ ஐவரதுசேவகங்கள்
காலங்கள்பின்பலவோ கபடர்கள்நூற்றுவர்க்கும்
ஏதுக்குதள்ளுகிருன் என்னைப்பெருந்தீயில்
என்னையிவன்தள்ள யிவனருநானரு
யார்காணுமென்னை அக்கினியில்தள்ளுறவன்
காவலர்பாண்டவர்கள் காடுறைந்துபோனவர்கள்
என்-மாமிதுகில்விரித்து வனவாசம்போனாளே
என்-ஏற்றகுறைச்சல் இளப்பமாய்தானடந்தால்
அவர்-தள்ளவறியாரோ ஐவர்சிகாமணிகள்
எனக்கு-நித்தமொருபட்டுடுத்தி நேரமொருபூச்சாத்தி
மாரணையின்மேலே வளர்த்தாரேமன்னவனர்

நான்-ஏற்றக்குறைச்சல் இருந்தேனேயாமானால்
அவர்களறியாரோ அணிகர்னர்வீரியனே
அது இல்லாதிருந்ததினால் ஆனந்தவாழ்மார்பா
வாசலுக்குகாவலாய் மைத்துனரே நீரிருந்தீர்
என்னையிவன்தள்ள இவனாலேதானாமோ
தக்கப்புகழுடைய தருமாதுதம்பியர்கள்
பதினெட்டுநாள்பாரதம் படையெடுத்துவந்தாக்கால்
நூலால்கடுந்திரளார் நூற்றறுவர்பூமுடியும்
வீமர்கைதெண்டாலும் விஜயர்கையம்பாலும்
நாமக்குலவிளக்கு நகுலர்கைபாங்கினாலும்
சகாதேவர்கையிலிருக்கும் சக்கரத்துவாளினாலும்
துண்ட துண்டமாகவே துடிக்கின்றபோதையிலே
பிணத்தின்மேல்தானடந்து பெண்கள்மாரெல்லோரும்
நாளை-தலைமேலேகையைவைத்து தானழுகுமாதர்களை
தம்பிமார்பெண்டுகளை தள்ளவேசொல்லுமென்றாள்
அவ்வார்த்தைகேட்டு அங்கராயன்புத்திரனும்
நாளை-துண்டுதுண்டாக துணிக்கிறபேரானாலும்
அரவக்கொடிவேந்தன் யஞ்சானொருநாளும்
மாலைக்குழலியரே மதனியரே நீர்கேளீர்
எங்களையுமல்லாமல் யெழில்நாகங்கொண்டோனும்
எம்மை-தள்ளுகைக்குவந்தாலே தருமமுடியோனும்
என்னசொல்வீர்மதனி என்றாரேமன்னவனும்
நான்-சொல்லவரியேனோ சுந்தரப்பூமுடியே
எதிரேயுத்தாரஞ்சொல்லி எடுத்துரைக்கமாட்டேனோ
ஆர்காணுமென்னை அக்கினியிற்றள்ளுதற்கு
தம்பிமார்பெண்டுகளை தள்ளுமென்றுசொல்லுதற்கு
அதற்குநானஞ்சுவேனோ ஆணழகர்வீரியனே
அவ்வார்த்தைக்கேட்டு அங்குராயர்புத்திரனும்
மாலைக்குழலேயுன் மனத்தைநான்சோதித்தேன்
எதுக்குமஞ்சாதே இறுமென்றுதானுரைத்தார்
அஞ்சிகையேன்காணும் ஆனந்தவாழ்மார்பா
ஒன்றுரெண்டல்லவே உத்தமர்கள்வீரியமே
ஐந்து அடையாளம் ஆணழகர்தான்கொடுத்து
வாசலுக்குகாவலாய் மைத்துனரே நீரிருக்க
அஞ்சேனொருநாளும் ஆரணங்குயென்றுரைத்தார்

கர்னர்புத்திரன் தூதனுக்குசொல்வது.

ஏலங்குழலியரே இருமென்றுதானுரைத்து
அப்போது தூதுவனும் அவ்விடத்தில் நின்றிருந்தான்
வந்ததொரு தூதுவனை மன்னவனுந்தானழைத்து
அவளஞ்சவில்லைகாணும் அதிசயம்பேசுகிறாள்
அவ்வார்த்தைசொல்லி அறிக்கையிடவந்தேனென்றாள்
அவ்வார்த்தைசொல்லவென்று அனுப்பிவிட்டுதூதுவனை
கானலிலேதானிருந்தான் கட்டழகனப்போது
அப்போது தூதுவனும் அட்சணமேவந்துவிட்டான்

திரியோதிரன் வேதியரை யழையென்பது.

தேசத்தழகுமன்னன் துரியோதிரன்கேட்டு
கண்கள்சிவந்து கடுங்கோபந்தானுகி
காசிலிவர்னர் கர்னரைத்தானழைத்து
சாஸ்திரவாதிகளைச் சகலரையுமழையுமென்றார்
வேந்தன்தெரிந்தவரை வேதியரையழையுமென்றான்
அவ்வசனங்கேட்டு அதிகர்னர்தானெழுந்து
அரசன்சொல்கடவாமல் அந்தணரைத்தேடுகிறார்

பெருமாள் வருகிறது.

அந்தவொருவேளையிலே ஆயரவறிந்தார்
அண்டமளந்ததொரு ஆதிநாராயணரும்
இதுதான்சமயமென் றெம்பெருமாளேதுசொல்வார்
நல்லசகுனமென்று நாராயணரெழுந்து
சாஸ்திரந்தானறிய சதுர்மறையோர்போலாக
அறுபத்துநான்குகலை யாவும்வுணர்ந்ததுபோல்
மெத்தபெரியவராய் மேல்நாட்டுவேதியராய்
விருத்தக்கிழவராய் வெகுநாளாவாழ்பவராய்
தீரப்படித்தவராய் தெளிவறிந்தவேதியர்போல்
முற்றுமேகற்றவருய் முழுதுமறிந்தவருய்
தெண்டுபவுத்திரமும் திருமார்பில்பூநூலும்
தள்ளாதவேதியர்போல் தடியூன்றிவாராரும்
வாரதொருவேதியரை மன்னவனுந்தான்பார்த்து
எதிர்கொண்டுதெண்டனிட்டார் யியலானஅதிகருணர்
தெண்டனிட்டகர்னரை சீர்பெரவேதான்வாழ்த்தி
அஞ்சாதேகர்னரே நான் ஆதிமூலமாயவனுர்
இவ்வேஷங்கொண்டு இவ்வனத்தில்வந்தேயான்

கலக்கமனமுடைய கபடன் துரியனுக்கு
ஆரூடஞ்சொல்லவந்தேன் அறிவழிந்தமன்னனுக்கு
ஆனதினால்நீர் அஞ்சவேண்டாம்ராசமன்னா
மதுரை துரைச்சியவள் வளநாடிபுத்திரனும்
தன்தேவியண்டைவந்து தாமருவியவன்போனான்
அடையாளமுந்தந்து ஆணழகன்தான்போனான்
உன்மீதுசிந்தனைகள் உம்மைகொல்லுமன்னனுக்கு
சிந்தைகலங்கவே தெரிவித்தேன்கபடனுக்கு
அஞ்சாதேவாருமென்று அந்தணர்சொல்லுகையில்
கர்னரதுகேட்டு கண்கள்களிகூர்ந்து
ஆனந்தங்கொண்டு அடிவணங்கிதெண்டனிட்டு
கைலாகுதான்கொடுத்துக் கர்னரவர்கூட்டிவந்து

துரியோதிரன் வேதியரைக்கண்டு
மரியாதைசெய்தது.

மானகங்கொண்ட மன்னன்கொலுமுகத்தில்
அந்தணர்வருகையிலே அரவக்கொடிவேந்தன்
தெண்டனிட்டவேதியற்குச் சிங்காதனங்கொடுத்தான்
குந்தினார்வேதியருங் கொலுமகாமண்டபத்தில்
மற்றதொருமன்னவர்கள் மகுடமுடிராசாக்கள்
ஏகமாய்நிறைந்தார்கள் எங்குமிடமில்லாமல்
அப்போதுவேதியரும் அரசன்முகம்பார்த்து
எம்மையழைத்தது ஏதுவகைசொல்லுமென்றார்
உம்மையழைத்தவகை ஒன்றுற்குறைவுமில்லை
அல்லிமருமகளை அக்கினியிற்றள்ளுதற்கு
நாளுமதுநல்லதாய் நாயகரேசொல்லுமென்றான்

வேதியர் ஆரூடஞ்சொல்வது.

கண்டாரேவேதியரும் கபடனதுதன்னினைவை
கூறுவார்வேதியருங் கொடிநாகமன்னனுக்கு
அஸ்தநட்சத்திரம் ஆகாதநாளாச்சே
இன்றெட்டாநாளையிலே ஏந்திழையைத்தள்ளிடலாம்
ஊருக்குமொன்றுமில்லை வுமக்குங்குறைவுமில்லை
அக்கினியிற்றள்ளவென்றால் அதுக்குஇடமுமல்ல
ஆற்றங்கரையோரம் அக்கினியைத்தான்வளர்த்தி
எட்டுநாளொருவாரம் எரிநெருப்புஆறாமல்
ஆகாசமட்டும் அடர்ந்துஎரியவிட்டு

பசுவினது நெய்யாலே படரவெரியவிட்டு
தணியாமலக்கினியைத் தார்வேந்தர்காத்திருந்து
அன்றுடம்பிராமணர்க்கு அளவிறந்ததனங்கொடுத்து
கோதானம்பூதானம் கொடுத்துவரவேதியற்கு
ஆனைகுதிரைபசு அபாரியாய்த்தான்கொடுத்து
எட்டுநாள்சென்றபின்பு ஏந்திழையைத்தள்ளிவிடும்
அதனுடனேதோஷம் அபகரித்துபோய்விடும்
எட்டாநாளிந்நேரம் இவ்விடத்தில்நான்வருவேன்
கூடிருந்துதள்ளிடுவோம் கொற்றவனேயென்றுராம்
அவ்வார்த்தைதான்கேட்டு அரவக்கொடிவேந்தன்
பூரித்திருதோளும் பொன்னங்கித்தான்சுழல
சந்தோஷங்கொண்டு சரீரங்கள்பூரித்து
இன்றெட்டாநாளையிலே இங்குவாரும்வேதியரே
என்றுமிவனுரைக்க ஏதுசொல்வார்மாயவனுர்
அப்படியேயாகுதென்று ஆயரவர்தானடந்தார்

பெருமாள் அல்லியிடம் வருவது.

காடிசெடிதாண்டி கரியமலைதான்கடந்து
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
சந்திரசூரியர்கள் காணுவனங்கடந்து
மாணுமதுரையது வடமதுரைதாண்டிவந்தார்
தேனுமதுரையது தென்மதுரைதாண்டிவந்தார்
அல்லியரசானியது அரண்மனையில்வந்துவிட்டார்
கண்டாளேவேதியரைக் கன்னியிளமயிலும்
வேதியரைக்கண்டவுடன் மெல்லியருந்தெண்டனிட
தெண்டனிட்டுஅல்லி செப்புவாளொருவார்த்தை
ஐயாபெரியவரே அறிவுள்ளவேதியரே
திரப்படித்தவரே தெளிவறிந்தவேதியரே
எந்தவூரெந்ததேசம் எங்கிருந்திங்குவந்தீர்
சொல்லுமையாவேதியரே என்றாளேதோகையரும்
தூரம்வடக்கேயம்மா துவாரகாபுரிதேசம்
அத்திபுரத்திற்கு ஆரணங்குயான்போக
வழிகள்தெரியவில்லை மாதாவேயெந்தனுக்கு
தேசத்தழகுமன்னன் திரியோதிரப்பெருமான்
வீஷ்மர்துரோணர் விதுரனஸ்வத்தாமன்

கர்னருங்காங்கையரும் கனத்ததொருசல்லியனும்
சிந்துபதிராசாவாம் துற்சாதனன்மன்னன்
தம்பிமார்தொண்ணூற்று ஒன்பதுபேர்ராசாவாம்
அவர்கள்-ஏகாந்தமாய்க்கூடி இராசமன்னரெல்லவரும்
ஆரோவோர்கன்னிகையாம் அவர்பேர்கலந்தாரி
தேன்மொழியாள்வயிற்றில் திருட்டுபிள்ளையுண்டாச்சு
ஆகையால்கன்னியரை அக்கினியில்தள்ளுதற்கு
கோதானம்பூதானம் கொடுக்கிறார்வேதியற்கு
வழிகள்தெரியவில்லை மாதாவேநான்போக
உந்தனைக்கேட்டுப்போக வந்தேன்காணுத்தமியே
என்றுமிவருரைக்க ஏந்திழையுங்கண்சிவந்து
சீறியெறிபறந்து செங்கையற்கண்மூத்தரும்பி
ஆரடாகாவலரே அறையிலடையுமென்றாள்
கேட்டார்பெருமாளும் கிளிமொழிவார்த்தைதன்னை
அகங்காரநீலியென்று ஆயர்மனமகிழ்ந்து
எடுத்தார்சுயரூபம் எம்பெருமாளாண்டவரும்
கண்டவர்கள்தானடுங்க கரியமால்ரூபமானார்
பார்த்தாளேயல்லியம்மாள் பாரளந்தார்வடிவமதை
மெத்தநடுநடுங்கி மேனியெல்லாம்வேர்வையிட
வந்துபணிந்தாளாம் மாயவனார்தன்பாதம்
பணிந்துஎழுந்திருந்து பாவையருமேதுசொல்வாள்
என்சாமியென்குருவே என்னுடையகர்த்தாவே
ஆண்டவரேநீரிருக்க அடியாட்குஎன்னகுறை
ஆறுதப்புநூறுபிழை அடியாள்யான்செய்ததெல்லாம்
அத்தனையும்நீர்பொறுப்பீர் ஆயர்பெருமாளே

பெருமாள் சொல்வது.

அப்போபெருமாளும் அருளாளரேதுசொல்வார்
மலரீற்பிறந்ததொரு வாழ்வரசியல்லியரே
காரிழையாள்மாது கலந்தாரிநாயகியை
தீயிலேதள்ளுதற்கு துரியோதனன்நினைத்தான்
வேதியரையழையுமென்றான் வேந்தன்கபடனவன்
அப்போதுவேதியர்போல் அவ்விடம்யான்போனேன்
கலக்கமனதுடைய கபடன்துரியனுக்கு
ஆரூடமொன்றுசொன்னேன் அறிவழிந்தமன்னனுக்கு
அஸ்தநட்சத்திரம் ஆகாதநாளென்றேன்

கேட்டையுமூலமுங் கெடுதிநாளென்றுசொன்னேன்
இன்றெட்டுநாளையி லிசைந்தநாளொன்றுசொன்னேன்
திங்கட்கிழமையது தசமிபுனர்பூசம்
அன்றையதினத்திலே அக்கினியைமூட்டுமென்றேன்
அப்படியேசெய்வதற்கு அரசனிருக்கிறானே
நீயென்னசொல்லுமென்றார் நிகரில்லாயெம்பெருமாள்
என்னாலேஎன்னவாகும் எம்பெருமாள் நீரேசொல்லும்
ஆனாலொருவயணம் அல்லியரேசொல்லுகிறேன்
உன்னைப்போல்பத்துபேரை உத்தமியைசோடித்து
நீபிடித்தசெங்கோலை நேரிழையாள்கைகொடுத்து
ஸ்ரீமந்தபழங்களை தேன்மொழியாள்கைகொடுத்து
புளியாறுவரவிடுவாய் பொற்கொடியாள் நாயகியே
அதுசமயம்நான்பார்த்து ஆகாயமார்க்கத்திலே
ஊசிபோல்மின்னல்மின்னி ஒருநொடியில்மழைசொரிவே
ன், அம்மையாறுநீர்பெருகி அணைத்துவிடுமக்கினியை
அரசனதுசேனையெல்லாம் ஆற்றில்மிதப்பார்கள்
அதுசமயம்நீபார்த்து அனுப்பிவிடுந்தாதிகளை
ஆயுதங்களைக்கைகொடுத்து அனுப்பிவிடுந்தாதிகளை
சேனைகளையெல்லாஞ் சிதரவடித்துவிடு
என்றுசொல்லிமாயவனா ரெழுந்திருந்தாரப்போது
அப்படியேநல்லதென்று அல்லியருந்தானிருந்தாள்.

வேதியர் அத்திபுரம் வந்துசேர்ந்தது.

அடியளந்தயெம்பெருமாள் ஆதிமூலமாயவனார்
மதுராபுரிகடந்து வையைவளநாடுவிட்டு
காடுசெடிகடந்து கானாறுதான்துலைந்து
பொல்லாவனங்கடந்து போய்ச்சேர்ந்தாரத்திபுரம்
தேசத்தழகுமன்னன் துரியோதனனிடத்தில்
வந்துவிட்டார்வேதியரும் மாபாவியம்பலத்தில்

துரியோதிரன் சொல்லுவது.

கண்டானேவேதியனை கபடன்துரியோதனன்
ஐயாபெரியவரே அன்பானவேதியரே
முப்பத்திரண்டறமுஞ் செய்தேன்காண்வேதியரே
ஆனைகுதிரை அபாரியாய்நான்கொடுத்தேன்
கோதானம்பூதானம் கொடுத்தேன்காண்வேதியரே
ஆற்றங்கரையோரமது அக்கினியைவளர்த்திவிட்டேன்

எட்டுநாளாகவே எரிகிறதே அக்கினிதான்
இன்றேடே கெடுவாச்சு எழிலானவேதியரே
ஆச்சுதுநாளென்றான் அரவக்கொடிவேந்தன்
அட்சணமாயவனும் அவன்சேதிதான்கேட்டு
சரியாச்சுமன்னவனே தனஞ்சயனேராசேந்திரா
உன்மனதுபடிசெய்ய மறையவனுருரைக்கையிலே

துரியோதிரன் கர்னரையழைத்துச் சொல்வது.

தேசத்தழகுமன்னன் திரியோதிரப்பெருமான்
ஆரடாதூதுவனே அழையடாகர்னரைத்தான்
அவ்வசனங்கேட்டு அத்தூதனோடிவந்து
காசிலிவர்னர் கர்னரைத்தானழைக்க
அம்பலக்கச்சேரி அதிகர்னர்வந்துநின்றார்
கர்னரைத்தான்பார்த்து கபடனவனேதுசொல்வான்
கேளுங்காண்கர்னரே கெடுவுகளுஞ்சரியாச்சு
தாரார்குழலே தணலுக்கழையுமென்றான்
கடுகவரவழையும் கலந்தாரிநாயகத்தை
என்றுமவனுரைக்க ஏங்கிமனந்தளர்ந்து
வேதியரைக்கண்டார் வேந்தனதிகருணர்
கண்சைகைகாட்டினார் கரியமாலெம்பெருமாள்

கர்னர் கலந்தாரியிடம் வருவது.

அந்ததொருகண்சிமிட்டை அதிகர்னர்தான்பார்த்து
கடுகியெழுந்தார் கன்னியின்றன்கோட்டைக்கு
கலந்தாரியரண்மனைக்கு கட்டழகனுட்புகுந்து
தாதிமார்கண்டு தையலர்களோடிவந்து
காலுக்குநீர்வார்த்தார் கவரியாறவீசினார்
பாதத்தில்தான்பணிந்தார் பாவையழகியற்கு
தன்னைப்பணிந்த தாதிமுகம்நோக்கி
கலந்தாரிநாயகத்தை கடுகவழையுமென்றார்
ஓடிவந்தாளுட்புகுந்தா ளுத்தமிக்குதெண்டனிட்டு
ஆச்சியரேயும்மை அருமையாய்தான்வளர்த்த
ஊட்டிவளர்த்தெடுத்த வுன்னம்மான்வந்தார்காண்
அழைத்துவரச்சொன்னார் அம்மானதிகருணர்
அவ்வசனங்கேட்டு அரிவையெழுந்திருந்து
பூஞ்சிலம்புதண்டை பொன்னுபரணமின்ன
காரிழையாள்மாது கலந்தாரிநாயகமும்

மாயவனார்சீர்பாதம் வணங்கியே நமஸ்கரித்தாள்
வாழ்வீர்வளருவீர் மண்ணூழிகாலமட்டும்
கற்பதித்ததூண்போல் கலங்காதரசாள்வீர்
எழுந்திருமென்று இன்பமுடன்தான்வாழ்த்த
எங்கேவந்தீரெங்கேவந்தீ ரெனவௌர்க்குமாமாவே
வந்தவிபரத்தை மாமாவேசொல்லுமென்றாள்

கர்னர் சொல்வது.

தேசத்தழகுமன்னன் திரியோதிரப்பெருமான்
அக்கினிவளர்த்தி அனல்பாயவுங்களம்மான்
வரவழைத்தாரும்மை மாதுகருங்குழலே
சகலோருங்காண சந்தடிநெருங்குது
வேதபிராமணரும் விளங்குகிறாரவ்விடத்தில்
சீக்கிரமாய்வாருமென்று சீரானவடையாளம்
கொடுத்தாரேகர்னர் கோதையவள்கைதனிலே
வாங்கினாளடையாளம் மலர்கரத்தைதானீட்டி
அரண்மனைதாதியர்கள் அனைவோரும்தான்பார்த்து
ஆச்சியரேயுமக்கு அமர்ந்ததுதீய்களௌன்பார்
அக்கினிக்கேநீபிறந்தாய் ஆரமுலையாளே
இதுதானோகண்டபலன் என்றழுதார்தாதியர்கள்

கலந்தாரி சொல்வது.

காரிமையாள்மாது கலந்தாரியேதுசொல்வாள்
அழுதகதொருபெண்டுகளே ஆரணங்குகையமர்த்தி
கேளுங்கள்தாதிகளே கிளிமொழியாளௌன்வசனம்
கணவன்றனைச்சேர்ந்த கன்னியருமெய்யானால்
சோரத்தனமில்லாமல் சுந்தரனேநிஜமானால்
அக்கினிக்குதப்புவேன் அஷ்டதிசைதானறிய
இதுதானேஎன்னுடைய யிருதயத்துநிண்ணயங்கள்
எல்லோருமறியட்டும் ஏந்திழையாள்செய்தகுற்றம்
என்று-ஆற்றினாள்தாதியரை அல்லிமருமகளும்
ஸ்நானங்கள்செய்து செபதபங்கள்தான்முடித்து
சொக்கரைத்தானினைந்து திருநீறுதானணிந்து
மஞ்சள்துயிலுடுத்தி மடியில்வைத்தஅடையாளம்
கோடாலிமுடிசியிட்டு சூடமல்லிதானணிந்து
பட்டுப்பணிபூண்டு பதுமைபோலலங்கரித்து
தோழிமார்கூட்டஞ் சுற்றிலும்நெருங்கிவர

மாமனதிகருணர் மன்னன்படைநெருங்கிவர
காவலர்படைகளது கன்னியரைநெருங்கிவர
குடைகளிருபுரமும் கொம்பனையைநெருங்கிவர
தீக்குழிக்கு வருகிறது.

கோட்டையைவிட்டு கொம்பனையாள்வெளியானுள்
சந்திரனைக்காணுத தங்கைவெளிப்பட்டாளாம்
சூரியனைக்காணுத தோகைவெளிப்பட்டாளாம்
கால்பீலிகலகலென்ன கைவளையல்பளபளென்ன
நெற்றிசுற்றிநின்றிலங்க நீலவிழிமைதுலங்க
கோட்டைகடந்து கொத்தளமுந்தாண்டி
அம்பைக்கரையோரம் ஆரணங்குவருகையிலே
ஏறிட்டுப்பார்த்தார்கள் எங்குமகாஜெனங்கள்
கங்கைகரைகொள்ளாத கனமானசேனைத்திரள்
எங்கெங்கும்நிறைந்திருப்பார் எள்ளுவிழயிடமுமில்லை
அக்கினிபெருந்தணலும் ஆவிகள்பொருக்கிலையே
மெத்தப்பயந்தார்கள் மேனிநடுங்கிவிட
அக்கினிசுடராலே ஆற்றமுடிகூடவில்லை
தவித்துமிகப்போகுது தணலென்றபெருஞ்சுடரால்
அக்கினிச்சுடராலே அருந்தாகந்தானெடுத்து
ஆவலாய்வந்துநின்ருள் ஆற்றுநீர்தான்குடிக்க
அந்தவொருவேளையிலே ஆயனுந்தான்பார்த்து
மாய்கைவொன்றுசெய்தார் மாயன்பெருமாளும்
ஊசிபோல்மின்னி உரிபோலேகாலிரங்கி
இருண்டதுமேகம் எங்குங்கறுகறுத்து
ஆனைதும்பிபோலே அமர்ந்துவரும்சலம்போலே
சோனைமழைமாரி சொரியுது அந்நேரம்

அல்லி புளியாறு அனுப்புதல்.

ஆறுஜலமோடுது அணிமதுரைநாயகியாள்
எம்பெருமாள்சேதி இதுதான்தருணமென்று
மதுரைபெருமாளும் வைகையிலேவந்துநின்று
தவனப்புளிகளை தையல்கறைச்சிவிட்டாள்
இச்சையாய்புளிப்பு இனிபுளிப்புதோன்றையிலே
அள்ளிக்குடித்தாளாம் அங்கமதுதான்குளிர
தெளிந்தமுகமானுள் திருவழகிபூமாது
கார்னர்திருமுகங்கள் களையழகுதான்பூண்டார்

இந்தரகசியங்கள் யாவருக்குந்தெரியாது
அந்தசமயத்தில் அமர்ந்துமழைபொழிகையிலே
தேசத்தழகன் திரியோதிரன்பார்த்து
கடுகவரச்சொல்லுமென்றான் கலந்தாரிநாயகத்தை
அப்போயிளம்பிறையா ளதுக்கொன்றுமஞ்சாமல்
அச்சுதரைத்தானினைந்து அரிவையவள்முகம்மலர்ந்து
ஆற்றுநீர்தான்பொசித்து அருந்தாகந்தானருந்தி
அக்கினிகுழியருகே அரிவையரைக்கொண்டுவந்தார்
தீக்குழிதேடி தேன்மொழியாள்வந்துநின்றாள்
கண்டார்களெல்லோரும் கன்னியவள்நிற்கையிலே
அந்தசமயத்தில் ஆயர்கிருபையினால்
பெரியாறுபெருகிறது பெருவெள்ளம்வோடுகுது
அம்மைப்பெருகி அலைமோதும்வேளையிலே

அல்லி பெண்களை யனுப்புதல்.

மதுரைவளநாட்டியவள் மயிலணையாளல்லியரும்
எம்பெருமாள்சொன்ன எண்ணத்தைதானினைந்து
இதுதான்சமயம் இப்போதேதள்ளிடுவார்
ஆரடிதாதியரே அதிகாரிசெங்கமலம்
இதுதான்சமயம் ஏந்திழையேவாடியென்றாள்
அவள்-பொல்லாதநீலி வல்லாணமைகாரியவள்
ஏனம்மாவென்று ஏந்திழையாள்வந்துநின்று
சிங்காரஞ்செய்தாள் செங்கமலத்தாதியரை
மகுடமுடிசூட்டி மதாணிப்பதக்கமிட்டு
வச்சிரகபாயணிந்து மாணிக்கமாலையிட்டு
காலில்விருதுகட்டி கண்டாமணிதரித்து
ஆழியுஞ்செங்கோலும் அவள்கையில்தான்கொடுத்து
பாண்டியவள்வாழும் பரிசைகளுந்தான்கொடுத்து
மூதாரிக்கையிலிட்டு முதுகிலேதானணிந்து
அல்லியரைப்போல அவளையலங்கரித்து
அஞ்சாதேபெண்ணரசே அல்லியரும்நானென்று
என்பெயரைநீதரித்து தட்சணமேநீபோயி
ஆரடாஎன்மருமகளை இத்தீயிற்றள்ளுபவன்
கொடுக்கிறேன்பூசை குடுமிதலையுருள
அதிகாரிநானிருக்க ஆரடாதள்ளுபவன்
இந்தப்படியாகவே எச்சரித்துநீபோயி

அந்தப்படியாகவே அவன்படையில்போய்விழுந்தால்
அசட்டையாய் நிற்பார்கள் அல்லியிவளென்று
அடையாளந்தான்கொடுத்து அல்லித்திருமகனுர்
சேர்ந்துயிருந்ததுவும் திருவாழிகொடுத்ததுவும்
வந்ததும்போனதுவும் வயணமாய் நீயுறைத்து
காரிழையாள்மாது கலந்தாரி நாயகிக்கு
மாதாங்கியழைத்துப்போய் கன்னியிடகோட்டையிலே
அரண்மனையிற்கொண்டுபோய் ஆரணங்குபெண்மயிலே
இச்சைகள்தீர்ந்து மனதைமகிழவைத்து
இன்னுஞ்சிலநா ளேந்திழையேசென்றபின்பு
பாண்டவர்வந்து பதியமர்ந்தபிற்பாடு
வெற்றிமதயானை வீமா துதண்டாலே
நூற்றுவர்பூமுடியை நொடியில்துணித்தபின்பு
அழைத்துகொண்டுபோரே மஞ்சாதேயென்றுசொல்லி
தேறுதலைசொல்லி செங்கமலம்வாருமென்ருள்

செங்கமலம் வருகிறது.

அப்படியே நல்லதென்று அரிவையிவள்சொல்லையிலே
பயணங்களானுள் பைங்கிளியாள்செங்கமலம்
ஆயுதவரிசையுடன் அநேகம்பேர் துணையானுர்
பாங்குகளும்பல்லயமும் பரிசைகளும்கத்திகளும்
ஈட்டிகளும்அம்புகளும் எதிர்த்துகுத்துஞ்சூலங்களும்
வளைதடியுஞ்சக்கரமும் மங்கையர்கைபிடித்து
இவ்வளவுபேர்களையும் ஏந்திழைக்குத்துணையாக்கி
மருமகட்குதானுகந்த வரிசைகளுந்தான்கொடுத்து
ஆற்றிலேதெப்பங்கட்டி அதன்பேரிகைதானேற்றி
போய்வாங்களென்றுசொல்லி பொற்கொடியுமனுப்பிவைத்
தாள், தெப்பமரத்தின்மேல் தேன்மொழிமார்தானேறி
சகலவிருதுடனே தையலர்கள்வாரார்கள்
கரைபுரண்டவெள்ளம் கனத்தாறுமுன்னேட
அந்தசமயத்தில் அச்சுதரும்பார்த்திருந்தார்

கலந்தாரி தீயைச்சுற்றிவருவது.

அக்கினிமுன்வந்துநின்ருள் அரிவைகலந்தாரி
சுற்றிவரச்சொன்ஞர்கள் தோகையிளமயிலை
தலைமேற்கரங்குவித்து தையலருஞ்சுற்றிவந்தாள்

தள்ளுமென்றான் தீயில் சர்ப்பக்கொடிவேந்தன்
விழப்போகுஞ்சமயத்தில் வெள்ளம்புரண்டதுவே
ஆறுபெருகி அக்கினியைத்தணித்தது.
ஆயர்கிருபையினால் ஆறுபுரண்டதுவே
ஆகாயகெங்கை அலைமோதிவந்ததுவே
புரண்டோடிவெள்ளம் பெருந்தணல்விழுந்ததுவே
கட்டையுந்தீயுங் கனத்துமிதந்ததுகாண்
அக்கினிதணிந்தது ஆறுவெள்ளமோடுதுகாண்
படர்ந்ததேவெள்ளம் பார்மன்னர்மீதிலேதான்
சிலபேர்மிதந்தார்கள் சிலபேர்முறிந்தார்கள்
வேடிக்கைபார்த்தவர் மிதக்கிறாரம்பையிலே
உயிரிழந்துபோனவரும் ஓடியேபோனவரும்
கரையேறிப்போனவரும் காலோட்டம்பிடித்தவரும்
சிதறிவிழுவாரும் சீவனுயிர்போனவரும்
அலறிவிழுந்தவரும் அக்கரையேபோனவரும்
திக்குத்தெரியாமல் திசைகெட்டுப்போனவரும்
அறியாமல்வந்தோம் ஆற்றுக்கிரையாக
தெரியாமல்வந்தோம் சீவன்பறிகொடுக்க
ஒருவர்போனவழி ஒருவருக்குந்தெரியாமல்
மூலைக்குமூலை முறித்துகெட்டுஓடுகிறார்
அரிவைகலந்தாரி அசையாப்பதுமையைப்போல்
ஆயன்கிருபையினால் அவ்விடத்தில்தானிருந்தாள்
கைகுவித்தபடியாக கன்னியருந்தானிருந்தாள்
ஆறுபெருகிஜலம் அதனைச்சுற்றிஓடுகுதாம்
கர்னரும்நின்றிருந்தார் கனத்தபெருவாற்றில்
மற்றவர்களெல்லாம் மாண்டதும்பிழைத்ததுவும்
மூர்ச்சைகளானதுவும் மெய்மறந்துபோனவரும்
களைப்பட்டுப்போனவரும் கண்பிதுங்கிப்போனவரும்
திகிலடைந்துபோனவர்கள் திசைமாறியோடுகிறார்
அந்தச்சமயத்தில் ஆற்றங்கரையோரம்
பெண்கள்படைநெருங்க பேரிகைவாத்தியங்கள்
முரசுகளடிபடவே முறையமிட்டபேரிகைகள்
டங்காரமுழங்கவும் தவுண்டுமல்லாரிகொட்ட
சச்சரிகைவீணைகளுந் தாக்குமுரசறைய
அடிபடுதுராயபேரி அடிவானத்திடிபோல

கோடைகாலத்திடிபோல தனிமதுரைபெண்களெல்லாம்
ஆராடாயென்னுடைய அருவமருமகளை
இந்திரனார்தேவியரை என்னுடையகண்மணியை
ஆசைமருமகளை அக்கினியிற்றள்ளுபவன்
அவன்-ஆண்மையும்வீரியமும் அறிகிறேன்பாரென்று
தெப்பமரத்தைவிட்டு தேன்மொழிமார்தானிறங்கி
படைகளுடனேபெண்கள் பதறிவிழுந்தார்கள்
ஓடுகிறசெனங்களை ஒருமிக்கத்துரத்துகிறார்
கொக்குத்திரளிலே ராஜாளிபுகுந்தாப்போல்
புலியின்கூட்டத்தில் போய்விழுந்தசிங்கம்போல்
ஆனைபடைக்கஞ்சாத அல்லியின்றன்தாதியர்கள்
பாலாவும்பரிசைகளும் பாங்குபிடியம்புகளும்
ஈட்டிசுழட்டுவதும் எகிறிக்குதிப்பதுவும்
பாலாதிருப்பதுவும் படையிலேபோவதுவும்
பாங்குசுழட்டுவதும் பக்கத்தில்குத்துவதும்
கத்திசுழட்டுவதும் கவ்விவிழுவதும்
சிறுத்தைபோலாட்டுவதும் சேரவந்துகுத்துவதும்
எகிறிக்குதிக்கிறதும் எச்சரித்துமாட்டுவதும்
இந்தப்படியாக இசைந்துமேசேனையெல்லாம்
மூலைக்குமூலை முறிந்ததேசேனையெல்லாம்
இதுயென்னவதிசயம் இவர்கள்யார்பெண்படைகள்
மதுரைத்துரைச்சியவள் மயிலணையாள்வந்துவிட்டாள்
இனிபிழைக்கப்போரோமோ இவள்கையில்மாண்டிடுவோ
ம், தாட்சண்ணியமெண்ணுளே தயவுகள்பாராளே
எப்படியென்றுசொல்லி இரடிவிழுவாரும்
ஆயுதத்தால்காயம்பட்டு அலறிவிழுவாரும்
ஆற்றுக்குதப்பியே ஆருயிர்பிழைத்துவந்தோம்
கூற்றுவன்போலே கொல்லவந்தார்பெண்களென்று
பல்லைத்திறப்பார்கள் படுக்கையாய்விழுவார்கள்
முன்னேடுகிறவன்பின்னே முட்டுவானிவன்றலையை
ஓடிநின்றுபார்ப்பார்கள் ஒருவர்பின்னே நுழைவார்கள்
கால்மாடுதலைமாடாய் கதறிவிழுவார்கள்
இந்தப்படியாக இறைஞ்சுதுசேனையெல்லாம்
அல்லியைப்போல அதிகாரிசெங்கமலம்
மன்னவராய்ப்பார்த்து மாட்டுகிறாள் நல்லதெப்பை

சின்னங்களானார் துரியோதனன்படைகள்
அப்போதுமாயவனார் அச்சுதனார்கோபாலர்
அரியாதுபோல ஆனந்தமாகஐயர்
குஞ்சிரிப்புகொண்டு கோபாலர்பார்த்திருந்து
அங்குதேசாதிபதி அதிவீரன்கர்னனும்
ஆருபெருகினதும் அல்லிப்பெண்கள்சொல்லுகிறதும்
அதிசயம்போலே அதிவீரன்கர்னனும்
கட்டார்கருங்குழலாள் கலந்தாரிநாயகியும்
சிரித்தமுகத்துடனே தேன்மொழியும்பார்த்திருந்தாள்
பெண்கள்திறமையையும் பூரிப்பாய்நகைத்திருந்தாள்
என்னை-அரசாளும்நாயகியாள் ஆதரிக்கவந்தாரோ
என்றுமனம்பூரித்து ஏந்திழையும்பார்த்திருந்தாள்

திரியோதிரன் எண்ணமிட்டது.

தேசத்தழகுமன்னன் துரியோதனப்பெருமான்
எண்ணுவான்கோடிசிந்தை இராசன்கபடனவன்
அக்கினிவளர்ந்ததும் அவலமாய்ப்போனதுவும்
வெள்ளம்பிரண்டு வெகுபேர்மிதந்ததுவும்
சகிக்கமுடிகொள்ளாமல் தானோடிவந்ததுவும்
மதுரைப்படைபெண்கள் வந்துமிகச்சாடுவதும்
வெட்கங்கெட்டுநின்றதுவும் வேந்தர்களோடினதும்
சின்னங்கள்பட்டதுவுஞ் சேனைகளோடினதும்
விருதாவாய்திரவியங்கள் வீண்செலவானதுவும்
மங்கைகலந்தாரி மனங்கலங்கிநிற்பதுவும்
திரவியம்போனதல்லால் சின்னங்கள்பட்டதுவும்
கிழப்பாப்பான்சொன்ன கெடுதலைவார்த்தைகளும்
அடையாளங்கொண்டிருந்தும் அக்கினிவளர்த்தினதும்
இதுகளெல்லாம்பார்த்து ஏங்கிமனங்குன்றி
பெருமூச்சைவிட்டான் போனதுரியனவன்
குன்றினான்துரியனவன் குருடன்திருமகனார்
அறியாமற்சொய்தோம் அல்லிமருமகளை
அசிக்கங்கள்வந்துதே இந்திரன்தேவியினால்
மிதமிஞ்சிப்போயிற்றே மெல்லியவளஞ்சாளே
பாராமற்போனோமே பவுசுகுலைந்துபோனோம்
கண்டார்நகைக்க கனத்தவுடலெடுத்தேன்

பார்த்தோர்நகைக்க பரிகாசமாச்சுதென்று
குறியாகப்பார்த்தான் தோகையர்திருவழகை
அல்லியவளல்ல அதிகாரம்பெற்றுவந்தாள்
அல்லியனுமதியாமல் அடையாளம்பெற்றுவந்தாள்
முத்திரையுஞ்செங்கோலும் முடியுந்தரித்துவந்தாள்
இவள்கையில்மாண்டவர்கள் எண்ணத்தொலையாது
அவள்வந்தாளாமானால் யார்தப்பப்போறார்கள்
வெள்ளாட்டிகைதனிலே வெட்கங்கள்கெட்டோமே
தாதியவள்கையில் தலையிரக்கமானோமே
தாதியரைத்தான்வணங்க தலைவிதியோயெந்தனுக்கு
ஆரைகொண்டுமன்னிப்போம் அந்நீதமாய்மாளுகுதே

துரியோதனனுக்கு சொல்வது.

என்றுதிரியோதிரனும் இருதயந்தான்கலங்கி
மன்னர்கருணரை வாவென்றுதானழைத்தான்
கர்னர்பெருமாளும் கடுகெனவேவந்துநின்றார்
கர்னர்முகம்நோக்கி கப்டனுமேதுசொல்வான்
நீர்-சொன்னதுமெய்யாச்சு சூதாய்முடிநததுகாண்
அடையாளக்குறிப்பைநான் ஆராய்ந்துபார்க்காமல்
வீண்பழியுன்மீதில் விருதாவாய்ச்சுமத்திவைத்தேன்
இப்போ-அல்லிமுடிதரித்து ஆழிச்செங்கோல்கைபிடித்து
அடையாளந்தன்னுடனே அதிகாரம்பெற்றுவந்தாள்
இப்போதெரிந்தது இந்திரனார்வந்தாரென்று
விருதாவாய்ப்பெண்கள் வீணைகச்சொல்லுகிறார்
ஏன்நமக்குபழிபாவம் ஏந்திழைமார்தன்னுடனே
வந்ததொருபெண்களுக்கு வயணமாநீருரைத்து
சமாதானஞ்செய்து சாந்தகுணமாக்கி
கோபத்தையடக்கி கொம்பனைமார்தன்னுடனே
அல்லிமருமகளை அரிவையர்கள்தன்னுடனே
கூட்டியுறவாக்கி கோட்டையிலேகொண்டுசென்று
செல்வமுஞ்சீரும் சிறப்புகளுந்தான்செய்து
அவர்கள்நடைபடிக்கு அன்புடனேநீர்செய்து
திட்டப்படுத்தும் சீர்கர்னர்மன்னவரே
போமென்றுசொல்லி போர்வேந்தன்தானடந்தான்

கர்னர் பெண்டுகளைக்கண்டது.

அப்போதுகர்னர் அதிகமனமகிழ்ந்து
அச்சுதரண்டையிலே அறிக்கையிட்டார்கர்னரவர்
இருவருங்கூடி எதிர்த்துவந்தபெண்கள்முன்னே
வந்தெதிரே நின்றார்கள் மங்கையர்கள்முன்னே
ஏறிட்டுப்பார்த்தார்கள் ஏந்திழையாள் தாதியவள்
மறையவர்கர்னருக்கு வணங்கியே தான்தொழுதாள்
வந்துபணிந்த மங்கையரைத்தான்வாழ்த்தி
பொறும்பொறும்கோபங்கள் பொற்கொடியேமாதரசே
பட்டால்தெரியும் பாரகுணமில்லாதார்
கெட்டால்தெரியாமல் யாரோயெவரோவென்று
தெரியாமல்செய்தான் திரியோதனப்பெருமான்
ஆழிக்குஞ்செங்கோற்கும் அதற்காகப்பொறுத்தருளும்
வாருங்கள் தாதியென்று மன்னவர்கள் தானழைக்க
கோபந்தணிந்து கொம்பனையாள் செங்கமலம்
குளிர்ந்தமுகமாகிக் கொம்பனைமார் தானடந்தார்
கர்னருமாயவருங் கட்டழகிமாரெல்லோரும்
பூஞ்சிலம்புதன்னுடைய பொற்கொடியாள்கலந்தாரி
அண்டையில்வந்தார்கள் அனைவருமப்போது
ஆயருக்குங்கர்னருக்கு மடிவணங்கிதான்தொழுதாள்
அடிபணிந்தமங்கையரை ஆயனுந்தான்வாழ்த்தி
கற்புமிகுந்தவளே கன்னியரே நீர்வாழி
வாழ்த்திவிடைகொடுத்தார் மாயவனெம்பெருமாள்
வந்ததொருபெண்களெல்லாம் மயிலணைக்குதெண்டனிட்
டார், அப்போதுசெங்கமலம் அல்லிமருமகளை.
நாடாளுங்கன்னியவள் நாயகியாளென்றுசொல்லி
கலந்தாரிநாயகிக்கு கட்டழகிதெண்டனிட்டாள்
செங்கமலத்தாதியரை சீர்பெறவேவாழ்த்தி
ஆலிங்கனஞ்செய்து அல்லிமருமகளும்

கலந்தாரி கோட்டைக்கு அழைத்துவருகிறது.

எல்லோருமாய்க்கூடி இசைந்துநடந்தார்கள்
கன்னியதுகோட்டைக்கு கடுகிநடந்தார்கள்
காவலுக்குள் நுழைந்தார் கலந்தாரிகோட்டையிலே
கர்னர்திருமகனுங் கண்டுதொழுதானும்

எல்லோருங்கூடி ஏந்திழையாள்கோட்டையிலே
உள்ளே நுழைந்தார்கள் உட்கட்டரண்மனையில்
தாயந்ததுற்சடையாள் தையலரும்வந்துவிட்டாள்
பேரால்மிகுந்த பெருந்திருவாள் நாயகியும்
அனைவரும்வந்தார்கள் அன்புடனேவாழ்த்தி
ஆலமெடுத்தார்கள் ஐந்நூறுதாதியர்கள்
திருஷ்டிகழித்தார்கள் செல்வதியாள்மங்கையற்கு
அவரவர்களாசனத்தில் அமர்ந்தார்களெல்லோரும்
ஆயன்பெருமாளும் அமர்ந்தார்சிங்காதனத்தில்

ஸ்ரீ மந்தஞ் செய்தது.

மதுரையிலேதானிருந்து வந்தவந்தபெண்களெல்லாம்
ஸ்ரீமந்தஞ்செய்வதற்கு சிந்தையிலேதானெண்ணி
கட்டார்கருங்குழலாள் கன்னியரையலங்கரித்து
பொன்சரிகைசேலையது பூவையரையலங்கரித்து
ஆடையணிந்து ஆபரணமேற்சாத்தி
சாந்துசவ்வாதுகளை சரீரத்தில்தான்பூசி
களபகஸ்தூரிகளை கலந்துமிகப்பூசி
மங்களகரமாக மயிலணையையலங்கரித்து
பேடைமயிலணையாள் பெண்மயிலைக்குந்தவைத்து
மாமியார்வரிசையென்று மசக்கைபண்டங்களெல்லாம்
வரிசையுடன்தான்கொடுத்து மயிலணைமாரந்நேரம்
அல்லிதிருமுடியும் அழுத்தியசெங்கோலும்
மோர்பெற்றமுத்திரையும் மொய்குழலாளண்டைவந்து
வந்துபணிந்தார்கள் வளநாடுமங்கையற்கு
பேரிகையறைந்தார்கள் பெரியடங்காதான்முழங்க
மல்லரிதாளம் மத்தளந்துத்தாரி
நாகசுரம்புள்ளாங்குழல் நலமுடனேதானூத
ஆலங்கள்தான்சுழட்ட அரிவையிளமங்கையற்கு
சேஷைகள்தானிறைக்க சந்தனப்பொடியிறைக்க
குந்தாணிமேலே, கொம்பனையை நிற்கவைத்து
பட்டுதிரைவளர்த்தி பைங்கிளியைக்குந்தவைத்து
ஆலஞ்சுழட்டி அட்சதைப்பொட்டுமிட்டு
சாந்துதிலர்தமிட்டு சந்தனமும்மேற்பூசி
பண்டுபலாதிகள் பழவர்க்கம்ருசிவர்க்கமும்

கொச்சிமலைத்தேனும் குடகுமலைத்தேனும்
சீனிச்சருக்கரையும் சிவந்தபலாச்சுளையும்
வாழைகனிருசியும் மாம்பழமும்சர்க்கரையும்
மற்றபலகாரமும் வகையானயினிப்புளிப்பும்
கொச்சிதமர்த்தங் கொய்யாக்கனிமுதலாம்
வடைசுகியன்பணியாரம் அதிரசந்தோசையுடன்
அப்பளம்பணியாரம் ஆனபசுவுநெய்யும்
ஏற்றியிறக்கி இன்பமுடனுண்ணவைத்து
உண்டுபசியாறி உத்தமியாள்மங்கையரும்
கையலம்பித்தானும் களிப்புடனேவாய்துடைத்து
கற்பூரத்தாம்பூலம் கனிவாய்க்குத்தான்கொடுத்து
சந்தனமும்புட்பமும் தையலர்க்குத்தான்கொடுத்தார்
மாயவனும்மன்னவனும் மற்றதொருபெண்களெல்லாம்
எல்லோரும்பசியாறி இன்பமுடன்தான்பொசித்து
கையலம்பிஎல்லவரும் கருணையுடன்தானமர்ந்தார்
பூசிடுஞ்சந்தனமும் புனுகுசவ்வாதணிந்து
புட்பத்தினற்செண்டு போதவேதான்முகந்து
சமுக்காளந்தனிலிருந்து தாம்பூலந்தான்தரித்து
சந்தோஷமாகிச் சகலருமந்நேரம்
சீமந்தமுடிந்தபின்பு சிலவுவிடைவாங்கி
அவரவர்கள்மாளிகைக்கு ஆனவோரும்போனார்கள்
காரிழையாள்மாது கலந்தாரிநாயகியும்
மாயனதுசீர்பாதம் வணங்கிநமஸ்கரித்து
வாழ்த்திவிடைகொடுத்து மங்கையிளமயிலே
புத்திரனைப்பெற்று புகழ்பெறவேவாழ்ந்திடுவாய்

பெருமாள் வந்துவிட்டது.

வாள்விசயன்புத்திரற்கு மனையாளாய்வந்தவளாய்
போகவிடைதாருமென்றார் பெருமாள்நடந்துவிட்டார்
துவாரகாபுரிதேடி சுவாமியும்வந்துவிட்டார்
மதுராபுரிபெண்களும மயிலனைமார்தாதிகளும்
சிலதுநாளவ்விடத்தில் தேன்மொழிமாரெல்லவரும்

கலந்தாரி புத்திரனைப்பெற்றது.

காரிழையாள்மாது கலந்தாரிநாயகியும்
பத்துதிங்களானவுடன் பாலகனைப்பெற்றெடுத்தாள்

பாலகன்ருன்பெறவே பாண்டியர்கள் தன்மகட்கு
அறிக்கையிட்டார் தூதுவனூர் அல்லிமலர் நாயகிக்கு
செல்வம்பிறந்ததென்று சீராகதொட்டில்களும்
அன்னவுஞ்சல்தொட்டில்களும் அழகுடனே தானனுப்பி
பாட்டனூர்தன்பேரை பாலனுக்குத்தான்றறித்து
அனுப்பியேவைத்தாள் அல்லிமலர்க்குழலாள்
வந்ததொருகட்டிலிலே பாலகனைத்தான்வளர்த்தி
சித்திரவில்பேரனவன் சின்ன அருச்சுனனூர்
என்றுதிருநாமம் இட்டாரேபாலனுக்கும்
அழகுடனே தானிருந்தான் அல்லிமகனும்
மதுராபுரிப்பெண்கள் மயிலனைமார்யாவர்களும்
அம்மா நீ அஞ்சாதே அரசாளும்பாண்டவர்கள்
காடுரைந்தபாண்டவர்கள் நாடாளவருவார்கள்
ஐவர்வந்தபின்பு அமருவாய்தென்மதுரை
போகவிடைதாருமென்று போற்றியடிபணிய
அப்படியேசம்மதித்து அனுப்பிவிடைகொடுத்து
நடந்தார்கள்தென்மதுரை நாயகிமார்பெண்களங்கே
தேனுமதுரையது தென்மதுரைவோடிவந்தார்
அல்லிமலர் நாயகிக்கு அடிவணங்கிதெண்டனிட்டார்
எழுந்திருமென்று ஏந்திழையாள்வாழ்த்த
போனதுவும்வந்ததுவும் புதுமையுஞ்சொன்னூர்கள்
கேட்டுமனமகிழ்ந்தாள் கிளிமொழியாளல்லியரும்
காரிழையாள்மாது கலந்தாரி நாயகியும்
புத்திரனைப்பெற்று புகழ்ச்சியாய்வாழ்ந்திருந்தாள்
மாமனதிகர்னர் வரப்போகத்தானிருந்தார்
விசாரணைசெய்து விசனங்களில்லாமல்
ஆதரித்துத்தானிருந்தார் அம்மானதிகர்னர்
புலந்திரனூர்தன்கதையை பூதலத்தில்கேட்டவர்கள்
கேட்டவர்கள்யாவர்களும் கீர்த்தியுடன் தான்வாழ்க
ஊழூழியென்று வுலகத்திலுள்ளவர்கள்
வாழிவாழியென்று வரமளித்தாரீஸ்பரனூர்

புலந்திரன் களவுமாலை முற்றிற்று.